கல்கி
KALKI 13-7-80
·90 காசு



நிகரில்லா வலிமைக்கு—ஏலே லோ
நிர்லான் வலையிருக்கு—லேசுடா லேசு,
நீடித்த உழைப்புக்கு—ஏலே லோ
நிர்லான் வலையிருக்கு—வீசுடா வீசு !



நிர்லான்

நைலான் மீன்பிடி வலை மணிக் கயிறு

நிர்லான் ஸிந்தெடிக் ஃபைபர்ஸ் & கெமிக்கல்ஸ் லிட்.,

பதிவு அலுவலகம்:
"நிர்லான் ஹவுஸ்"
254—B, டாக்டர் அன்னி பெஸண்ட் ரோடு,
பம்பாய்-400 025

சென்னை கிளை:
300, மோப்ரேஸ் ரோடு
சென்னை—600 018

லின்டாஸ்-NIR-12-203 TM



சஞ்சய்:

1. முடிவும் ஆரம்பமும்

கி. கஸ்தூரிரங்கன்

ஜூன் 23ந் தேதி. திங்கட்கிழமை. காலை 7 மணி. இன்னொரு உக்கிரமான கோடை வெய்யில் நாளின் துவக்கம். இரண்டொரு நாளில் மழை வரும் என்று வானிலை அதிகாரிகள் கூறியிருந்தனர். அதற்கான அறிகுறிகள் எதையும் காணோம். வானம் மப்பு மந்தாரம் ஏதுமின்றி நிர்மலமாக இருந்தது.

காலை உணவை முடித்து எழுந்த சஞ்சய் காந்தி வானத்தைப் பார்த்துவிட்டு உற்சாகமாகக் கிளம்பினார்.

''மம்மி ஐயாம் ஆஃப்'' என்று அம்மா இருந்த அறை நோக்கிக் குரல் கொடுத்தார்.

''வாட்?''

''ஐயாம் ஆஃப். நான் போறேன்.''

அடுத்த நிமிடம் வெளியே மோட்டார் வண்டியின் உறுமல் கேட்டது. இந்திரா காந்தியின் முகத்தில் கவலை படர்ந்தது.

''புறப்பட்டுவிட்டானா'' என்று பணியாளைக் கேட்டார்.

''ஹாம்ஜீ'' என்றான் பணியாள் நேக்ராம்.

சஞ்சய் காந்தி விமானத் தளத்துக்கு விரைந்து கொண்டிருந்தார். புதிதாக அவருக்காகக் காத்திருந்த விமானம் அமெரிக்காவில் தயாரானது. பிட்ஸ் S2ஏ. இரண்டு பேர் பறக்கலாம். ஸ்டண்ட் வித்தை செய்து காட்டலாம்.

சஞ்சய் காந்திக்குப் பறப்பது என்றால் பிடிக்கும். ''எந்த விதமான கவலையும் மேலே போய் ஒரு சுற்றுச் சுற்றி விட்டு வந்தால் நீங்கிவிடும்'' என்று சொல்வார்.

ஆனால் இந்திரா காந்திக்கு எப்போதுமே பயம். மகன் விமானப் பயிற்சியில் தேர்ந்துவிட்டவர் என்றாலும் அபாயமான ஸ்டண்ட் வேலைகளில் ஈடுபடுவது ஒரு நாளைக்கு ஆபத்தில் போய் முடியும் என்பதை உணர்ந்திருந்தார். சஞ்சய் காந்தியின் விமானப் பறப்பு பற்றிப் பல வகையில் அவருக்கு எச்சரிக்கைகள் கிடைத்திருந்தன. சட்டங்களை மதிப்பதில்லை; வேண்டுமென்றே ஆபத்தில் தம்மை உள்ளாக்கிக் கொள்கிறார் என்று. இதுவரை மூன்று சிறிய விமானங்கள் சஞ்சய் பயிற்சிக்குப் பலியாகிவிட்டன. இரண்டொரு முறை தந்திக் கம்பங்களை, சிறிய இடைவெளியில் தவிர்த்திருக்கிறார்.

1976ல் முதலில் விமானப் பயிற்சியில் சஞ்சய் காந்தியை ஈடுபடுத்தியவர் யோகி



நிரேந்திர பிரம்மச்சாரி. அவருக்கு அமெரிக்கச் சீடர் ஒருவரிடமிருந்து வெகுமதியாகக் கிடைத்த சிறு விமானத்தில் சஞ்சயை கூட்டிப் போனார். அது முதற்கொண்டு சஞ்சய் காந்திக்கு விமானத்தைச் செலுத்துவது, அந்தர் பல்டி அடிப்பது முதலியவற்றில் அதிக ஈடுபாடு. இப்படி அப்படி என்று 500 மணிக்கு மேல் பறந்து அனுபவம் பெற்றுவிட்டார். எந்த வித அபாயமான நிலைமையையும் சமாளிக்க முடியும் என்ற தன்னம்பிக்கை, தைரியம் வந்துவிட்டது.

ஆனால் விமான நிலையத்தை நிர்வகிப்பவர்களுக்கு சஞ்சய் காந்தி வந்துவிட்டார் என்றால் வயிற்றில் நெருப்பு. சட்ட திட்டங்களை மதிப்பதில்லை. பாதுகாப்பு விதிமுறைகளை அனுசரிப்பதில்லை; எல்லாம் தம் இஷ்டப்படி நடக்க வேண்டும். மறுப்பவர்கள் தொலைந்தார்கள் என்ற அளவில் சஞ்சய் காந்தியின் போக்கு இருந்தது.

இப்போக்கைக் கண்டித்து சிவில் ஏவியேஷன் இலாகா நிர்வாகி டைரக்டர் ஜெனரல் ஏர் வைஸ் மார்ஷல் ஜே. ஜாகிர் மேலதிகாரிகளுக்குக் குறிப்பு அனுப்பியிருந்தார். விதிமுறைகளை அனுசரிக்காத பயிற்சி விமானிகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று எழுதியிருந்தார். அவர் யாரைக் குறிப்பிடுகிறார் என்று நன்றாகவே தெரிந்தது. அவருடைய ஆட்சேபணை பிரதமரின் பார்வைக்குப் போயிற்று. இந்திரா காந்தி மகனைக் கூப்பிட்டு அக்குறிப்பைப் படிக்கச் சொன்னார். மகனை எச்சரிப்பதாக இருக்கும் என்று நினைத்திருக்கலாம். ஆனால் சஞ்சய் காந்தி என்ன செய்தார்? ஜாகிரைப் பதவியிலிருந்து மாற்ற உத்தரவு போட்டார். அவருடைய இடத்தில் தமக்குப் பணிவாக இசைந்து நடக்கும் அதிகாரி ஒருவரைப் பொறுப்பாக்கினார்.

சஞ்சய் காந்தி பாதுகாப்பு விதிமுறைகளை அனுசரிக்க மறுக்கிறார் என்றதும் விமான இலாகா தன்னால் இயன்ற விமான பாதுகாப்பு முறைகளை மேற்கொண்டது. சஞ்சய் விமானம் பறக்கும் சமயத்தில் தீ அணைக்கும் வண்டி முதலிய வசதி எல்லாம் தயாராக வைக்கப்பட்டன. அவர் விமானத்தை எங்கே வேண்டுமானாலும் புல் வெளியில் கூட இறக்கலாம். உடனே அவரைப் போய்க் கவனித்து வசதி செய்து தரவேண்டும் என்று டில்லி சுற்றுப்புற விமான நிலைய சிப்பந்திகளை எச்சரித்து வைத்தனர்.

அப்படியும் சஞ்சய் காந்தியை ஆபத்திலிருந்து காப்பாற்ற முடியவில்லை. ''இந்த விமானம் புதிது. இது வேண்டாம். நீங்கள் பழக்கப்பட்ட புஷ்பக் விமானத்தையே ஓட்டுங்கள்'' என்று விமான நிலையப் பயிற்சியாளர் சொன்னதை சஞ்சய் காதில் போட்டுக்கொள்ளவில்லை.

''நோ. இன்றைக்கு சிவப்புப் பட்சியின் நாள்'' என்று சொல்லிவிட்டுச் சிவப்பு பெயின்ட் அடித்த பிட்ஸ் விமானத்தில் ஏறிக் கொண்டார். துணைக்கு விருப்பமில்லாமலே கட்டாயப்படுத்தி அழைத்து வந்த காப்டன் சுபாஷ் சாக்ஸேனா நீண்ட அனுபவம் பெற்ற பயிற்சியாளர்தாம். ஆனால் பிட்ஸ் விமானத்தை அவர் ஓட்டினதில்லை. அந்த விமானமே இதுவரை 10 மணி நேரம்தான் பறந்தது. முதல் நாள் சஞ்சய் இரு தடவை அடுத்தடுத்து மேனகா காந்தியையும், ஆர். கே. தவானையும் அதில் ஏற்றிக் கொண்டு இரண்டு மணி நேரம் பறந்தார்.

பிட்ஸ் விமானம் பல்டி அடித்து மகிழக் கூடிய பொழுது போக்கு விமானம். மிகவும் சக்தியுள்ளது. ஆபத்தானது. நீண்ட நாள் விமானம் ஓட்டிப் பழகியவர்களே அதில் 'ஸ்டண்ட்' செய்து காட்ட முடியும்.

சஞ்சய் காந்தியிடம் பிட்ஸ் விமானம் செலுத்துவதற்கான லைசென்ஸ் இல்லை. 5000 அடிக்குக் கீழே ஸ்டண்ட் எல்லாம் செய்யக் கூடாது என்று விமானத்தில் எச்சரிக்கை எழுதி ஒட்டியிருந்ததையும் அவர் பொருட்படுத்தவில்லை.

ஒரு பெரிய வட்டம். பிரதமர் வீடு, அசோகா ஹோட்டல், பின்னர் குட்டிக்கரணம். ஒன்று, இரண்டு, மூன்று. விமானம் 1000 அடிக்கு இறங்கிவிட்டது. நான்காவது பல்டியில் தலை குப்புறச் செங்குத்தாக விழுந்து மரங்களிடையே சரிந்து தரையில் மோதி, உடைந்தது. காப்டன் சாக்ஸேனாவுக்கு முகம் சிதறிப்போய்விட்டது. சஞ்சய் காந்தியின் ஒரு பக்கம் மண்டையோடு பிளந்து மூளை வெளிவந்துவிட்டது... வீட்டிலிருந்து புறப்பட்ட ஒரு மணி நேரத்தில் வாழ்க்கை முடிந்துவிட்டது.

2

சஞ்சய் காந்தியின் 34 வயதின் கடைசி ஒரு மணி நேர நிகழ்ச்சிகள் அவருடைய வாழ்க்கையின் அடிப்படையைச் சித்திரித்துக் காட்டுவதாக அமைந்து விட்டன.

அவருடைய பாட்டனார் பிரதமர் ஜவாஹர்லால் நேருவுக்குச் சமமான கீர்த்தியைப் பெற்று, அவருடைய சமாதிக்கு அருகிலேயே இடம் பிடித்துக் கொண்ட சஞ்சய் போற்றுபவருக்கும் தூற்றுபவருக்கும் ஏற்ற பாத்திரமாக விளங்கினார்.

சஞ்சய் காந்தியின் அரசியல் பிரவேசம் 1975ல் அவருடைய 28ம் வயதில் மிகவும் சர்ச்சைக்குரிய விதத்தில் ஆரம்பித்தது. ஐந்து வருடங்களுக்குப் பின் ஒவ்வொரு அரசியல்வாதியும் வேண்டித் தவிக்கும் உச்ச கட்டப் புகழை எட்டிய நிலையில் அவர்



ஏன் ஏழைமை?

பால்கிவாலா அமெரிக்காவிலிருந்தபோது இந்தியாவிலிருந்து சென்ற பிரமுகர்களை அங்குள்ளவர்களுக்கு அறிமுகப் படுத்தியபோது அவர்கள் கேட்டார்கள்: ''இவ்வளவு அறிஞர்களும், தொழில்நுட்ப வல்லுனர்களும் இருந்தும் இந்தியா ஏன் இன்னும் ஏழைமை நாடாகவே உள்ளது?'' பால்கிவாலா அவர்களுக்கு அளித்த பதில்: ''ஏனென்றால் இந்தியாவில் அரசியல்வாதிகளும் இருக்கிறார்களே!''

—பால்கிவாலா உரையில் கேட்டவர்: என். எஸ். மூர்த்தி

வாழ்க்கை முடிந்தபோதும் அவரைச் சூழ்ந்த சர்ச்சை ஓயவில்லை.

இந்த ஐந்தாண்டுகாலம் இந்திய அரசியல், சரித்திர மகத்துவம் பொருந்திய ஒரு கால கட்டத்தை உள்ளடக்கியதாக இருந்தது. இதன் சூத்ரதாரியாக சஞ்சய் காந்தி விளங்கினார். இதனால்தான் அவருக்கு இத்தனை கீர்த்தி. அவருடைய சாவுக்கு இத்தனை மதிப்பு; மரியாதை.

இந்த ஐந்தாண்டுகளை விடுத்து, சஞ்சய் காந்தியின் ஆரம்ப வாழ்க்கை வரலாற்றைப் பார்க்க வேண்டியது அவ்வளவு அவசியமில்லைதான். ஆனால் அவருடைய தனித்த குணங்களும், அலாதியான போக்கும், விருப்பு வெறுப்புகளும் சிறு வயது நிகழ்ச்சிகள் சிலவற்றிலிருந்து வெளிப்படுகின்றன.

சஞ்சய் காந்தி நேருவின் குடும்பத்தில் பிறக்காமல் சராசரி இந்தியக் குடும்பம் ஒன்றில் பிறந்திருந்தால் அவருடைய வாழ்க்கை வேறு விதமாக அமைந்திருக்கும்.

(தொடரும்)

பெரிய எழுத்தாளர்கள் ; சிறிய தகவல்கள்



நோபெல் பரிசு பெற்றவரும், புகழ் பெற்ற நாவலாசிரியருமான வில்லியம் ஃபால்க்னர் ஒரு காலத்தில் போஸ்ட் மாஸ்டராக வேலை பார்த்தவர்.

''முதலாளித்துவ அமைப்பில் வாழும் வரை பணக்காரர்களின் தேவைக்கு இணங்கிப் போக வேண்டும் என்று நான் அறிவேன். அதற்காக இரண்டு செண்ட் நாணயத்தை மாத்திரம் வைத்துக் கொண்டு தபால் ஸ்டாம்புக்கு அதிகாரம் செய்யும் போக்கிரிகளுக்கெல்லாம் நான் அடி பணியத் தயாரில்லை. ஆகவே இது என் ராஜினாமாக் கடிதமாக இருக்கட்டும்'' என்று போஸ்ட் மாஸ்டர் ஜெனரலுக்கு ஒரு கடிதத்தை எழுதி அனுப்பி விட்டுத் தீவிரமாக இலக்கியத் துறையில் நுழைந்தார்.



ஆனால் அவர் உழைப்பு வீண் போகவில்லை. அமெரிக்க இலக்கியத் துறையில் சீக்கிரமே ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்டு விட்டார்.

● ● ●

வில்லியம் தாக்கரே என்ற பிரபல ஆங்கில எழுத்தாளர் வெகு குறுகிய நேரத்தில் ஒரு அடித்தல் திருத்தல் கூட இல்லாமல் தாம் எழுத வேண்டியதை வேகமாக எழுதி முடித்து விடுவாராம். ஆனால் அந்த நேரத்தில் அளவுக்கு மீறிய தேநீரையும் குடிப்பார். அதுவே அவருடைய தீராத வயிற்றுவலி உபாதைக்குக் காரணமாயிற்று.

● ● ●

வருடக் கணக்கில் தொடர்ந்து பலமணி நேரங்கள் பிரிட்டிஷ் மியூசியத்தில் உட்கார்ந்து குறிப்புக்கள் எடுத்து கார்ல்மார்க்ஸ் தம் 'டாஸ் காப்பிடல்' புத்தகத்தை எழுதினார். இதற்காக அவர் செலவழித்த காலம் கிட்டத்தட்ட பத்தொன்பது ஆண்டுகள்.

— யேசு


● ● ●

உலகப் புகழ் பெற்ற நாவலாசிரியர் அலெக்ஸாண்டர் டூமாஸ் இருநூற்றைம்பது நாவல்களுக்குமேலாக எழுதியிருக்கிறார். அவர் எழுதும் நேரத்தில் முக்கியமானவர்கள் அவரைச் சந்திக்க வந்தால் எழுதுவதை நிறுத்தாமல் இடது கையை உபயோகித்தே கை குலுக்குவாராம்.

● ● ●

எட்கார் ஆலன் போ தம்முடைய 'ரேவன்' என்ற படைப்பைத் திருப்பித் திருப்பி எழுதி நகாஸ் செய்தார். இதற்கு அவர் பத்து ஆண்டுகள் செலவழித்தார். கடைசியில் அந்த நூலைப் பத்து டாலர்களுக்குத்தான் விற்க முடிந்தது.





வரியில்லாத பட்ஜெட்
உபரி பட்ஜெட்
அறிவித்தத் திட்டங்கள்
என்னத்துக்கு மேக்கப்? இங்கே அசல் சஞ்சய் இருக்காரே!
ராஜீவ்
இளைஞர் காங்கிரஸ்
மேனகா
என்னங்க... பிரதமரைப் பார்த்துப் பேசிட்டு வர்றீங்களா? அவர் சொல்றதை எங்கே கேக்கப் போறீங்க?
என்னங்க.. பிரதமரைப் பார்த்துப் பேசப் போறீங்களா? அவர் சொல்றதை நீங்க எங்கே கேக்கப் போறீங்க?
முதலாளி
தொழிற் சங்கத் தலைவர்

1980 ஜூலை 13
ரௌத்திரி ஆனி 29
மலர்: 38 இதழ்: 50



கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

கரி பூசுகிறார்கள்!

மக்கள் முகத்தில் கரி பூசும் வகையில் நம் தலைவர்கள் எவ்வளவோ சாதித்திருக்கிறார்கள். அவற்றுள் நிலக்கரிச் சுரங்கங்களைத் தேசிய மயமாக்கிப் பூசிய கரி நன்றாக ஒட்டிக்கொண்டிருக்கிறது. எவ்வளவு கழுவினாலும் போகாது போலிருக்கிறது!

71 லும் 73 லும் இரு கட்டங்களில் நிலக்கரிச் சுரங்கங்கள் அரசுடைமையாக்கப்பட்டன. 'சோஷலிஸ சமுதாயத்தில் நிறுவனங்கள் அரசுடைமையானால் மக்களுக்கு நன்மை விளையும்' என்பது ஓர் அண்ட பகிரண்டப் புளுகு என்பதை அரசுடைமையான நிலக்கரிச் சுரங்கங்கள் நிரூபித்து வருகின்றன.

அரசுடைமையாக்கப்பட்ட பின்னர் கடந்த நான்கு ஆண்டுகளில் நிலக்கரி உற்பத்தி அதிகரிக்கவேயில்லை! நாலு வருஷங்களுக்கு முன் உற்பத்தி 101 மிலியன் டன். இன்றும் அதுவேதான். முன்னேற்றமே கிடையாது. தட்டிக் கேட்பாரும் இல்லை!

நிலக்கரி உற்பத்தி அதிகரிக்கவில்லையெனில் அதை மூலப்பொருளாகப் பயன்படுத்தும் ஏராளமான தொழிலகங்களில் உற்பத்தி எப்படி அதிகரிக்க முடியும்? புதிய அனல் மின் நிலையங்கள் எவ்வாறு தோன்றும்? மின் உற்பத்தி அதிகரிக்காத போனால் நாட்டில் தொழில் வளம் எப்படிப் பெருகும்?

அரசுடைமையான நிலக்கரிச் சுரங்கங்களில் லஞ்ச ஊழலோ சொல்லி மாளாது. இரவோடு இரவாக ஏராளமான லாரிகள் ஆங்காங்கே சுரங்கங்களிலிருந்து நிலக்கரியை ஏற்றிச் சென்று விடுகின்றன. இதற்குக் கணக்கா வழக்கா, பில்லா ரசீதா ஏதும் இல்லை! இந்தத் திருட்டு நிலக்கரி, கறுப்புச் சந்தையில் விற்பனையாகிறது. ரொம்பப் பேருக்கு இதில் பங்கு உண்டு. நிலக்கரியில் கறுப்புச் சந்தை என்பது இன்று சர்வ சகஜமாகி விட்டது.

லஞ்ச ஊழல் இருந்து தொலைகிறது; நிலக்கரி தட்டுப்பாடின்றிக் கிடைத்தால் சரி என்று தொழிலக நிர்வாகிகள் எண்ணலாம். ஆனால் அவர்களுடைய அந்த ஆசையிலும் வெந்தணலைத் தான் அள்ளிக் கொட்ட வேண்டும். அனல் மின் நிலையங்கள், நெசவாலைகள், எஃகு ஆலைகள், ரசாயன உர ஆலைகள் போன்ற சகலத்திலும் நிலக்கரித் தட்டுப்பாடு. உற்பத்தி பாதிப்பு.

சரி, தட்டுப்பாடு இருக்கவே இருக்கிறது; கிடைக்கிற கொஞ்சம் நிலக்கரியின் விலையாவது நிலையாக இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. ஆமதாபாத்தில் நூற்பு, நூணி ஆலைகள் 77–78ல் டன்னுக்கு ரூ 160 விலையாகத் தந்தன. ஓராண்டுக்குப் பிறகு இது ரூ 270 ஆக உயர்ந்தது. நம்பினால் நம்புங்கள் இன்று அதே அளவு நிலக்கரியின் விலை ரூ 550! மூன்று ஆண்டுகளில் மும்மடங்குக்கு மேலே விலை உயர்வு!

ஒழிகிறது; விலை ஏறினாலும் நிலக்கரிச் சுரங்கங்கள் லாபகரமாக நடந்தால் சரி, அதனால் மக்களுக்குத்தானே ஆதாயம் என்று மகிழ்ந்து விடமுடியாது! காரணம், இத்தனை விலை உயர்வுக்குப் பிறகும் நிலக்கரிச் சுரங்கங்கள் காண்பது ஆண்டொன்றுக்கு ரூ 100 கோடி நஷ்டம் தான்! கடந்த நான்கு ஆண்டுகளாகவே இதே லட்சணம் தான்! லாபம் வந்தால் மக்களுக்கு ஆதாயமெனில் நஷ்டம் வந்தால் அது மக்களைப் பாதிக்காமல் போகுமா? இந்தத் தேசிய மயமான ரூபாய் நூறு கோடி நஷ்டத்தையும் தாங்கப் போவது நாம்தான். அதுமட்டுமா? நிலக்கரி விலை உயர்வால் அதனை மூலப்பொருளாகக் கொண்டுள்ள ஆலைகளில் உற்பத்தியாகும் பொருள்களின் விலையும் உயரும். அந்த விலை உயர்வைச் சமாளிக்கவேண்டியவர்களும் நாம்தான்!

நிலக்கரி விலை உயர்வுக்கு ஒரு முக்கிய காரணம் ரயில் போக்குவரத்து சரியில்லை. லாரிகளில் ஏற்றிச் செல்ல வேண்டியிருக்கிறது. இதற்குச் செலவு

அதிகம். எந்த ஜன்மத்தில் நமது ரயில்வே நிர்வாகம் சரக்குப் போக்கு வரத்தைத் தங்கு தடையின்றிச் சீர் செய்யப் போகிறதோ அது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

கார்ல் மார்க்ஸ் இன்று உயிருடன் இருந்தால், சோஷலிஸம் என்ற பெயரால் நம் நாட்டில் நடக்கின்ற ஈடு இணையற்ற மோசடிகளையும் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளையும் அறிய நேர்ந்தால் என்ன செய்வார்?

எதையும் செய்வதற்கு முன் அதிர்ச்சியில் மறுபடியும் செத்துப் போயிருப்பார்! நமக்கு இந்த அக்கிரமங்கள் பழகி விட்டன. அவருக்கு அப்படியல்லவே? அதிர்ச்சி தாங்க முடியாத அளவில்தான் இருக்கும்!

(புள்ளி விவரங்கள் - நன்றி: காமர்ஸ் மே 17, 1980)



கர்ப்பிணியான ஒரு பெண்ணை நிர்வாணமாக்கிப் போலீசாரே பட்டப் பகலில் பல்லாயிரக் கணக்கானோர் முன்னிலையில் வீதியில் இழுத்துச் சென்றனர். அதன் பின்னர் அந்தப் பெண் மாயா போலீஸாரால் கற்பழிக்கப்பட்டார்.

இதைவிட இழி செயல் ஒன்று உண்டென்றால், அது இதனை ஓர் அரசியல் பிரச்னையாக்கி இந்திரா காங்கிரஸ்காரர்கள் பயங்கரத்தைக் குறைக்கப் பார்ப்பதுதான். எதிர்க்கட்சியினர் அதற்கு இடம் தராமல் போராட நேர்ந்திருக்கிறது.

உத்தரப் பிரதேசம் பக்பட்டில் நடந்த இந்தக் கொடுமையை யொட்டி எம். ஜி. ஆர். 'கற்பழிப்புக் குற்றங்கள் நிரூபணமானால் குற்றவாளிக்குத் தூக்குத் தண்டனையே விதிக்கும் விதமாகச் சட்டத்தைத் திருத்தலாம்' என்று யோசனை கூறியுள்ளார். இது சாதாரணக் குற்றவாளிக்குத்தான் பொருந்தும். போலீஸாரே இம்மாதிரி அக்கிரமத்தில் ஈடுபடும்போது அதை விடப் பெரிய தண்டனை உண்டா என்று யோசிக்க வேண்டும்!

இந்தச் சம்பவத்தை யொட்டி பக்பட் போலீஸ் அதிகாரிகள் மாயாவை ஒரு கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவளாக நிரூபிக்க முயன்று வருகின்றனர். இது இரட்டை மோசடி வேலை. கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவளானால் . அவளை எப்படி வேணுமானாலும் நடத்தப் போலீஸாருக்கு அதிகாரம் உண்டா என்ன? அப்போதும் கூட சட்டப்படி உரிய மரியாதையைக் கொடுத்துத் தானே கைதியை நடத்த வேண்டும்?

ஜனதா ஆட்சி காலத்தில் சட்ட ஒழுங்கு சீர்குலைவு ஏற்பட்டு விட்டது என்று புலம்பியவர்கள் இன்று என்ன செய்வது என்று கையைப் பிசைய வேண்டாம். ஜனதா ஆட்சியில் தங்கத்தை ஏலம் விட்டதால் வந்த வினைதான் இது என்றோ வாஜ்பாய் ரகசியமாக மோஷே தயானைச் சந்தித்ததன் பின் விளைவுதான் பக்பட் சம்பவம் என்றோ அடித்து நொறுக்குங்கள்!

• • •

அஸ்ஸாமில் கிளர்ச்சியாளர்கள் ஒரு பஸ்ஸைச் சூழ்ந்துகொண்டு வங்காளிகள் அனைவரையும் இறங்கச் சொன்னார்கள். அஸ்ஸாமியர் மட்டுமே பஸ்ஸில் பயணம் செய்யலாம் என்றனர். 40 வயது அஸ்ஸாமியர் ஒருவர் பஸ்ஸிலிருந்து இறங்கி, ''நான் ஒருவன்தான் இந்த பஸ்ஸில் வங்காளி. என்னை என்ன வேணுமோ செய்துகொள்ளுங்கள். பஸ்ஸை மேலே செல்ல அனுமதியுங்கள்'' என்றார்!

அந்த அஸ்ஸாமியரின் துணிச்சலையும் வங்காளியிடம் அவர் காட்டிய சகோதர பாசத்தையும் மனமாரப் போற்றலாம். ஆனால் இம்மாதிரி லட்சிய புருஷர்கள் எங்கோ லட்சத்தில் ஒருவரைத்தான் பார்க்க முடியும்.

1944லிலேயே காந்திஜி, 'அஸ்ஸாமில் அஸ்ஸாமியர் சிறுபான்மையினராகிவிடும் ஆபத்து இருந்தால் அவர்களுக்குச் சத்தியாக்கிரகம் செய்யும் உரிமை உண்டு' என்றார்.

1952ல் நேருஜி, 'ஊடுருவலைத் தடுத்து நிறுத்தத்தான் வேண்டும்' என்றார். '52க்கு முன்பு சட்டத்துக்குப் புறம்பாகக் குடியேறியவர்களைக் கண்டு பிடிப்பது கஷ்டம்; 52லிருந்து குடியேறியவர்களை விசாரிக்கலாம்' என்று வாக்களித்தார்.

நேருஜியின் இந்த உறுதி மொழியை நிறைவேற்றுமாறுதான் இன்று அஸ்ஸாம் கிளர்ச்சியாளர் பிரதமரைக் கோருகின்றனர்.

பிரச்னை மேற்கு வங்கத்திலிருந்தோ இந்தியாவின் இதர மாநிலங்களிலிருந்தோ வந்து குடியேறியவர்கள் பற்றியது அல்ல. பங்களா தேஷிலிருந்தும் நேப்பாளத்திலிருந்தும் சட்ட விரோதமாக வந்துள்ளவர்களைப் பற்றியது தான். அரசியல் நோக்கில் இந்த அந்நியர்களுக்கு வோட்டுரிமையும் வழங்கப்படுகிறது. அண்மையில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது அகில இந்தியாவில் வோட்டர்களின் எண்ணிக்கை 12.63 சதம் அதி

கரித்துள்ளபோது அஸ்ஸாமில்மட்டும் 18.15 சதம் கூடியிருக்கிறது!

'அகதிகளாக வருவோராயின் அவர்களுக்கு அடைக்கலமும் தரவேண்டுமாயின் அகில இந்தியாவும்தானே பொறுப்பேற்க வேண்டும்' என்று கேட்கின்ற அஸ்ஸாமியர் தங்கள் மாநிலம் பொருளாதார ரீதியில் பின் தங்கியிருப்பதையும் சுட்டிக் காட்டுகின்றனர். தங்கள் மாநிலத்தில் தாங்களே சிறுபான்மையினராகிவிடுவோம் என்று அஞ்சுகின்றனர். திரிபுரா, அருணாசலப் பிரதேசம் போன்ற இதர வடகிழக்கு எல்லைப்புற மாகாணங்களிலும் இதே பயம்தான் நிலவுகிறது. நியாயமான கவலையைத் தீர்த்து நிவாரணம் அளிப்பது பிரதமரின் கடமை.

• • •

சஞ்சய் காலமாகி உண்டான ஆழ்ந்த துயர் சற்று அடங்க, உணர்ச்சிகள் ஓரளவு சமன்பட, இனி எழுதலாம் என்று தோன்றுகிறது.

சஞ்சய்யின் அடிப்படை நோக்கம் பாரதம் உன்னத நிலையை அடைய வேண்டும் என்பதுதான். பாரத மாதாவின் புதல்வன் என்று அவர் தம்மைக் கருதிக் கொண்டதாக இந்திரா கூறுகிறார். இதில் யாருக்கு ஆட்சேபணை இருக்க முடியும்? ஆனால் லட்சியத்தை அடைய அவர் கையாண்ட முறைகள் ஆபத்தானவை. அவர் வாழ்க்கையே ஆபத்துக்கள் நிரம்பியதாக இருந்தது.

மோட்டார் கார் உற்பத்தித் தொழில் நடத்தியபோதும் சரி, அரசியலில் ஈடுபட்டபோதும் சரி, விமானத்தில் ஏறி மரணத்தை எதிர்கொண்ட போதிலும் சரி, சஞ்சய் ஆபத்தான பாதையில் சென்றார். அவர் நினைவைப் போற்ற விரும்பும் நாம் அந்த ஆபத்தான பாதையிலிருந்து விலகிச் சரியான மார்க்கத்தை மேற்கொண்டு பாரதம் பற்றிய அவரது கனவுகள் நினைவாக உழைக்க வேண்டும்.

சஞ்சய் ஞாபகார்த்தமாக ஆந்திர அரசு இரு கோடி ரூபாய் செலவில் மோட்டார் கார் பொறியியல் கூடம் அமைத்து மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப் போகிறது. தமிழக இந்திரா காங்கிரஸ், சென்னை பல்கலைக் கழகத்துக்கு ஒரு லட்சம் வழங்கி அதிலிருந்து விமானப் பொறி இயல் துறை படிக்க விரும்பும் சிறந்த மாணவருக்கு உபகாரச் சம்பளம் வழங்க ஏற்பாடு செய்யவிருக்கிறது.

ரொம்ப நல்ல காரியங்கள். எப்படி கார் தயாரிக்கக் கூடாது, எப்படி விமானம் ஓட்டக் கூடாது என்று இம்மாணவர்களுக்கு முதலில் போதிக்கலாம். எத்தகைய அரசியல் ஆபத்தானது என்று போதிக்கவும் ஒரு கல்லூரி சஞ்சய் பெயரால் உருவாக வேண்டியது அவசியம்தான்.



24 மணி நேர மிருக காட்சி சாலை!

ஐரோப்பாவிலேயே 24 மணி நேரமும் பார்க்கக் கூடிய மிருக காட்சி சாலை பிராங்க்பர்ட் நகரத்திலுள்ளது. பகல் நேர பார்வையாளர்கள் இரவு நேர பிராணிகளை இங்கு காணலாம்! 44 கூண்டுகள் இதற்கென பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்டு சிகப்பு விளக்குகள் அதில் பொருத்தப்பட்டுள்ளன. இவ்விளக்கொளியில் வௌவால், தேன் கரடிகள், வாலில்லா இரவுக் குரங்கு, பாலைவன பூனைகள், நில எலிகள், சாம்பல் நிற ஆந்தைகள் முதலியன இரவு வருவதைப் போல உணர்கின்றன. சுறுசுறுப்பாய் இயங்குகின்றன!

ஆதாரம்: ஸ்காலா - தகவல்: முருகவேல்

• • •

பிளாஸ்டிக் சர்ஜரியின் மகிமை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தீப்புண்ணாலோ அல்லது விபத்து காரணமாகவோ உடல் உறுப்பு விகாரப்பட்டால் அல்லது பிறவியிலேயே குறை இருந்தால் பிளாஸ்டிக் சர்ஜரி மூலம் அழகு படுத்தலாம். உலக யுத்தத்தின்போது இளம் ராணுவ வீரர்கள் அடைந்த பயங்கரக் காயங்களின் விளைவான வடுக்கள் இந்தச் சிகிச்சை முறைக்கு முக்கியத்துவத்தை அளித்தன.

ஆனால் இப்போது பிளாஸ்டிக் சஸ்திர சிகிச்சை ரொம்ப வளர்ச்சி அடைந்து ஓர் அழகு சாதனமாகி விட்டது. அழகுக் குறைவான பெண்கள் தங்களை அழகுபடுத்திக் கொள்ள டாக்டர்களை நாடுகின்றனர். எடுப்பான மூக்கு வேண்டுமா? விம்மி எழும் நெஞ்சங்கள் தேவையா? குந்துபுறங்களின் அளவு குறைய வேண்டுமா? எதுவானாலும் சரி, டாக்டரின் உதவியை நாடலாம். சிற்பி செதுக்கிய சிலை போல இந்த உயிர்ச் சிலையை உருவாக்கி விடுவார் அவர்!

எல்லாம் இருக்க, என் கவலை, அழகுப் போட்டிகளில் நீதிபதிகளாக அமர்கிறவர்கள் பற்றித்தான். ஒரு பெண்மணி இயற்கையாகவே அழகானவளா அல்லது பிளாஸ்டிக் சர்ஜரியின் சாதனையா என்று எப்படி அவர்கள் கண்டுபிடிக்கப் போகிறார்கள்?

செய்திகள் வாசிப்பது 'செம்பியன்'

ஒரு ரைம்... ஒரு க்ரைம்

ஏ.வி.எம்.கணேஷ்



வறண்ட கோடைக்காலத்தில், இயற்கைக் குளிரைச் சிறிது விசிறத் தொடங்குகிற இரவின் தொடக்கம். மணி மாலை ஏழு.

சாதாரண சிம்னி விளக்கு கூடாரமடித்துக் கொண்டிருக்கும் அரை வட்ட ஒளிக்குள் குனிந்து கிடக்கும் டேவிட், நர்ஸரி பாடல் ஒன்றின் எழுத்துக்களை ஒன்றுகூட்டி உச்சரித்துக்கொண்டிருக்கிறான். அவனுடைய வெண்டைப் பிஞ்சு விரல்கள் அந்தப் புத்தகத்தில் ஊர்ந்து நகரும்போது அவனுடைய உதடுகள் ஒட்டிப் பிரிந்து ஆங்கிலத்தை உச்சரிக்க என் உச்சி முதல் உள்ளங்கால் வரை ஓடுகின்ற அந்த உணர்வுக்குத்தான் பாசம் என்று பெயரோ?

''டேவிட்... என்ன பாடம் படிக்கிறே?''

''பாடம் இல்லே டாடி... பாட்டு... ஒரு ரைம்.''

''இஸ்இட்?எங்கே சொல்லுபார்ப்போம்.''

"Rain...Rain...go away"

''டேவிட்... ப்ளீஸ்.... ஸ்டாப் இட்... நிறுத்து.''

''போங்க டாடி... ரைம் சொல்லுன்னு சொல்லிட்டுப் பிறகு நிறுத்தச் சொன்னா நான் நிறுத்த மாட்டேன்....''

''வேண்டாம்...டேவிட்...வேண்டாம்.''

"Rain Rain Go away
Come again another day
Little Johnny wants to play"

''யூ ஸ்டுபிட். சொன்னா கேட்க மாட்டே''

''டாடி... அடிக்காதீங்க டாடி.... அடிக்காதீங்க...''

விழிகளில் வழியும் நீரைச் சட்டை நுனியால் ஒற்றியவாறே அவன் விக்கிக்கொண்டிருக்கிறான். அவன்மீது பட்டுத் தெறிக்கின்ற சிம்னி விளக்கின் ஒளி அவனைச் சுற்றி ஒரு கரு நிழலைக் கவரில் பூசுகிறது. அவனைச் சுற்றி மட்டும்தானா கரு நிழல்?

ஐந்தாண்டுகளுக்கு முன்பு...

''ரெஜினா டியர்...''

''எஸ் டார்லிங்...''

''எனக்கு ஒரு சந்தேகம். நீ ஒரு டீச்சர். தினம் தினம் 'ஸ்பாட்லெஸ்' டிரஸ்ட்லே நீட்டா' ஸ்கூலுக்குப் போயிட்டு வர்றே... அப்படி இருக்க அழுக்குப் பனியனும் காக்கி டிரவுசரும் ஸ்பேனரும் சுத்தியலும் பிடிக்கிற என்னைப் போய்....''

''ஏன் காதலிச்சேன்னு கேட்கிறீங்க இல்லே... ஜேம்ஸ்... உண்மையைச் சொல்றேன். எனக்கு உழைக்கிறவங்களைக் கண்டால் ரொம்பப் பிடிக்கும். டி. எம். இ. படிச்சிட்டு, எவனோ கொடுக்கிற ஐநூறுக்கும் அறுநூறுக்கும் கைநீட்டி நிற்காம சொந்தத்திலே வொர்க் ஷாப் தொடங்கி, தொழிலாளி மாதிரி நீங்க உழைக்கிற உழைப்பைப் பார்த்து....''

''யூ லேக்ட் மீ!''

''யா....''

''டியர்.... நம்ம கல்யாணத்துக்கு அப்புறம் நான் உன்னை எப்படிக் கூப்பிடுவேன் சொல்லு பார்ப்போம்...''

''ரெஜீ....?''

''யூ ஆர் நாட் கரெக்ட்...ரெயின்னு கூப்பிடுவேன்.''

''ஏன் அப்படி?''

''டியர்... பாலைவனமாக் கிடந்த என் வாழ்க்கையிலே மழையாக வந்தவள் நீ... எஸ்... குளிர்விக்கும் மழையாக வந்தவள் நீ....''

''போதும் போதும்.... அசடு வழியுது.''

''அசடு வழியுதுன்னு சொல்லாதே. ஆயில் வழியுதுன்னு சொல்லு.''

''சீ....சீ.... விடுங்க....''

அதற்குப் பிறகு...

''கன்கிராஜுலேஷன்ஸ் மிஸ்டர் ஜேம்ஸ் நீங்க தந்தையாகப் போறீங்க... சில டானிக் எழுதித் தர்றேன்... தினமும் மூணு வேளை சாப்பிடச் சொல்லுங்க... குழந்தை குண்டா சிவப்பாப் பிறக்கும்....''

அதற்குப் பிறகு....

''என்ன ரெயின்... டானிக்குகளைச் சாப்பிட்டியா?''

''இல்லே...''

''ஏய்... டாக்டர் என்ன சொன்னார் தெரியுமா? இந்த டானிக்கைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தா குழந்தை குண்டா... சிவப்பா பிறக்கும்னு சொன்னார்...''

''அவனுக்கென்ன... பிள்ளையை அவனா பெறப் போறா?''

''வாட் டு யூ ஸே டார்லிங்...''

''என்னங்க.... உங்களுக்குக் கொஞ்சமாவது இருக்கா... கல்யாணம் ஆகி ஒரு வருஷம் முழுசா முடியலே... அதுக்குள்ளே குழந்தையா... அந்த வருஷமாவது வாழ்க்கையை 'என்ஜாய்' பண்ண வேண்டாமா?''

''சே... நீயும் ஒரு பெண்ணா...''

''என்ன சொன்னீங்க?''

''ஹூக் ஹியர் ரெயின்... தாயாக மாறுவதற்கு உனக்கு விருப்பம் இல்லாம இருக்





கலாம். ஆனா எனக்குத் தந்தையாக மாறணுமின்னு ஆசை இருக்கு. ஒண்ணு மட்டும் உறுதியாகச் சொல்றேங்... ஏதாவது செஞ்சு இந்தக் குழந்தையை உருக்குலைக்க நினைச்சா நம் உறவும் அப்படி ஆயிடும்.''

அதற்குப் பிறகு....

''கன்கிராஜுலேஷன்ஸ் மிஸ்டர் ஜேம்ஸ்... உங்க மனைவிக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கு. குழந்தை நல்ல வெயிட் நல்ல சிவப்பு.''

அதற்குப் பிறகு....

''ஏண்டா சனியனே! ஏன் இப்படி அழறே'' எந்த நேரத்திலே பிறந்தேனோ. இந்த வீட்டிலே எல்லாமே நான்தான் செய்ய வேண்டியிருக்கு...? ஸ்கூலுக்குப் போறதா? பிள்ளையைப் பார்க்கிறதா? புருஷனுக்குச் சோறு பொங்கி வகை வகையா கறி வைச்சு அனுப்பறதா... எனக்கு இரண்டு கைதானே இருக்கு... இருபது கையா இருக்கு?...''



''அன்பே! சங்கீதா! எந்த நிலை சக்தியாலும் நம்மைப் பிரிக்க முடியாது.''

''ஸார்! பில்லைச் சேர்த்து ஒன்றாகப் போடவா?''

''தனித் தனியாகவே போடப்பா!''

''நீங்களும் நானும் பிரிஞ்சு வாழறது தான்....''

''அப்போ குழந்தை டேவிட்?''

''உங்களாலே வந்த உறவுச் சின்னம் உங்களுடனேயே இருக்கட்டும்.''

அதற்குப் பிறகு....

''ரெஜினா அவர்களுக்கு,

எவனுடைய வக்காலத்துமின்றி இணைந்த நாம் பிரிவதற்கு வக்கீல் எதற்கு..? என்னை நிரந்தரமாகப் பிரிவதே உனக்கு மகிழ்ச்சியை அளிக்கும் என்று நீ கருதினால் ஐ டு ஹேவ் நோ அப்ஜெக்ஷன்.''

''ரெயின் உனக்குக் கஷ்டமா இருந்தா ஒரு ஆயாவை ஏற்பாடு பண்ணட்டுமா?''

''சொல்லாதீங்க... செஞ்சு காட்டுங்க.''

அதற்குப் பிறகு....

''உங்களிடம் சொல்லவே மறந்துட்டேனே.... எங்க ஸ்கூல்லே ஜானின்னு புதுசா ஒரு வாத்தியார் போன வாரம் வேலையிலே சேர்ந்திருக்கார். அவரோட ஹேர் ஸ்டைல் எவ்வளவு ப்யூட்டிஃபுல்லா இருக்கு தெரியுமா? அதுமட்டுமில்லீங்க. அவர் கிடார் வாசிச்சா எப்போதுமே கேட்டுட்டே இருக்கணும் போலத் தோணுது... நீங்களும் ஒரு மனிதர்னு சொல்லிக்கிறீங்களே...''

''ரெயின், சில அற்ப சந்தோஷங்களுக்கு அடிமையாகாத மனிதன் நான். டியர்... ரொம்ப நாளா உன்னிடம் சொல்ல நினைச்சதை இப்போ சொல்றேன்... நம்ம செலவுக்கும் அதிகமா நான் சம்பாதிக்கிறபோது நீ வேலைக்குப் போக வேண்டியது அவசியம் தானா?''

''வெரி குட். நானும் இந்தக் கேள்வியை ரொம்ப நாளைக்கு முன்னமே எதிர்பார்த்தேன். ஆனா இன்னிக்குத்தான் நீங்க கேட்கிறீங்க... அது இருக்கட்டும். நீங்க இப்படி சொல்றதுக்குக் காரணம்...?''

''வீட்டு வேலையையும் கவனிச்சுட்டு ஸ்கூலுக்குப் போகணுமின்னா உனக்கும் கஷ்டமா இருக்குமேன்னுதான் சொன்னேன்.''

''எதற்காகச் சுத்தி வளைச்சுப் பேசறீங்க... நேரடியாகவே கேளுங்களேன்... எனக்கும் ஜானிக்கும் என்ன உறவுன்னு?...''

''ரெயின்... நீயா இப்படிப் பேசறே?''

''எஸ். நானேதான். என்னுடைய ஸ்டேட்டஸை மறந்து உங்களைக் காதலிச்சேனே அதுக்கு என் புத்தியைச் செருப்பாலே அடிக்கணும். என் தேகத்து மேலே சந்தேகப்படுற அளவுக்கு வந்துவிட்ட ஒருவரை என் கணவர்னு சொல்ல எனக்கு விருப்பமில்லை.''

''அதுனாலே...''

அதற்குப் பிறகு....

''அண்ணே வரவர நீங்க ஒர்க்ஷாப்பைக் கவனிக்கிறதே இல்லேன்னு நம்ம கஸ்டமர்ஸ் எல்லாம் வேற ஒர்க்ஷாப்பைத் தேடிப் போயிட்டாங்க அண்ணே... கர்த்தர் படத்துக்கு மெழுகுவர்த்தி வாங்கக்கூடப் போணியாகலே அண்ணே... அண்ணே... சொல்லவே மறந்துட்டேனே... நம்ம ரெஜினா அக்காவும் அந்த ஜானி வாத்தியாரும் ஒரே வீட்டிலே குடித்தனம் பண்றாங்களாம். நம்ம கஸ்டமர் ஒருத்தர் சொன்னார்.''

அதற்குப் பிறகு....

''ஸார்... எனக்கு எல்லா வேலையும் தெரியும் ஸார். சொந்தத்திலே ஒர்க்ஷாப் வைச்சிருந்தவன் நான். ஒரு காரையோ ஸ்கூட்டரையோ பார்த்தவுடனேயே அதுக்கு என்ன ரிப்பேர்னு சொல்லிடுவேன் ஸார். நீங்க தயவுபண்ணி ஏதாவது ஒரு வேலை கொடுத்தா நானும் என் மகனும் அரை வயிற்றுக் கஞ்சியாவது குடிக்க முடியும்...''

''டாடி, எனக்குப் பசிக்குது டாடி....''

நினைவுக் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்து இழுக்கிறான் என்னுடைய ஸன்.

''ஸாரி... ஸன்... ஏதோ ஒரு ஆத்திரத்திலே உன்னை அடிச்சுட்டேன்.. வா சாப்பிடலாம்.... சோறு சாப்பிடுறியா இல்லே...''

''வழக்கம் போல் பன் பட்டர் ஜாம்.''

''கமான் ஸன்... வா...''

''டாடி! எதுக்கு டாடி அடிச்சீங்க ....''

''ரைம்' சொன்னா அதைச் சரியாச் சொல்லணும். நீ சொன்ன 'ரைம்' தப்பு''

''எங்கே... நீங்க சரியாச் சொல்லுங்க பார்ப்போம்.''

Rain Rain gone away
Won't Come another day
Rotten Johnny's dirty Play

''போங்க டாடி.... நீங்க சொல்ற மாதிரி புத்தகத்திலே இல்லையே?''

''சில உண்மைகளைப் புத்தகத்திலே பார்க்க முடியாது ஸன்...''

''ஏன் டாடி?''

பதில் கூற இயலா வினாவை விடுத்த அவன் வாயை ஒரு ரொட்டித் துண்டால் நிறைக்கிறேன்.

உறவின் கைதிகள்

The ruling passion, be it what it will
The ruling passion conquers reason still.

— Alexander Pope 1688 — 1744.

4

ராஜீவ் புறப்பட்டுப் போனவுடன் மாண விகளுக்குள் ஒரே சலசலப்பு, கலகலப்பான பேச்சு.

''ஏய், படங்கள்லே இருக்கிற மாதிரியே இருக்காருடீ!''

''ஆமாண்டீ! ஹாவ் சார்மிங் ஹீ இஸ்!''

''அது மட்டுமில்லேடீ, எவ்வளவு மரி யாதை, என்ன பண்பு! அவர் எவ்வளவு பெரிய நடிகர்! இருந்தாலும் அவருக்குக் கொஞ்சம்கூட ஹெட்வெயிட்டிடையாதுடீ!''

''நம்ம கூட இன்னும் கொஞ்ச நேரம் பேசிக்கிட்டு இருக்க முடியலியேன்னு ஸாரி, எக்ஸ்யூஸ்மீன்னு வேறே சொல்லிட்டுபோனுர் கவனிச்சியாடீ.''

''ஐ ஸே, தேர் காண்ட் பி எனிபடி லைக் ராஜீவ் குமார்!''

''ஏய், இந்த விஷயத்தை நம்ம பிரின்ஸி பால் கிட்டே சொன்னு நம்பவே மாட்டாங்க டீ!''

''நம்பாமே என்ன! சொன்னதும் அவங் களே டான்ஸ் ஆடப் போருங்க, வேணுன்னு பாரேன்!''

அதுவரை உஷா மட்டும் பேசாமல் இருந் தாள். அவளைப் பார்த்து மற்ற பெண்கள்—

''உஷா! நீ கெட்டிக்காரி டீ! நாங்க எல் லாரும் எப்படிக் கேக்கறதுன்னு தயங்கிக் கிட்டு இருந்தோம். நீ தைரியமாகக் கேட்டு அவரை ஒப்ப வைச்சுட்டே! எல்லாம் உன் னுலேதான் டீ!'' என்று அவளைப் புகழ்ந் தனர். உஷா சிரித்தாள். ''இதிலே என்ன டீ பிரமாத தைரியம்? நாம வந்ததே அதுக் காகத்தானே? வந்த விஷயத்தைச் சட்டு புட்டுன்னு சொல்லாமே, நாமும் சும்மா இருந்து அவர் நேரத்தையும் வீணுக்கலாமா? அதான் தைரியத்தை வரவழைச்சுக்கிட்டுக் கேட்டுட்டேன்! எப்படியோ, வந்த காரியம் சக்ஸஸ்! கம் ஆன், லெட்ஸ் கோ!'' கூரே ஷிடம் விழா விவரங்களைத் தெளிவாகக் கூறி விட்டு மாணவிகள் புறப்பட்டு விட்டனர்.


• • •

கல்லூரி ஆண்டு விழா நினைத்தன்று கல் லூரி முழுவதும் ஒரே பரபரப்பு. நாள் முழு வதும் கல்லூரி எங்கும் ஒரே அமளி துமளி. இளம் மாணவிகள், முதிர்ந்த ஆசிரியைகள் ஒருவரை யொருவர் முட்டிக் கொண்டு மோதிக்கொண்டு அங்கும் இங்குமாய்க் குழம்பி ஓடினார்கள். ஒருவருக்கொருவர் எதி ரும் புதிருமாகக் கட்டளை இட்டுக் கூச்சல் போட்டார்கள்; தலையைப் பிய்த்துக்கொண் டார்கள். இடீர் இடீர் என்று சிலர் அழுதே விட்டார்கள். எல்லோருக்கும் நெஞ்சுக்குள் ஒரே படபடப்பு.

ராஜீவ் குமார் வரப் போகிறார்! ராஜீவ் குமார் வரப்போகிறார் — அய்யோ! இன்னும் எதுவுமே ரெடி ஆகவில்லையே! சாயங்காலத் துக்குள் எல்லா ஏற்பாடுகளும் முடியுமோ இல்லையோ!

மாலை ஆறரை ஆகிவிட்டது. ஏதோ தெய்வ சங்கல்பமோ என்னவோ என்று வியக் கும் வண்ணம், நாள் முழுதும் நிலவிய குழப்ப நிலை நீங்கி, இடி இடித்து மழை பொழிந்து பின்பு தோன்றும் அமைதியைப் போல் எல் லோரும் ஒரேவிதமாய் அடங்கிப்போனார்கள். விழாவுக்கான எல்லா ஏற்பாடுகளுமே கன கச்சிதமாக அமைந்து விட்டன.

கல்லூரிக் கட்டிடங்கள், காம்பவுண்டில் உள்ள மரங்கள் அனைத்துமே வண்ண மின் சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந் தன. கல்லூரி முன் வாசலில், மெயின் கேட் டுக்கு மேல் வெள்ளைத் துணி யால்ஒரு பேனர், இரு கேட் தூண் களுக்கும் மத்தி



ஜெயலலிதா

யில் இறுக்கி இழுத்து மாட்டப்பட்டிருந்தது. அதன் இரு புறமும் நீளமான ட்யூப் லைட்கள் பொருத்தப்பட்டிருந்தன. பேனரில் கொட்டைக் கறுப்பு எழுத்துக்களில் ''ராஜீவ் குமார் — வீ லவ் யூ!'' என்று மாணவியர் வரைந்து வைத்திருந்தார்கள்.

கல்லூரி பிரின்ஸிபால், மிஸ் மைத்ரேயி ராமகிருஷ்ணாவுக்கும் மாணவிகளுக்கும் இந்த பேனரைக் குறித்துக் காலையில் நீண்ட வாக்கு வாதம் நடைபெற்றிருந்தது. ஒல்லியாக, காய்ந்துபோன கொத்தவரங்காய் வத்தல் போன்ற தோற்றம் கொண்ட மைத்ரேயி ராமகிருஷ்ணா, மாணவிகளிடம் அந்தப் பேனரை வேறு விதமாக ''ராஜீவ் குமார்— வீ வெல்கம் யூ:'' என மாற்றி எழுதினால் இன்னும் சற்றுக் கண்ணியமாய் இருக்கும் என்று எவ்வளவோ வற்புறுத்திச் சொல்லிப் பார்த்துவிட்டார். அவர் முயற்சிகள் பயன் பெறவில்லை. மாணவியர் தங்கள் விருப்பப் படியே பேனரைத் தயாரித்து மாட்டியும் விட்டார்கள். அதற்கு மேல் மிஸ் மைத்ரேயியால் என்ன செய்ய முடியும்?

வெளியே பார்ப்பதற்குச் சிடுசிடுவென்று, சதா காரமாகவும், கடுமையாகவும் தோற்றம் அளித்தாலும், உள்ளுக்குள், ராஜீவின் வருகையை எதிர்பார்த்து மற்ற ஆசிரியைகளுக்கும், மாணவிகளுக்கும் எவ்வளவு உற்சாகமும் குதூகலமும் இருந்ததோ, அதைவிடச் சற்று அதிக அளவிலேயே அதே உணர்ச்சிகள் மிஸ் மைத்ரேயியின் வறண்டு போன நெஞ்சுக்குள் தாண்டவமாடின. ஆனால் ஒரே வித்தியாசம். உயிரே போனாலும் அதை வெளிப்படையாக ஒப்புக் கொண்டிருக்க மாட்டார்!

மிஸ் மைத்ரேயிக்கு வயது ஐம்பது. அவர் திருமணமே செய்து கொள்ளவில்லை. ஆயுக முழுவதும் கல்வி சேவைக்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்டு விட்டார். மிகவும் கண்ணியமானவர். ஆனால், அவருக்கு ஒரு ரகசிய பலவீனம் இருந்தது. அவருடைய மாசில்லாத வாழ்க்கையில் யாருக்கும் தெரியாத ஒரு துர்க்குணம், ஒரு தீய வழக்கம், வெளியில் சொல்ல முடியாத ஒரு களங்கம் இருந்தது. ஆம்! மிஸ் மைத்ரேயிக்கு சினிமா படம் என்றால் பித்து! வேரூன்றிவிட்ட மோகம்! இதுவே அவர் வாழ்க்கையில் வெளியில் தெரியக்கூடாத இனிக்கவூட்டும் மர்மம்!

சினிமாப் படம் பார்க்காமல் ரொம்ப நாள் மிஸ் மைத்ரேயியால் தாக்குப் பிடிக்க முடியாது.' அடிக்கடி யாருக்கும் தெரியாமல் கடைசிக்காட்சி, நைட் ஷோவுக்குக் கிளம்பி விடுவார் தன்னந் தனியாக. சினிமா மீது அவருக்கு இருந்த மோகம் இதுவரை ஒருவருக்கும் தெரியாமல், அந்தப் பயங்கர ரகசியத்தைப் பத்திரமாகக் காப்பாற்றி வந்திருந்தார். அதிலும், மிஸ் மைத்ரேயியின் அபிமான நடிகர் — சொல்லத்தான் வேண்டுமா? நீங்களே யூகித்திருப்பீர்களே! ஆம்— வேறு யாருமில்லை. சாக்ஷாத் ராஜீவ் குமாரே தான்!

ராஜீவ் குமார் மிஸ் மைத்ரேயியின் அபிமான நடிகர் என்று சாதாரணமாகச் சொல்லிவிட்டால் எப்படி? உண்மையைச் சொல்ல வேண்டுமானால் ராஜீவ் குமார் மீது மிஸ் மைத்ரேயிக்கு ஒரு வெறி நிறை வேறாத காதல்! காவியங்களில் வருகின்ற மாதிரி, மௌனத்திலேயே வாடுகின்ற ஒரு டச்சனைமைக் காதல்! ஆனால், கருக் மொருக் கென்று கஞ்சி போட்டதால் விறைப்பாக நிற்கும் அவர் கைத்தறிச் சேலையின் மடிப்புக்களின் கீழ் புதைந்து கிடக்கும் பரம ரகசியம் இந்தக் காதல்! ''சிடு மூஞ்சி'' என்று முதுகுக்குப் பின்னால் செல்லமாக மாணவிகள் அவரை அழைப்பார்கள். அந்தச் சிடு மூஞ்சி'க்குக் கூட இப்படிப்பட்ட எண்ணங்கள் மனத்தில் இருக்கக்கூடும் என்று, மாணவியரில் ஒருவர் கூடக் கனவிலும் நினைத்திருக்க முடியாது.



முதுக்குக்குப் பின்னால் ஒரு கம்பைக் கட்டி வைத்தாற்போல், நெட்ட நேராக, நிமிர்ந்த படி மிஸ் மைத்ரேயி, ராஜீவை வரவேற்பதற்காக, கல்லூரி அரங்கு வாசலில் தயாராக நின்றார்.


நெருப்புக் கல் போன்ற கடுகடுப்பான முகத்துக்குப் பின் புது மணப் பெண் சாந்தி முகூர்த்த இரவின்போது கணவனுக்காகக் காத்திருக்கும் தருணத்தில் நெஞ்சத்தில் ஏற்படும் படபடப்பு, மிஸ் மைத்ரேயிக்கு



இருக்கும் என்று யாராவது நினைத்திருக்க முடியுமா?

ராஜீவ் வந்துவிட்டான். உடனே மகளிர் கல்லூரி மகிழ்ச்சி ஆரவாரத்தில் பொங்கித் துள்ளி எழுந்தது. ராஜீவ் தனது பென்ஸ் காரை விட்டு இறங்கியது தான் தாமதம் நெருக்கித் தள்ளிக்கொண்டு, மாணவிகள் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். ஒரே சப்தம், கூச்சல், கைதட்டல், கலாட்டா!

இந்தக் குழப்பத்தின் நடுவே, மிஸ் மைத்ரேயி மாணவிகளை முறைத்து முறைத்துப் பார்த்தார். ''நல்ல குடும்பப் பெண்கள் நடந்து கொள்ளும் விதமா இது! இந்தப் பெயர் போன கல்லூரியில் படிக்கும் மாணவிகள் நடந்து கொள்ள வேண்டிய



விதமா இது!'' என்று உரக்கக் கூருமல், கோபமான பார்வையாலேயே மாணவிகளைக் கண்டிக்க முயன்ருர். ஆனல் அவரை யார் சட்டைப்படுத்துவார்கள்! ராஜீவே நேரில் வந்துவிட்ட பின், மிஸ் மைத்ரேயி யார் கண்ணுக்குத் தெரிவார்?

ராஜீவை அரங்கினுள் அழைத்துக்கொண்டு போய் உட்கார வைப்பதற்குள், மிஸ் மைத்ரேயிக்கும், வரவேற்புக் குழுவின் மற்ற அங்கத்தினர்களுக்கும் பெரிய பாடாகப்போய் விட்டது.

ராஜீவ் காலேஜ் அரங்கினுள் பிரவேசித்த வுடன் பலத்த கைதட்டல்களால் அரங்கமே அதிர்ந்து போய்விட்டது. முன் வரிசையில் தன் ஸீட்டுக்குப் போய்ச் சேரும்வரை, ராஜீவ் தன்னைச் சுற்றியிருக்கும் மனிதக் கடலைப் பார்த்துப் புன்னகைத்து, கையை அசைத்துக் கொண்டே ஒவ்வொரு அடியாய் மெல்ல நகர்ந்து நடந்து சென்ருன். முன் வரிசை யில் விழாவுக்கு அழைக்கப்பட்டிருந்த நகரத் தின் மற்ற சில பெரிய புள்ளிகளும் அமர்ந் திருந்தனர். ராஜீவுக்கு அவர்கள் அறிமுகம் செய்யப்பட்டார்கள். மற்ற பிரமுகர்களுடன் கைகுலுக்குவதும், கேட்கப்பட்ட கேள்வி களுக்குத் தகுந்த பதில் அளிப்பதும், தன் பெயரைக் கூவி ஆரவாரம் செய்யும் மாணவி களைத் திரும்பிப் பார்த்துக் கை அசைப்பதும், புதிதாகச் சந்தித்த பெரியவர்களிடம் ஆளுக் குத் தக்கபடி ஓரிரு வார்த்தைகளை மரி யாதைக்காகக் கூறுவதும் இதையெல்லாம் வெகு பக்குவமாக, நாசூக்காக, தானே இயங் கும் இயந்திரம் போல் ராஜீவ் செய்து வந் தான். இத்தகைய சூழ்நிலைகளில் பழகிப் பழகி எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற வித்தையை நன்கு கற்று மெருகேற்றி வைத்திருந்தான்.

இத்தனை நபர்களுடன் பேசிக் கொண் டிருந்த போதிலும், அவன் உதடுகள் சிரித்துச் சிரித்து ஏதோ வார்த்தைகள் கூறிக்கொண் டிருந்த போதிலும், அவன் மனம் அதில் இல்லை. அவன் கண்கள் அங்கும் இங்கும் பாய்ந்தன. நான்கு திசைகளிலும் சுற்றின. தேடின. தேடிக்கொண்டே இருந்தன.

அந்த அரங்கில் சுமார் இருபத்தி ஐயா யிரம் பேர்களாவது இருந்திருப்பார்கள். ஆனல் அவன் கண்கள் தேடிய அவள் எங்கே? அவளைக் காணவில்லையே!

உஷா! எங்கே அவள்? இத்தனை பேருக்கு மத்தியில் அவளை மட்டும் காணுமே! யாருக்காக அந்த விழாவுக்குத் தலைமை வகிக்க ஒப்புக்கொண்டாஞே, யாரைக் காண் பதற்கென்றே பிரத்தியேகமாக அந்த பங்க்ஷனுக்கு ராஜீவ் வந்திருந்தாஞே அந்த உஷா தென்படவில்லையே!

ராஜீவ் மனத்தில் பெருத்த ஏமாற்றம் தோன்றியது. ''சே! அவளுக்காகத்தானே வந்தேன். அவளையே காணுமே! எங்கே போய்விட்டாள்?''

தனக்கு ஏற்பட்ட ஆசை பங்கத்தின் ஆழம் அவனையே அதிர வைத்தது.

இரண்டு வாரங்களுக்கு முன்னல், உஷா அவனை அழைக்க வந்த நாள்முதல், அவளை முதன் முறையாகக் கண்டதிலிருந்து, ராஜீவ் மனத்தில் என்றும் தோன்ருத புதிய கலவரம் தோன்றியிருந்தது.

சிந்தனைகளை வேறு திசையில் திருப்ப எவ் வளவோ முயன்ருன். ஆனல் பலனில்லை. செக்குமாடு மாதிரி அவன் மனம் உஷாவையே சுற்றிச் சுற்றி வந்தது. அவளைப் பற்றி நினைக் காமல் அவனுல் இருக்க முடியவில்லை.

ராஜீவுக்குத் தன் மீதே அளவற்ற வியப்பு உண்டாயிற்று. ஒரே ஒரு முறை பார்த்த ஓர் இளம் பெண் — அவளிடம் ஏன் இந்த விசித்திர மோகம்? அவன் ஒன்றும் அனுபவம் இல்லாத இளைஞனை இல்லையே! காதலில் ஏங்கித் தவிக்கும் இளம் காலேஜ் ரோமியோ அல்லவே!

ராஜீவுக்கு வயது 45. பழுத்த அனு பவஸ்தன். அறிவு முதிர்ச்சி உள்ளவன். உலகத்தை எல்லாக் கோணங்களிலிருந்தும் பார்த்து நன்கு உணர்ந்தவன். அதுவுமில்லா மல் அவன் பார்க்காத பெண்ணு? அவன் அனுபவிக்காத அழகியா? பின்பு ஏன் இவ ளிடம் இந்த விசித்திர ஏக்கம்?

தன்னைத் தானே பலமுறை எச்சரிக்கை செய்துகொண்டான். ''டேய், ராஜீவ், ஜாக் கிரதை! இந்தப் பெண்ணுடன் சம்பந்தம் வைத்துக் கொள்ள முயன்ருல் அது பெரிய வம்பாக மாறிவிடக் கூடும்!''

உஷாவைப் பார்த்தால், அவள் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவள் என்பது வெட்ட வெளிச்சமாகப் புரிந்தது. யார் கண்டார்கள்? வயதான யுத்தக் குதிரை போன்ற தகப்ப ஞரும், பயமூட்டும் யுத்தக் கப்பல் போன்ற தாயாரும் இருப்பார்களோ என்னவோ! அவர்களுடைய கைப்படாத பொக்கிஷ மான பெண்ணின் மீது ராஜீவின் கைவிரல் லேசாகப் பட்டதாகத் தெரிந்தால் கூட, ஊரைக் கூட்டி குய்யோ முறையோ என்று ஒப்பாரி வைப்பார்களோ என்னவோ! வம்பை விலை கொடுத்து வாங்குவானேன்!

ராஜீவ் தன் வாழ்நாளில் எண்ணற்ற பெண் களோடு தொடர்பு வைத்துக் கொண்டது என்னவோ உண்மைதான். ஆனல் அவன்



''என்ன, அத்தான் காடுலே பத்துகன்னு யோசிக்கிறீயா? முதல் நாளே பெண்டாட்டி பேச் சைக் கேட்கக் கூடாதாம்! எங்க அம்மா செய்த வேலை இது.''

இமேஜ் பாதிக்கப்படும் வகையில் எந்த விவகாரத்திலும் அகப்பட்டுக் கொள்ளாமல், பொதுமக்களிடையில் அவனுக்கிருந்த உயர்வான நல்ல பெயருக்கு எந்த அவதூறும் ஒட்டிக் கொள்ளாதபடி, இதுவரை மிகவும் எச்சரிக்கையாகத் தப்பித்துக் கொண்டு வந்திருந்தான்.

இதை அவனால் எப்படிச் சாதிக்க முடிந்தது என்றால், ஆரம்பத்திலிருந்து அவன் தனக்கு லட்சுமண ரேகையைப் போன்ற ஒரு விதி முறையைத் தானே விதித்துக் கொண்டிருந்தான். அந்தக் கோட்டை அவன் இன்றுவரை தாண்டியிருக்கவில்லை. அது என்ன? மிக எளிமையான சட்ட திட்டம்—எந்த நல்ல, கௌரவமான குடும்பப் பெண்ணோடும் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது என்பதுதான்.

இதுவரை அவன் பழகியதெல்லாம் வேறு ரகத்தைச் சேர்ந்த பெண்களோடு. கால் கர்ல்ஸ்; மாடல்கள்; முன்னுக்கு வரத் துடிக்கும் புதிய நடிகைகள்; இது தற்காலிக உறவு என்று உணர்ந்து அதற்கு மேல் எதுவும் எதிர்பார்க்காத மேல் தட்டு சொஸைட்டி பெண்கள் — இப்படிப்பட்டவர்களுக்கு உலகில் பஞ்சமே இல்லாதபோது, நல்ல குடும்பப் பெண்களோடு வம்பில் மாட்டிக் கொண்டு வீண் பழியைத் தலை மேல் இழுத்துப் போட்டுக் கொண்டு, தனது இமேஜையும் நம்பர் ஒன் நட்சத்திரம் என்ற அந்தஸ்தையும் ஆபத்தில் சிக்க வைத்துப் பறி கொடுப்பானேன்?

அது மட்டுமே பிரதான காரணமில்லை. ராஜீவ் தனக்குத் தானே எந்தச் சிக்கல்களையும் உண்டு பண்ணிக் கொள்ள விரும்பவில்லை. கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணோடு தொடர்பு வைத்துக் கொண்டால் அதனால் வேறு விதமான விளைவுகளையும் சந்திக்க நேரிடலாம். அப்பெண்ணின் பெற்றோர்கள், ''பணம் வேண்டாம், எங்களுக்கு மானம்தான் பெரிது. குடும்ப கௌரவத்தைக் காப்பாற்ற எங்கள் மகளைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்'' என்று பிடிவாதம் பிடித்தால் அப்பப்பா! நினைப்பதற்கே பயமாக இருக்கது. 'திருமணம் செய்துகொள்ள முடியாது போங்கள்' என்று விரட்டி விடலாம். ஆனால் அப்பெண்ணின் பெற்றோர்கள் மானமே பெரிதெனக் கருதுபவர்களாக இருந்தால் வாயை மூடிக் கொண்டு விட்டு விடுவார்களா? அவனை நடுத் தெருவில் இழுத்துச் சந்தி சிரிக்கும்படி செய்துவிட மாட்டார்களா? சரி, பெற்றோர்கள் ஊர் வாய்க்குப் பயந்து மௌனமாக இருந்தாலும் கைவிடப்பட்ட பெண் தற்கொலை அது இதுவென்று ஏதாவது விபரீத முடிவுக்கு வந்துவிட்டால் அதில் அவன் பெயர் அடிபட்டு ஊரே நாறிப் போய் விடுமே! ''அய்யய்யோ! இந்தக் குடும்பப் பெண்களோடு தொடர்பு வைத்துக்கொண்டாலே ஆபத்துத்தான். நமக்கு இந்த வம்பே வேண்டாம்! இப்படியே சுதந்திரப் பறவையாக இருப்போம்!'' என்ற அடிப்படையில்தான் இதுவரை ராஜீவ் தனது உல்லாச வாழ்க்கையை நடத்தி வந்தான். இந்த மாறாத கொள்கையை முதன்மையாக மனத்

தில் கொண்டு பின்பற்றி வந்ததால் இதுவரை தனது நல்ல பெயரையும் வெற்றிகரமாகக் காப்பாற்றி வந்தான்.

என்ன இருந்தாலும் அவன் வாழ்வது தென் இந்தியாவில் இது ஹாலிவுட் அல்லவே! அதனால்தான், இவ்வளவு அஜாக்கிரதையாக இருக்க வேண்டிய நிர்ப்பந்தம்.

ஆனால் உஷா — அவள் அவன் அணுகக் கூடாத வர்க்கத்தைச் சேர்ந்தவள் ஆயிற்றே. ''வேண்டாம், ராஜீவ், வேண்டாம்! சொன்னால் கேளுடா! அவளைப் பற்றியே நினைக்காதே! அவளை மறந்துவிடு!'' ஆனால் முடியவில்லையே! இந்தப் பாழும் மனசு அவளையே பற்றிக் கொண்டு விடமாட்டேன் என்கிறதே! ஏன்? தெரியவில்லை! புரியவில்லை!

எங்கே? அவள் எங்கே? ''உஷா! இரண்டு வாரங்களாக உன்னையே நினைத்து நினைத்து, உன்னைக் காண வேண்டும் என்றே வந்தேனே! எங்கே ஒளிந்து கொண்டிருக்கிறாய்?''

விளக்குகள் குறைக்கப்பட்டன. திரை உயர்த்தப்பட்டது. கலை நிகழ்ச்சி ஆரம்பமாயிற்று.

வேண்டா வெறுப்புடன், பெருத்த ஏமாற்றத்துடன், ராஜீவ் இருட்டில் மேடையை நோக்கினான். ''ஏன் இதில் மாட்டிக்கொண்டேன்! சுத்த போராக இருக்கும் போலிருக்கு! எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் இங்கிருந்து கழட்டிக்கணும்'' என்று நினைத்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று அவன் கண்கள் விரிந்தன. உள்ளம் குபீரென்று துடித்தது. அதோ உஷா! மேடையில்! நடைபெற்றுக்கொண்டிருப்பது காளிதாசனின் ''சாகுந்தலம்'' அதோ சகுந்தலை வேடத்தில், அந்த எளிமையான உடையில் உஷா!

வர்ணிக்க முடியாத கிளர்ச்சி உள்ளத்தில் துள்ளி எழ, ராஜீவ் மெய் மறந்து அவளையே உற்றுப் பார்த்தான். ரத்த ஓட்டம் வேகமடையவே, அவன் உடல் முழுவதும் பற்றி எரிவது போல ஓர் உணர்வு. ''அட! அதற்குள் அவசரப்பட்டு விட்டேனே! இவ்வளவு துடிப்புள்ள பெண் நிச்சயம் நாடகத்தில் பங்கு பெறுவாள்! அதை நான் நினைத்துப் பார்க்கவில்லையே! மேடையில் தோன்றாமல் அதன் பின் ஒளிந்து கொண்டா இருப்பாள்?

ஒரு சிறு கடிகாரத்தின் 'டிக் டிக்' சத்தத்தை 4 அடி தூரத்திற்குள் இருந்தால்தான் மனிதனால் கேட்க முடியும். ஆனால் ஒரு நாய் 40 அடி தூரத்தில் இருந்தாலும் அந்த ஒலியைக் கேட்க முடியும். - பிரியா பாரதி



அதுதான் இவ்வளவு நேரம் அவளைக் காணவில்லை!'' பரவாயில்லை! அவன் வந்ததற்கும் பலனில்லாமல் போய்விடவில்லை.

அவனுக்குத் தெரியாமலேயே இடைவேளை வந்துவிட்டது. திரை இறக்கப்பட்டது. ''சார், மேடைக்கு வறீங்களா?''

மேடைக்குச் சென்றான். மிஸ் மைத்ரேயி வரவேற்புரை வழங்கினார். மாணவியருள் ஒரு சலசலப்பு. பல புருவங்கள் உயர்த்தப்பட்டன. பல ஓரக் கண் பார்வைகள் பார்க்கப்பட்டன.

''அட! நம்ம 'சிடு மூஞ்சி'க்குச் சிரிக்கக் கூடத் தெரியுமா?'' என்ற வியப்பு. தன்னையும் மறந்து, தன் இரும்பு கட்டுப்பாட்டையும் மீறி, வரவேற்புரை நிகழ்த்தும்போது, மிஸ் மைத்ரேயி ராஜீவ் பக்கம் திரும்பி ஒரு முறை புன்னகை புரிந்து விட்டார்! ராஜீவின் வருகையால் அந்தக் கல்லூரியே பெருமை அடைந்தது என்று கூறிவிட்டார்!

''ஏய்! நம்ம சிடுமூஞ்சிகூட... ஹீரோமன் பீயிங் தான் டீ!''

''ஆமாம் டீ! இன்னி வரைக்கும் நான அப்படி நினைக்கலே! பட் ஐ வாஸ் ராங்!''

ராஜீவுக்கு ஆள் உயரத்தில் ரோஜாப்பூ மாலை அணிவிக்கப்பட்டது. மைக் அருகில் வந்தான். நின்றான். பேசினான். அங்குள்ளவர்கள் அனைவருடைய உள்ளங்களையும் கொள்ளை கொண்டான்.

சிரிப்பூட்டும் புத்தி நுட்பமுள்ள பேச்சால் அவர்களைச் சிரித்து மகிழ வைத்தான். ஆழ்ந்த சில கருத்துக்களை வெளியிட்டு அவர்களை வியப்பில் ஆழ்த்தினான். ஆண் அழகு ததும்பும் தோற்றத்தால் அவர்களைச் சொக்கவைத்தான். அதுதான் ராஜீவ் குமார் — எவர்கிரீன் ட்ரீம் மேன்! ராஜீவ் — த லேடி கில்லர்!

தனது உரையின்போது உஷாவின் நடிப்பை வெகுவாகப் பாராட்டினான். அதை மற்றவர்கள் தவறாக யூகித்து விடக் கூடாதென்று நாடகத்தில் நடித்த மற்ற பெண்களைப் பற்றியும் ஒப்புக்காகச் சில பாராட்டு மொழிகளைக் கூறினான். உண்மையில், மற்றவர்களின் நடிப்பு என்ன, அவர்களையே அவன் பார்த்திருந்தால்தானே! உஷா மேடையில் தோன்றிய கணம் முதல் அவன் கண்ணுக்கு வேறு யாரும் எதுவும் தெரியவே இல்லை!

உரையாற்றல் முடிந்தது. ராஜீவைச் சுற்றி ஒரே கூட்டம், நெரிசல். அவன் உதடுகள் சிரித்துக் கொண்டே இருந்தன. உள்ளம் ஏமாற்றத்தால் புகைந்து புகைந்து எரிந்தது.

எப்படியாவது, ஒரு நிமிடமாவது உஷாவோடு தனியாகப் பேச வேண்டும். ஆனால் எப்படி முடியும்? இந்தக் கூட்டத்தின் மத்தியில் அது எப்படிச் சாத்தியமாகும்? அவனுடைய ஒவ்வொரு செய்கையையும், ஒவ்வொரு அசைவையும் ஆயிரம் கண்கள் ஆவலோடு இமைக்காமல் கவனித்து வருகின்றனவே!

இந்த மாதிரி நேரங்களில்தான், தன் புகழே தனக்கு ஒரு பெரிய இடைஞ்சலாக இருப்பதை உணர்ந்தான்.

சுற்றிச் சுற்றி விழிகளை உலவ விட்டான். உஷா கண்ணுக்குத் தென்படவில்லை. அவளுடன் பேச வேண்டும். ஆனால் எப்படி?

(தொடரும்)

புதிய கோல்கேட் ஃப்ளோரிகார்ட் டூத்பேஸ்ட்



குழந்தைகளுடைய
பற்களின் மென்மையான
எனுமல் எளிதில் துவாரங்களுக்கும்,
சிதைவுக்கும் உள்ளாகிறது.
பெரியவர்களுக்கும் பற்சிதைவுக்கு எதிராகப்
பாதுகாப்பு தேவை. புதிய ஃப்ளோரிகார்ட் டூத்பேஸ்ட்
பல் துவாரங்களுக்கும், பற்சிதைவுக்கும் எதிராக உங்கள்
குடும்பத்தினருக்கு நிச்சயமான பாதுகாப்பைத் தருகிறது.
துவாரங்களையும், பற்சிதைவையும் உண்டாக்கும் வாய் அமிலங்களுக்கு
எதிராகப் பற்களை உறுதிப்படுத்துவதற்கென பல் எனுமலுடன்
இணைந்து செயல்படும் விசேஷ கோல்கேட் எம்எஃப்பி
ஃப்ளோரைட் அதில்
உள்ளது. கோல்கேட்
ஃப்ளோரி கார்ட் புல்லரிக்கும்
புதுச்சுவை கொண்டது.
உங்கள் குடும்பத்திற்கு
இன்றே வாங்குவீர்.




உலகெங்கும் உள்ள ஆராய்ச்சி சாலைகளில்
சோதிக்கப்பட்டுள்ள எம்எஃப்பி ஃப்ளோரைட்
துவாரங்களுக்கும், சிதைவுக்கும் எதிராகப்
பற்களை உறுதிப்படுத்துகிறது என்பது
மருத்துவ ரீதியாக நிரூபணமாகியுள்ளது.
கோல்கேட்டின் நீண்ட ஆராய்ச்சி மட்டுமே
இந்த தனிப்பட்ட எம்எஃப்பி ஃபார்முலாவை
உங்களுக்கு வழங்க முடியும்.

ஃப்ளோரிகார்டில் உள்ள எம்எஃப்பி ஃப்ளோரைட் எனுமலுடன் இணைந்து துவாரங்களுக்கும், சிதைவுக்கும் எதிராக உங்கள் பற்களை உறுதிப்படுத்துகிறது.

இப்பொழுது தமிழ்நாடு மற்றும் கேரளாவில் மட்டுமே கிடைக்கும்.

CFT-G-2 TM



On the spot

சேலத்தில் 'மீனாட்சி'



✖ தீபா டான்ஸ் மாஸ்டர் விமலா.

"ஆடு, மாடு, குரங்கு, நாய் என்று வரிசையாக எந்தப் பிராணியையும் விட்டு வைக்காமல் படமெடுத்து விட்டார்கள். நாங்கள் யாருமே நடிக்க வைக்காத மானை நடிக்க வைக்க இருக்கிறோம்'' என்றதும் என்னையும் மீறி ஆவல் எழ சேலத்துக்குப் புறப்பட்டேன். ஆனால் அங்கு அல்ல ஷூட்டிங். படப்பிடிப்பு நடக்கும் இடம் பனைமரத்துப்பட்டி.

காரை விட்டுஇறங்கிய உடனேயே யாரோ என்னை இடித்துத் தள்ளுவது போல் தோன்றவே, திரும்பிப் பார்த்தேன். ஒரு மான்!

'வரவேற்பு பலமாகத்தான் இருக்கிறது' என்று எண்ணிக் கொண்டேன். ஒன்றுக்கு மூன்றாக மான்கள் இருந்தன. அதில் ஒன்று குட்டி. எல்லாமே பார்க்க ரொம்ப அழகாக ஆரோக்கியமாக, துள்ளியபடி இருந்தன. ''தீபாவுடன் நடிக்கப் போகிறோம் என்ற உற்சாகமா? எங்கே அவர்?'' என்று இயக்குனர் ராமநாராயணனைக் கேட்டேன். அவர் சுட்டிக் காட்டிய இடத்தில் தீபாவும் விஜய பாபுவும் ரகசியம் பேசிக் கொண்டிருந்தார்கள். இதற்குள் டான்ஸ் மாஸ்டர் விமலா விசில் ஊத பாட்டு ஆரம்பமாகியது.

ஒரு பெரிய கிளை. அந்தக் கிளையின் மேல் தீபா பள்ளிகொள்ள, பாடிக் கொண்டே வந்த விஜய பாபு கிள்ள, தீபா துள்ள, நழுவிவிடாமல் விஜய் பாபு அள்ள ''கட்'' என்றார் ராமநாராயணன்.

அடுத்த காட்சிக்கு ஆயத்தங்கள் நடந்து கொண்டிருக்கும்போது திடீரென்று ஒளிப்பதிவாளர் லோகய்யாவைக் காணவில்லை. அதே மரத்தின் உச்சியிலிருந்து அவர் குரல் மட்டும் கேட்டது. புதுமையான வழிகளில் ஒளிப்பதிவு செய்ய வேண்டும் என்ற ஆர்வம் கொண்ட லோகையா கேமிராவை மேலே ஜாக்கிரதையாக அனுப்பும்படி கேட்டுக் கொண்டிருந்தார். தமது கேமரா பார்வையைத் தடை செய்து கொண்டிருந்த ஒரு



∧ ✕ விஜயபாபு, தீபா

< ✕ மானுடன் தீபா

கிளையை வெட்டும்படியும் கூறினார். சடசட வென்ற சத்தம். டான்ஸ் மாஸ்டர் விமலா வின் தலையைக் கிளை பதம் பார்க்க, எல் லோருமே சிறிது நேரம் ஸ்தம்பித்து நின்று விட்டார்கள். 'அடி பலமாகப் பட்டிருக் குமோ? படப் பிடிப்பை ரத்து செய்ய வேண் டுமோ?' என்றெல்லாம் நினைக்க ஆரம்பித் தார்கள். ஆனால் சிறிது தேய்த்து விட்டுக் கொண்டு நடனம் ஆடக் கற்றுக் கொடுக்க வும் ஆரம்பித்து விட்டார் விமலா.

''நான் மட்டும் கீழே இறங்காமல் அந்தக் கிளையிலேயே படுத்திருந்தால் என் கதி என்ன ஆகியிருக்கும்'' —இது தீபாவின் சந்தேகம்.

ஒரு சின்ன மான் தன் கண் எதிரிலேயே தன் எஜமானனும் அவரது மனைவியும் கொல்லப்படுவதைப் பார்க்கிறது. கொன்ற வர்களை வஞ்சம் தீர்க்கவும் செய்கிறது. இதை எப்படிச் சாதிக்கிறது என்பதுதான் கதை. ராம் ரஹீம் என்ற பெயரில் பல கதைகள் எழுதியுள்ள ராமநாராயணனிடம் ''இப்படத் தில் என்னென்ன புதுமைகள்?'' என்று கேட்ட பொழுது மானில் ஆரம்பித்து மட மட வென்று அடுக்கிக் கொண்டே போனார். இவ ருடன் சேர்ந்து ரஹீம் என்ற பெயரில் பல திரைப் படங்களுக்குத் திரைக்கதை வசனம் எழுதியவர்தான் இன்றைய இயக்குனர் காஜா. இன்று இவரும் கந்தசாமியுடன் கூட்டாக முதன் முதலாக 'மீனாக்ஷி' என்ற இந்தப் படத்தை இயக்குகிறார்.

'' 'மீனாக்ஷி' என்று இதற்கு ஏன் பெயர்?''

''மிருகங்களை வைத்து 'மீனாக்ஷி குங்குமம்' எடுத்தோம். நன்றாக ஓடிற்று. அதனால் எனது முதல் படத்துக்கு அந்தத் தலைப்பின் முதல் பாதியையே பேராகவைத்துவிட்டேன். இதிலும் மிருகங்கள் இருக்கிறதல்லவா?'' என்றார்.

இதற்குள் வேறொரு இடத்துக்குப் படப் பிடிப்பு மாற்றப்பட்டது. பக்கத்தில்தான். எல்லோரும் வந்து விட்டார்கள். வராமல் சண்டித்தனம் செய்தது மான் மட்டும்தான். ஆனால் தீபா போய் அழைக்க உடனே வந்து விட்டது. ''மானை ஒரு 'மான்' அழைத்ததும் வந்துவிட்டது பாருங்கள்'' என்று வியந்தார் அதனைப் பழக்குபவர்.

ஒரு மாதம் முழுக்கச் சேலத்தில் தங்கி இருந்து படத்தை முடித்துக் கொண்டு சென்னை திரும்பிவிட நினைத்திருக்கிறார்கள். அவர்களது உற்சாகத்தையும் வேகத்தையும் பார்த்தால் அதற்கு முன்பே கூடத் திரும்பி விட்டாலும் அதிசயமில்லை.

அன்றைய ஷூட்டிங்குக்குப் பிறகு, மாலை யில் விஜய பாபுவின் அறைக்குச் சென்றால் அங்கு அவர் இல்லை. சென்னையில் 'சங்கரா பரணம்' பார்க்க இயலாததால் வந்த இடத் தில் படம் பார்க்கச் சென்று விட்டாராம்!

—சலன்



✕ இயக்குனரில் ஒருவர் ராம நாராயணன், ஒளிப்பதிவாளர் லோகைய்யா

நறுக் பதில்கள்!

✕ ம. பழனிவேலு, கணியம்பாடி

கே. மனோகரின் நாடக சேவை அப்படி பாராட்டும் படியாகவா இருக்கிறது?

ப: மனோகர் வில்லனாக நடித்தாலும் நல்ல மனிதர். ஜென்டில்மேன். தம் வருவாய்க்காக நாடகம் நடத்துகிறார் என்று சொல்ல முடியாது. பலரது பிழைப்புக்காகவும் கலை ஆர்வத்துக்காகவும் நாடகங்களை நடத்தி வருகிறார். சில நல்ல நாடகங்களைப் போட்டிருக்கிறார். - மேஜிக் காட்சிகள் இல்லாவிட்டாலும் சோபிக்கக் கூடியவை.

✕ கே. பிரதாப் சிங், அரகண்ட நல்லூர்

கே. நீர் திமர் திமர் என்று தத்துவம் உதிர்க்கிறீரே?

ப: நீங்கள் சொல்கிறீர்கள் தத்துவம் என்று; வேறு சிலர் தத்து(பித்து)வம் என்று கூறுகிறார்களே, சுவாமி!

✕ குமருகுமரு, பாரக்பூர்

கே. தமிழ் கதைகள் எழுதும் நடையின் சமீப காலத்தில் புதுமைகளை நிறையப்பேர் செய்கிறார்களே. அவர்களில் உங்களைக் கவர்ந்தவர் யார்?

ப: நடை புதுமை இரண்டு பேருக்குத்தான் இயற்கையாகக் கைவந்துள்ளது. அந்த இரண்டு "பெண்மணிகள்" தான் முன்னோடிகள். மற்றவர் கடை கோடிகள்.

✕ ஆ. சீனிவாசன், திருச்செந்தூர்

கே. ஒரு அறுவை ஜோக் சொல்லுங்கள் (சொந்தமாக இருக்கட்டும்)

ப: நான் சொந்தமாக ஒரு ஜோக் சொன்னாலும் அது ஆட்டோமாடிக்காக அறுவை ஜோக் காகிவிடும். சரி ஜோக்கிற்கு வருகிறேன். இரண்டு பேர் மூன்றாவது ஆசாமியைப் பற்றிப் பேசிக் கொண்டு இருக்கிறார்கள். முதல் ஆசாமி: அது என்னப்பா, அவர் முகத்தில் சவரமே இல்லை? இரண்டாவது: எப்படியப்பா சவரம். அவர்தான் பிளேடு தயாரிப்பாளர் ஆச்சே!

✕ எஸ். வீரராம், தக்கலை

கே. உங்களுக்கும் பிடித்த எழுத்தாளர் ஜாம்ஸ் ஹேட்லி என்று கூறியிருந்தீர்கள். அவர் எழுதிய புத்தகங்கள் பற்றி விவரம் தெரிவிக்க முடியுமா?

ப: முடியும். சுமார் 16 நாவல்கள் எழுதியிருக்கிறார். துப்பறியும் கதைகள். அருமை நகைச்சுவையுடன் இருக்கும். டோவர் ஒன், டோவர்டூ, டோவர் த்ரீ, ஒன்லி விக்டிம் போல, டோவர் அண்ட் அகெய்ன் இத்யாதி இத்யாதி.

✕ ஞானவதி சீனிவாசன், திருநெல்வேலி-2

கே. 'சட்டி சுட்டதடா, கை விட்டதடா' என்ற தத்துவம் வாழ்க்கைக்கு உதவாத தத்துவமல்லவா? துணி அல்லது குறடு உபயோகித்தால் சட்டி ஏன் சுடப்போகிறது?

ப: சட்டி சுடும் என்று தெரியாததால் அல்லவா வருகிறது வம்பு. சட்டியை எடுக்கு முன் சுடுமோ என்று ஒரு கணம் யோசிக்க வேண்டாமோ? எடுத்த பின்பு கைசுட்டால் போட்டுவிடுவதுதான் வழி. சட்டியும் உடையக் கூடும். ஒரு காரியத்தில் இறங்கு முன் அதில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களையும் சீர்தூக்கிப் பார்த்துவிட்டுத் துவங்க வேண்டும். இல்லாவிடில் காரியம் ஆகாதது மட்டுமல்ல; பாழாகப் போகும் வாய்ப்பும் உண்டு. ஒருசிலர் என்ன பிரமாதமாகச் சுடப் போகிறது என்று அலட்சியமாகப் பல சட்டிகளைத் தூக்கிப் பிறகு கையை விட்டு, சட்டியை உடைத்து இருக்கிறார்கள். (இந்தப் பதில் தத்துவக் கேள்வி கேட்பவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாக இருக்கும் என்று நம்புகிறேன்!)

ரூ. 5 பரிசு பெறுபவர்

ம. பழனிவேலு
2-70/1. பெரிய தெரு,
கணியம்பாடி-632102









ஒரு யக்ஷகானக் கலைஞரின் மகனான அவர் உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோதே ''சந்தமாமா''வில் கதைகள் எழுதத் தொடங்கினார். பிற்பட்டோர் வகுப்பில் பிறந்திருந்ததால் கடற்கரையைச் சுற்றியிருந்த மீனவர்கள், தொழிலாளர்களின் துயரங்கள் அவருக்கு நன்கு தெரிந்திருந்தன.

''கராவளி'' என்ற நெடுங்கதை ''கன்னடப் பிரபா'' தினசரியில் வெளிவர ஆரம்பித்ததுதான் தாமதம். தெற்கு கனராவிலிருந்த மீனவர்கள் இதற்கு ஆட்சேபணை தெரிவித்தார்கள். முக்கியஸ்தர்களுக்கு எதிர்ப்புத் தந்திகள் பறந்தன. உள்ளூரிலிருந்த கன்னடப்பிரபாவின் கிளை ஸ்தாபனத்தை மிரட்டினார்கள். இவருடைய வீட்டைக் கூடக் கொளுத்திச் சூறையாட மீனவர்கள் எண்ணியிருந்தனர். கலாட்டாவும் குழப்பமும் ஏற்படுவதைத் தவிர்க்க, நெடுங்கதை பிரசுரமாவது பாதியில் நிறுத்தப்பட்டது!

கர்நாடக மாநிலத்தின் மற்றப் பகுதியிலிருந்த வாசகர்கள் கதையை நிறுத்தியதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். இதனால் நிலைமையில் மேலும் குழப்பம் ஏற்பட்டது. இதே நாவலை ஜீதா புக் ஹவுஸ், புத்தகமாகப் பிரசுரிக்க முன்வந்தது. அதைப் படித்த வாசகர்கள் அதன் உள்ளடக்கத்தையும் நடையையும் கண்டு மகிழ்ந்தார்கள்.

''கராவளி'' நாவலின் படப்பிடிப்பு துவங்கியது. உடனே மீனவர்கள் படப்பிடிப்பை நடத்த விடாமல் பல வகைகளிலும் தொந்தரவு கொடுக்க ஆரம்பித்தனர். ஆத்திரத்தில் கம்பு கற்களை வீசி எறிந்தார்கள். அவர் ஒரு தந்திரத்தைக் கையாண்டார். படப்பிடிப்பு குறிப்பிட்ட தேதியில், குறிப்பிட்ட இடத்தில் நடத்தப்படும் எனப் பத்திரிகையில் அமர்க்களமாக விளம்பரம் தந்துவிட்டு, வேறொரு இடத்தில் படப்பிடிப்பைச் செய்து முடித்துவிடுவார்!

மீனவர்கள் இந்த விவகாரத்தை அப்படியே விட்டுவிடுவதாக இல்லை. டெல்லிக்குச் சென்றார்கள். சென்ஸார்போர்டுக்கும் போனார்கள். இப்படத்தை வெளியிடுவதற்கு அனுமதி தரக்கூடாது என்று அவர்கள் கூறியதுடன் அப்படி ஒருவேளை அனுமதி தந்துவிட்டால் தங்களது வோட்டுக்களில் ஒன்றுகூட ஆளுங் கட்சிக்குக் கிடைக்காதுஎன்று அச்சுறுத்தினர்.

படத்தின் கதாநாயகி ஒரு மீனவ இனத்தவள். கதாநாயகன் ஒரு முஸ்லிம். முஸ்லிம் பாத்திரத்தை இந்துவாக்க வேண்டும் என்று கூக்குரல் எழுந்தது. ''எதையும் மாற்ற முடியாது'' என அவர் ஆணித்தரமாகக் கூறியதுடன் இதையொட்டி என்ன சங்கடங்கள் வந்தாலும் சமாளிக்கச் சபதமேற்றார். படத்தை சென்ஸார் போர்ட் பார்த்துவிட்டு இதற்கு ''யு'' சர்டிபிகேட் தந்தது. இருப்பினும் கர்நாடக அரசு படத்தைத் திரையிட அனுமதிக்கவில்லை. மறுபடியும் தணிக்கைக் குழுவிடம் அபிப்பிராயம் கோரப்பட்டது. கர்நாடக அரசுக் காரியதரிசியிடம் இப்படம் சம்பந்தப்பட்ட 'ஃபைல்' நகராமல் பல மாதங்கள் முடங்கிக் கிடந்தது.

படத் துறையிலிருந்த கெம்பராஜ் அர்ஸை அவர் அணுகி, படத்தை வெளியிட உதவி கோரினார். சினிமாவை விட அரசியல்தான் முக்கியம் என்று கூறிய கெம்பராஜ், ''மீனவர்களின் 50,000 ஓட்டுக்களை கட்சி எப்படி இழக்க முடியும்'' என ஆணித்தரமாகக் கேட்டபோது, நாடார் சமூகத்தாரின் எட்டு லட்சம் ஓட்டுக்களைத் தம்மால் திரட்ட முடியும் என கெம்பராஜிடம் அவர் உறுதியளித்தார். அதோடு சில கிராம முக்கியஸ்தர்களுக்கும் பொது மக்களுக்கும் அறிக்கை விட்டார். ஏராளமான கடிதங்கள் அவருக்கு ஆதரவாகக் கர்நாடக அரசுக்கு வந்து குவிந்தன. அந்தக் கட்டத்தில் மாநில முதல்வர் தேவராஜ் அர்ஸ் படம் பார்க்கச் சம்மதித்தார். வெற்றி புரட்சி எழுத்தாளரின் பக்கம் இருந்தது. தென் கனரா தவிர பிற மாவட்டங்களில் படத்தைத் திரையிட அனுமதி கிடைத்தது.

புரட்சிகரமான ''கராவளி''யைத் தொடர்ந்து வேறு பல படங்கள் எடுத்தார். எல்லாம் புரட்சிகரமான கருத்துக்கள் கொண்டவைதாம்.

அவர்தான் — கதாசிரியர், நடிகர், இயக்குனர் - விஷ்ணுகுமார்.

பேட்டி: டி. எம். ஆர்.

கர்நாடகத்தைக் கலக்கியவர்!

பூக்கள்



வாஸந்தி

அந்தப் பெரிய இரட்டை ரோடைப் பார்த்தபடி அந்தடிபார்ட்மெண்டல் ஸ்டோர் இருந்தது. பிரும்மாண்டமான கண்ணாடி சுவர்களுக்குப் பின்னால் கடையின் உட்புறம் துல்லியமாகத் தெரிந்தது. ஆளுயரத்துக்கும் மேல் நின்ற துவாரபாலக பொம்மைகள் - பொம்மைகளின் இடுப்பில் ''Sold'' என்ற கொட்டை எழுத்துக்கள். இந்த ராட்சஸப் பொம்மைகளை வாங்கி வைக்க ஒரு ராட்சஸ வீடு வேண்டும் என்று நினைத்தபடி, கடைக்குள் நுழைந்து தயக்கத்துடன் நந்தினி பார்வையை ஓட்டினாள்.

எங்கே திரும்பினாலும் சித்திர வேலைப்பாடு செய்யப்பட்ட வெண்கல, பித்தளை, வெள்ளி, மரச் சாமான்கள். இடையிடையே அலங்காரமாகச் சாயம் பூசப்பட்ட உதட்டுப் புன்னகையுடன் சேல்ஸ் கேர்ல்ஸ் நளினமாக நின்றார்கள். அவர்களை ஓர் ஆவலுடன் நந்தினி பார்த்தாள். இவர்களில் ஒருத்தியாகப் பிருந்தா இருப்பாளோ? 'ஹாண்டிக்ராஃப்ட்' பிரிவில்தான் அவள் இருப்பதாக யாரோ தகவல் சொன்னார்கள் நேற்று - இருபது வருஷ இடைவெளிக்குப் பிறகு!

''உள்ளே வாருங்கள் மேடம்! உங்களுக்கு என்ன வேண்டும்?''

ஓர் ஆண் நின்றிருந்தான், மிக நாகரிகமாக வார்த்தைகளை உச்சரித்தபடி, புன்னகைத்தபடி.

அவள் ஒரு லேசான கூச்சத்துடன் அவனைக் கேட்டாள்: ''இங்கே ப்ருந்தா என்று ஒரு லேடி இருக்கிறாளா?''

''மிஸஸ் ப்ருந்தா ராமஸ்வாமி?''

''ஆமாம்.''

''ஓ யெஸ். அவர்தான் எங்கள் ஸேல்ஸ் எக்ஸிக்யூடிவ்.''

''நான் அவளைப் பார்க்க வேண்டும்.''

''வாருங்கள்.''

அவள் அவன் பின் தொடர்ந்தாள். ஓர் அறையின் வாசலில் பெயர்ப் பலகை தொங்கிற்று-

''மிஸஸ் பிருந்தா ராமஸ்வாமி!''

ஓ. இவள் பெரிய மனுஷியாகி விட்டாள் என்று நினைக்கையில் ஒரு சின்ன வியப்பும் சந்தோஷமும் ஏற்பட்டது.

''ப்ளீஸ் வெய்ட். உள்ளே அவர் இருக்கிறாரா என்று பார்த்துவிட்டு வருகிறேன். உங்கள் பெயர்?''

''நந்தினி.''

அவன் உள்ளே சென்று அடுத்த விநாடி வெளியில் வந்தான்.

''ஸாரி மேடம். அவர் வெளியில் போயிருக்கிறார். வர அரை மணி நேரம் ஆகும். காத்திருக்கிறீர்களா?''

அவள் ஒரு விநாடி யோசித்துவிட்டு 'சரி' என்றாள்.

''அவருடைய அறையில் உட்கார்ந்திருங்கள்.''

''ஓ.கே. தாங்க்யூ.''

அறை துப்புரவாக இருந்தது. மேஜை மேல் காகிதங்கள் ஒழுங்காக அடுக்கப்பட்டிருந்தன. பார்க்கப்பட வேண்டிய காகிதங்கள் பேப்பர் வெயிட்டுக்கு அடியில் பத்திரமாக இருந்தன!

நந்தினிக்குள் லேசான திகைப்பு ஏற்பட்டது. அவளுக்குத் தெரிந்த பிருந்தா தானா இது?

வெள்ளையாகப் புன்னகைக்கும், சதா ஒரு பாட்டை முணு முணுக்கும் பிருந்தா - இரட்டைப் பின்னல்களைக் காதோரம் மேட்டில் பின்னி டிசம்பர் பூக்களைக் காலையிலிருந்து மாலை வரை உருக்குலையாமல் சுமக்கும் ப்ருந்தா!

பூக்கள்!

பிருந்தாவின் நினைவு வரும்போதெல்லாம் நினைவுக்கு வரும் பூக்கள். பிருந்தாவின் தலையில் பூக்கள் வாடாது.

அதைப் பற்றி யாராவது சொன்னால், ப்ருந்தா பெருமையுடன் புன்னகைத்துக் கொள்வாள்.

''நான் ரொம்ப 'சென்ட்!' பதிவிரதைகளுக்குத் தலையில் பூ வாடாது என்று கேள்விப்பட்டதில்லே?''

''ஓ, எத்தனை அத்தை பாட்டி இவள்?'' என்று தோழிகள் சிரிப்பார்கள்.

''நாங்கள்ளாம் மூளையை உபயோகிக்கிறோம். மண்டை சூடாறது. பூ வாடிப் போறது. தேர் இஸ் தி ஸயன்டிஃபிக் ரீஸன் ஃபார் எவ்ரிதிங்!''

''சரி, நான் மூளையை உபயோகிக்கிறதில்லே, போங்கள்!''

இப்பொழுது இந்த அறையையும் அதில் தெரிந்த அதிகார தோரணையையும் பார்க்கையில், தோழியரில் மிக அதிக அளவில் மூளையை உபயோகிக்கிறவள் இவள்தான் என்று தோன்றிற்று.

பிருந்தா வேலை பார்க்கிறாள் என்று நம்புவது கஷ்டமாக இருந்தது.

எந்தக் கம்பெனிக்கோ ஜெனரல் மானேஜராக இருந்தவரின் ஒரே செல்லப் பெண். அவளுக்குப் பிடித்த மாதிரி சாப்பாடு மத்தியானம் காலேஜுக்கு ஃப்ளாஸ்கில் சூடாக வரும்.

தனியாக தங்க நிற ப்ளூக்கில் ஓர் ஓரமாக அமர்ந்தபடி. அவள் மாலையில் வீடு திரும்பும்போது இரட்டைப் பின்னலில் அப்போதுதான் அமர்ந்த மாதிரி டிஸம்பர் பூக்கள் புதுசாகத் தெரியும்.

பி. ஏ. இறுதிப் பரீட்சைக்கு முன்னால் அவள் திடீரென்று ஒரு நாள் தன் சுபாவமான வெள்ளைப் புன்னகையுடன் ''எனக்குக் கல்யாணம் நிச்சயமாகியிருக்கு. பதினைஞ்சு நாளில் கல்யாணம்'' என்றாள்.

எல்லோருக்கும் தூக்கி வாரிப் போட்டது. ஏதோ சோகச் செய்தியைக் கேட்ட மாதிரி அவளுடைய சிரிப்பு அசம்பாவிதமாகத் தெரிந்தது.

சொல்லத் தெரியாத ஒரு சங்கடத்தில் ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்கையில் ஏன், ஏன், இத்தனை சீக்கிரம் என்கிற கேள்வி குரலெழும்பாமல் தயங்கி நின்றது.

''ஏய், என்னைக் கங்க்ராசுலேட் செய்ய மாட்டீர்களா?''

''ஓ! ஸாரி. கங்கிராசுலேஷன்ஸ்!''

''என்ன செய்கிறார்?''

''எப்படி இருக்கிறார்?''

''பம்பாயில் ஒரு கம்பெனியில் எக்ஸிக்யூடிவ். வெரி ஹாண்ட்ஸம்.''

''ரியலி?''

மறுபடியும் ஆச்சரியமாக இருந்தது.

எப்படி, எப்படி சாத்தியமாயிற்று என்ற கேள்வி மறுபடியும் குரலெழாமல் நின்றது.

பிருந்தாவின் மிக சாதாரணமான அம்மைத்தழும்பு முகம் ஒரு பாமர வெகுளித்தனச் சிரிப்புடன் அவர்களைப் பார்த்தது. ஓ, அவள் கன்னங்கள் எப்படிச் சிவந்து போயிருந்தன? கண்களில் எங்கிருந்து அந்த மையல் புகுந்து கொண்டது?

அதுதான் அவளைக் கடைசியாகப் பார்த்தது. அவளுடைய கல்யாணத்தின்போது பரீட்சைகள் துவங்கிவிட்டன. யாருக்கும் திருமணத்துக்குப் போக முடியவில்லை. பரீட்சையும் செய்யாமல் பிருந்தா பம்பாய்க்கும் கிளம்பிவிட்டாள் என்று தெரிகையில் அக்கிரமமாக இருந்தது. பி.ஏ.கூட முடிக்காதவள் இப்பொழுது எப்படி இப்படி ஒரு பொறுப்புள்ள உத்தியோகத்தில் இருக்கிறாள்?

அறைக்குள் ஓர் அம்மாள் நுழைந்தாள். பட்டுப் புடவை, நகை, கொண்டையாய். நந்தினியை விநோதமாகப் பார்த்துவிட்டுப் பிரதான இருக்கையில் அமர்ந்ததும் நந்தினிக்குத் தூக்கி வாரிப் போட்டது.

இதுவா பிருந்தா? இத்தனை மாறியிருக்க முடியுமா? இது வேறே யாரோவாக இருக்க வேண்டும்.... உற்றுக் கவனிக்கையில் அந்தக் கண்களில் பழைய ப்ருந்தா எட்டிப் பார்க்கிற மாதிரி இருந்தது.

''நீங்கள் பிருந்தாவா?''

அவளை நோக்கிய பார்வையில் ஒரு இலேசான சலனம் தெரிந்தது.

''ஆமாம்.''

''மகாராணீஸ் காலேஜ்ல படித்த....''

''ஆமாம்! ஓ நந்தினி நீயா?''

''நானேதான்! அடையாளம் தெரியல்லியா?''

''நன்றாத் தெரியறது. நீ மாறவேயில்லே நந்தினி!''

''ஏன் பின்னே முதல்லே தெரிஞ்சுக்கல்லே?''

பதில் சொல்லாமல் ப்ருந்தா புன்னகைத்தாள்.

''ஐ ஆம் வெரி ஹாப்பி, நந்தினி!'' என்றாள் பார்வையில் சந்தோஷத்தையே காட்டாமல்.

இது ப்ருந்தாவா?





''ஒரே ஒரு பாட்டுக்கு மட்டும் எங்க வீட்டு டி.வி. அடிக்கடி அபிநயம் பிடிக்குது!''
''என்ன பாட்டு?''
''அலைபாயுதே....

அதிர்ச்சியாக இருந்தது. இருபதே வயது கூடிக் காண்பித்தது முகம்.

''நீ ரொம்ப மாறிட்டே பிருந்தா.''

எந்த விதமான உணர்ச்சியும் காட்டாமல் பிருந்தா புன்னகைத்தாள். மனத்தளவில் கூட இவளுக்கு ரொம்ப வயசாகிவிட்டது என்று தோன்றிற்று.

''எத்தனை நாளா இங்கே வேலை பார்க்கறே பிருந்தா?''

''பத்து வருஷமா!''

நந்தினிக்கு ஆச்சரியமாக இருந்தது. ''நீ பம்பாயிலே இருக்கேன்னு நினைச்சேனே?''

''ஓ. பம்பாயை விட்டு அப்பவே கிளம்பிட்டேனே. எனக்குக் கல்யாணமாகி இரண்டு மாசத்துக்கெல்லாம் என் அப்பா செத்துப் போனது உனக்குத் தெரியாது?''

''ஓ, நோ!''

''மாஸிவ் ஹார்ட் அட்டாக். முன்னாடி தான் போயிடுவோம்னு அவருக்குத் தெரியும்போலிருக்கு. அதான் அவசரமாக எனக்குக் கல்யாணம் பண்ணிட்டார்!''

நந்தினி பேசாமல் அவளைப் பார்த்தாள். எதிரில் உட்கார்ந்திருந்தவள் யாரோ என்று தோன்றிற்று. இவள் பிருந்தா இல்லை. நமக்குத் தெரியாதவள். இந்தப் பார்வையும் சிரிப்பில்லாத பேச்சும் பிருந்தாவுடையதில்லை.

''அப்புறம்?''

''அப்புறம் இங்கேயே வந்துட்டோம்.''

''உன் அப்பாவுடைய பிஸினஸ்ஸை உன் கணவர் பார்த்துக்கிறாரா?''

''ஆமாம்.''

மறுபடியும் சிரிப்பு. உணர்ச்சியற்ற சிரிப்பு.

''குழந்தைகள் ''

''இல்லை. நல்ல வேளை.''

நந்தினி வியப்புடன் நிமிர்ந்து பார்த்தாள்.

''நமக்கெல்லாம் குழந்தைகள் இல்லாததே ரொம்ப நல்லது நந்தினி!''

''ஏன் அப்படிச் சொல்றே?''

''குழந்தைகள் பிறந்தா சந்தோஷமா அவை இருக்கணும். இந்த உலகம் நாளுக்கு நாள் கேவலமாப் போயிண்டிருக்கிறதைப் பார்த்தா ஒரு குழந்தையும் சந்தோஷமாச் சிரிக்க முடியாதுன்னு தோணறது!''

நந்தினிக்குக் காரணம் புரியாமல் மனசில் ஓர் அதிர்வு ஏற்பட்டது. ''உனக்கு ரொம்ப வயசாயிடுத்து, பிருந்தா!''

''ரொம்ப.''

''பிருந்தா, உன்னைப் பத்தி நினைக்கும் போதெல்லாம் உன் பூதான் எனக்கு நினைவுக்கு வரும். எங்கே இப்பப் பூவே காணோம் உன் தலையிலே?''

பிருந்தா அதற்குப் பதிலே சொல்லாமல் புன்னகைத்தாள்.

டெலிஃபோன் ஒலித்தது.

அதைக் கவனித்துவிட்டு பிருந்தா லேசான புன்னகையுடன் சொன்னாள்:

''நான் அவசரமா ஓர் இடத்துக்குப் போகணும் நந்தினி. மறுபடியும் சந்திக்கலாமா?''

''ஓ! யெஸ்.''

''இங்கே சாமான் மலிவாக் கிடைக்கும். வாங்கிண்டு போ. நான் வரட்டுமா?''

அவள் விருக்கென்று கிளம்பிச் சென்ற பிறகுதான் அவள் நம்மைப் பற்றி ஏதும் விசாரிக்கவேயில்லை என்று நினைவுக்கு வந்தது. தன்னுலகத்திலேயே எப்படி மூழ்கியிருக்கிறாள் இவள் என்று லேசான ஒரு நமைச்சல்.

''ஏதாவது வாங்க வேண்டுமா உங்களுக்கு?'' என்ற குரலைக் கேட்டு அவள் நிமிர்ந்தாள்.

ஒரு பெண்மணி நின்றிருந்தாள்.

''வேண்டாம். நான் ஏதும் வாங்க வரவில்லை. பிருந்தாவும் நானும் பள்ளித் தோழிகள். இருபது வருஷம் கழிச்சு அவள் இங்கே இருக்கிறது தெரிஞ்சது. அதனாலே பார்க்க வந்தேன்.''

''பாவம், உங்களுக்கு அதிர்ச்சியா இருந்திருக்கும்.''

''ஆமாம், ரொம்ப மாறிட்டாள்.''

''கணவன் சொல் தட்டாத தர்ம பத்தினி!''

நந்தினி புரியாமல் விழித்தாள்.

''அப்பாவுடைய சொத்து முழுவதையும் கணவன் தொலைச்சுட்டான். வாயே திறக்கல்லே. பணம் காசுக்கு வழியேயில்லே. ஒ மத்தவன் கிட்டப் போனால்தான் சம்பாத்தியம்னு கட்டினவனே சொன்னாலும் இவள் போயிடறதா?''

நந்தினி தூக்கி வாரிப் போட்டு அவளைப் பார்த்தாள். ''நீங்க சொல்றது எனக்கு ஒன்றும் புரியல்லே.''

''பி. ஏ. கூடப் படிக்காதவளுக்கு இவ்வளவு பெரிய வேலை எப்படிக் கிடைச்சிருக்கும்னு நீங்க நினைக்கிறீங்க?''

சுறுசுறுவென்று ஓர் ஆத்திரம் எழுந்து மண்டையைத் தாக்கிற்று. ''ஷட் அப்!''

அவள் மறுவிநாடி விரைந்து நடந்து கண்ணாடிக் கதவுகளைக் கடந்து நடைபாதைக்கு வந்தாள். கண்களில் நீர் முட்டி நின்றது. புரியாத காரணங்களுக்கும் சோகங்களுக்கும் மனசில் துக்கம் குமுறிக்கொண்டு வந்தது. அவசரமாக இரட்டை ரோடைக் கடந்து பார்க் செய்யப்பட்டிருந்த காருக்குள் நுழைந்ததும் அடக்க முடியாமல் அழுகை வந்தது. ஸ்டியரிங் வீலில் முகத்தைக் கவிழ்த்து, ''பிருந்தா, பிருந்தா!'' என்று மனசு அரற்றியது. கூர்மையான நாக்குக் கும்பலில் பிருந்தா சிக்கி நிற்கிற மாதிரி பிரமை ஏற்பட்டது.

பூக்கள் இல்லாத பிருந்தா. சிரித்தும் சிரிக்காத பிருந்தா.

'நான் ரொம்ப சேஃப்ட். பதிவிரதைகள் தலைப் பூ வாடாதுன்னு நீங்க கேள்விப்பட்டதில்லையா?''

எதிலும் கணவனுக்கு அடங்கிப் போகிறவள்தான் பதிவிரதை என்ற அசட்டுத்தனம் என்று மாறப் போகிறது?



G.H.

பி.வி.ஆர் எழுதும்
புதிய நாவல்
கல்கி ஆகஸ்டு 3ந்தேதி
ஆண்டுமலரில்
ஆரம்பம்.

டாக்டர் பேசுகிறார்: உங்களுக்காகவே உங்கள் நலனுக்காகவே..



மனைவி வேலைக்குப் போகிறாள் என்பதற்காக மட்டும் அளவான குடும்பத்தை டாக்டர் வலியுறுத்துவதில்லை. குடும்பப் பொருளாதாரம், தேசப் பொருளாதாரம் ஆகியவை காரணங்கள்தாம். ஆனால் இவைமட்டும் காரணங்கள் அல்ல. பெற்றோர்க்குத் தம் குழந்தைக்கு உயர்வான உடை உடுத்த வேண்டும். நல்ல முறையில் கல்வி தரவேண்டும். ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசைகள் இருப்பது இயல்பு. இவைதவிர வேறு ஒரு முக்கிய காரணமும் இருக்கிறது.

இரண்டு அல்லது மூன்று குழந்தைகளாக இருப்பின் அவர்கள் ஒவ்வொருவருடனும் பெற்றோர் செலவழிக்கும் நேரம் அதிகமாக இருக்கும். எண்ணிக்கை அதிகமானல் பெற்றோர் ஒவ்வொரு குழந்தையுடனும் செலவிடும் நேரம் குறைகிறது. நேரத்தைப் பகிர்ந்தளிக்க வேண்டுமல்லவா? பெற்றோரின் நேரடிக் கவனிப்பு இல்லையாயின் குழந்தைகளுக்கு ஒரு விரக்தி மனநிலை வந்துவிடுகிறது. தங்களுக்காக யாரும் கவலைப்படவில்லை, தங்களிடம் அக்கறை இல்லை என்ற எண்ணம் குழந்தைகளை முரடுகளாகவும் சமூக விரோதிகளாகவும் வளரச் செய்கிறது. நிறைய குழந்தைகள் இருந்தால் அதனால் ஏகப்பட்ட வேலை தாய்க்குச் சேர்ந்து விடுகிறது. பொருளீட்டும் அவசியமும் ஏற்படுவதால் குழந்தைகளைக் கவனிக்க முடிவதில்லை. தாயின் அன்பும் அரவணைப்பும், தேவையான சமயத்தில் கண்டிப்பும் இல்லாததால் எத்தகைய உயர் குடும்பத்தில் பிறந்த குழந்தைகளானாலும் முரடுகளாக, நேரத்தைப் போக்கக் கண்ட இடத்தில் சுற்றுபவைகளாக, எல்லோரிடமும் ஒரு வெறுப்புக் கொண்டவைகளாக வளர்கின்றன. இந்தக் குழந்தைகள்தாம் சமூக விரோதிகளாகவும் மாறுபவை. ஒரு கால கட்டத்துக்குப் பிறகு இவர்களைத் திருத்தி நல்ல பிரஜைகளாக்குவது என்பது ஆண்டவனாலும் முடியாத காரியமாகி விடுகிறது.

நாட்டின் எதிர்காலப் பிரஜைகள் நல்ல பலசாலிகளாகவும், புத்திசாலிகளாகவும் இருந்து நாட்டின் உயர்வுக்கு உதவ வேண்டும். இப்படிப்பட்ட குழந்தைகளைக் கொடுப்பதுதான் பெற்றோர்களின் கடமை. சமூக விரோதிகளை உருவாக்குவது அல்ல.

ஒன்றை வலியுறுத்த விரும்புகிறேன். குடும்பக் கட்டுப்பாடு, அறுவைச் சிகிச்சையைக் கணவன், மனைவி இருவரும் செய்துகொள்ள அவசியமே இல்லை. இருவரில் ஒருவர் செய்து கொண்டால் போதும்.

ஒரு சந்தர்ப்பத்தில் என்னிடம் வைத்தியம் பார்த்துக் கொள்பவர் ஒரு குழந்தை போதும் என அறுவை சிகிச்சை செய்து கொண்டார். ஆரோக்கியமாக இருந்த அந்தக் குழந்தை திடீரென்று விஷ ஜுரத் தாக்குதலால் இறந்து விட்டது. எப்படியும் ஒரு குழந்தை வேண்டுமே என அறுவைச் சிகிச்சையை மாற்ற விரும்பினர். அவர் மனைவியும் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருக்கிறாள் என அப்போதுதான் குறிப்பிட்டார்

இரண்டு பேர்களுக்கும் மாற்றுச் சிகிச்சை செய்ய வேண்டும் என்றால் பிரச்னை அதிகம் தான். இதை ஞாபகம் வைத்துக் கொள்வது அவசியம்.

இன்னொருவர் சொன்னார்: ''என் நண்பர் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டார். ஆனால் அது வெற்றிகரமாக இல்லை. அறுவை சிகிச்சைக்குப் பிறகும் அவருக்குக் குழந்தை பிறந்தது. அதனால் நான் வாஸெக்டமி செய்து கொண்ட போதிலும் என் மனைவி இப்போதும் கருத்தடை மாத்திரைகளை விழுங்கி வருகிறாள்'' என்று.

தவறுவது ஆயிரத்தில் ஒன்று இருக்கலாம். அதை நினைத்துக் கொண்டு இப்படி யெல்லாம் செய்வது அசட்டுத்தனம். தேர்ந்த வைத்தியரை அணுகி சஸ்திர சிகிச்சை செய்துகொண்டால் பிரச்னையே இல்லை.

தகவல்: டாக்டர் **சௌரிராஜன்**
எம். எல். ஏ.

பேட்டி: **குயிலி ராஜேஸ்வரி.**



நின்ற நிலையில், திடீரென்று நிழல் தந்து கொண்டிருந்த பெரிய மரமொன்று வேர் அறுந்து விழுந்த மாதிரி சுந்தரம் மரித்துப் போனான்.

காலை ஏழரை மணிக்கு 'ஹிந்து' பேப்பரில் அரசியல் அநாகரிகங்களைப் படித்துவிட்டுக் குளிக்கப் போனவன், குளியலறைக் கதவைத் தாளிடுவதற்குள் படீரென்று நெஞ்சில் வலி மின்னலாய்க் கிளைபரப்பிப் பின்னிப் படர்ந்து பிணைந்துகொண்டு வர, 'அம்மா!' என்று அலறிக் கொண்டே கீழே சாய்ந்தான்.

அந்த ஓலம் குளியலறையை விட்டு வெளியே வந்து சமையலறையில் காரியம் செய்து கொண்டிருந்த அவன் அம்மாவை ஈர்ப்பதற்குள் ஜீவன் கூடுவிட்டுப் போய்விட்டது.

அந்தக் காலனியே ஸ்தம்பித்துப்போயிற்று.

அவரவர்கள் - காலையில் அலுவலகம் செல்லும் அவசரத்தில் குளிப்பது, சாப்பிடுவது, ஆடை மாற்றிக் கொள்வது என்ற விதம் விதமான இயக்க நிலைகளில் இருந்தவர்கள், பதறிக்கொண்டு சுந்தரத்தின் வீட்டுக்குப் படையெடுத்தார்கள்.

முப்பத்தைந்து வயது இளமைக் கம்பீரத்தில் இப்போதுதான் 'ஷேவ்' செய்து கொண்டு முகம் இளம் பசுமை நிறத்தில் பளபளக்க, தூங்குகிற மாதிரிக் கிடந்தான் சுந்தரம்.

அழக்கூடத் தோன்றாமல் அவன் அம்மா விதிர் விதிர்த்துப் போய் விசும்பிக்கொண்டிருந்தாள். ராமேஸ்வரத்துக்கும் காசிக்கும் அங்கும் இங்குமாய்ப் போய் அலைந்து இல்லாத தான தருமங்களையெல்லாம் வாரி வீசிய பின் அருமையாய்ப் பிறந்த ஒரே பிள்ளை சுந்தரம். அப்புறம் அவள் கர்ப்ப வாய் திறக்கவே இல்லை. இவனுக்காகக் காத்திருந்தது மாதிரி இவன் ஒன்றரை வயதுக்குழந்தையாக இருக்கும்போதே ஏதோ மூளைக் காய்ச்சல் என்று மூன்றே நாளில் போய்ச் சேர்ந்தார் சுந்தரத்தின் அப்பா.

சுந்தரத்தின் மனைவி கமலா, பிரசவத்துக்குப் பிறந்த வீடு போயிருந்தாள். பிரசவம் ஆகிவிட்டதென்றும், பிள்ளைக் குழந்தை பிறந்து அவளைப் போலவே இருப்பதாகவும் சுந்தரம் நண்பர்களிடம் சொல்லிச் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தான்....

விஷயங்கள் துரிதமாய் நடக்கத் தொடங்கின.

யாரோ டெலிகிராஃப் ஆபீசுக்குப் போய் எல்லாருக்கும் தந்தி கொடுத்துவிட்டு வந்தார்கள்.

புரோகிதரை அழைக்க யாரோ போனார்கள்.

அழுகைகள் டாக்ஸியிலும் ஆட்டோ ரிக்ஷாவிலும் நடந்தும், ஓடியும் வந்தன.

நான்கு மாடிகள் கொண்ட ஃப்ளாட்டுகள் சூழ்ந்த அந்தக் காலனியே கலகலத்துப் போயிற்று.

''சுந்தரம் போய்விட்டான் தெரியுமோல்லியோ?''

''யாரு? எந்தச் சுந்தரம்?''

பரபரத்த குரல் நடுநடுங்கிக் கேட்டது.

''நம்ம சேல்ஸ் டிபார்ட்மெண்ட் ஸ்டெனோகிராபர் சுந்தரம்டா!''

''யாரு.... ஆர். சுந்தரமா?... என்னடா ஒளர்றே .... காலம்பர ஏழு மணிக்கு நாங்க ரெண்டு பேரும் ஒண்ணாக் கறிகாய் வாங்கினோம்டா....''

''ஒளரல்லே.... நெஜம்டா.... ஏழரை மணிக்குக் குளிக்கப் போனானாம். பாத்ரூம்லேயே மாஸிவ் ஹார்ட் அட்டாக்... விதின் செகண்ட்ஸ்... க்ளோஸ்... டாக்டர் வந்து கையை விரிச்சுட்டார். அவனோட அம்மாவைப் பார்க்கச் சகிக்கல்லே... மனைவி வேறெ டெலிவரிக்குப் போயிருக்கா... ஹாரிபிள்! எனக்கு இன்னும் படபடப்புப் போகல்லே'' என்று சொல்லிக் கொண்டே போனார் முதலாமவர்.

கேட்டவர் அப்படியே நிலைகுத்தி நின்றார்.

கவர்ன்மெண்ட் அலுவலகத்தில் வேலை பார்க்கிறவர்களின் குவார்ட்டர்ஸ் அது. இருநூற்றைம்பது ஃப்ளாட்டுகள்



கொண்ட அந்தக் காலனி நகரின் கேந்திர ஸ்தானத்தில் இருந்தது. காலை, காலனி வாயிலில் பஸ் ஏறினால் அலுவலகம். மாலை அலுவலகத்தின் வாயிலில் பஸ் ஏறினால் வீட்டு வாயிலில் இறங்க வேண்டியது. பொழுது வம்பு தும்புகளில், அரட்டைகளில் கழிந்தது.

காலனியின் ஒரு மூலையில் காம்பவுண்டுச் சுவரை ஒட்டினாற்போல் ஒரு பிள்ளையார் கோயில். அரச மரமும் வேப்ப மரமும் பின்னிப் பிணைந்து நிழல் தந்து கொண்டிருந்த இடத்தில் அந்தக் காற்றைச் சுகமாய்ச் சுவாசித்துக் கொண்டே, பிள்ளையார் மேற்கு முகமாய் உட்கார்ந்திருப்பார். வருஷா வருஷம் பிள்ளையார் சதுர்த்தி விழா அதி விமரிசையாகக் கொண்டாடப்படும்.

அந்த வருஷமும் பிள்ளையார் சதுர்த்தி விழா அமர்க்களமாய் முதல் நாள்தான் துவங்கியது. முதல் நாள் நாட்டியக் கச்சேரியுடன் விழா ஆரம்பமே களை கட்டியது. ஆடிய பெண் பளிச்சென்று மிக அழகாய் இருக்கவும் கூட்டம் மைதானம் கொள்ளவில்லை. அன்றைக்குச் சாயங்காலம் பிரபலமான லைட் மியூஸிக் குழுவின் பாட்டுக் கச்சேரி. சாயங்காலம் இன்னின்ன பாடல்களைப் பாடச் சொல்ல வேண்டும் என்று இளைஞர்கள் திட்டம் போட்டுக் கொண்டிருக்கும்போதுதான் மாலையின் வரவுக்காக எல்லாரும் ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கும்போதுதான், திடுமென்று வந்த சுந்தரத்தின் மரணச் செய்தி, ஒரு கலக்குக் கலக்கி விட்டது.

"ஆமா... இன்னைக்கு சாயங்காலம் 'லைட் மியூஸிக்' புரோகிராம் இருக்குதே...அதுக்குள்ளாற பாடியை எடுத்துடுவாங்களா?"

இந்தனை அலையொன்று கூடியிருந்தவர்களின் முகத்தில் பரவியது.

"வீரப்பன் எங்கே, அவனைத்தான் கேக்கணும்...அவன்தானே டெம்பிள் மானேஜிங் கமிட்டி சேர்மன். அவன் இருக்கானு பாரு."

எல்லாரும் வீரப்பனையும் நாகராஜனையும் சூழ்ந்து கொண்டார்கள்.

"சாயந்திரத்துக்குள்ளே பாடியை எடுப்பாங்கன்னு எப்பிடிச் சொல்ல முடியும்? வெளியூர்லேர்ந்து சுந்தரம் ஒய்பே வரனுமில்லே ...."

"ச்சூ....ச்சூ" என்று கூட்டம் அங்கலாய்த்தது.

"எந்த ஊராம்?"

"செங்கல்பட்டுதானாம். சிவராமன் காரை எடுத்துக்கொண்டு போயிருக்கார்."

சற்று நேரம் வீரப்பன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

"ஒரு பாயிண்ட்" என்று தொண்டையைச் செருமிக்கொண்டு பேசத் தொடங்கினான்.

எல்லாரும் கவனமாய்க் கேட்டார்கள்.

"வாட் எவர் இட் ஈஸ், பாடியைச் சாயங்காலம் எடுக்கறாங்கன்னே வச்சுக்குவோம்... உடனேயே லைட் மியூஸிக் போட்டா நல்லாவா இருக்கும்?"

"கரெக்டும்மா. செத்த வூட்டு வாசல்லே நாம்பளெல்லாம் பாட்டுக் கேட்டம்னு பார்க்கிறவன் இன்னா நெனைப்பான்? வேணாம்பா" என்றான் காளியப்பன்.

"லைட் மியூசிக் பார்ட்டிக்குப் பணம் கொடுத்தாச்சோ?" என்று கேட்டார் அக்கவுண்ட்ஸ் டிபார்ட்மெண்ட் அழகிரிசாமி.

"ஓ...கொடுத்தாச்சாக்கும். ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் கொடுத்தாச்சு. முழுசா அட்வான்ஸாக் குடுத்தாத்தான் வருவேன்னு சொல்லிட்டா. இன்னிக்கு விடிலே விடுங் பார்ட்டியாச்சே" என்றான் நாகராஜன்.

"ஆமாமா! அருமையாப் பாடுவாங்க... நான் கேட்டிருக்கேன்" என்று ஒப்புதல் தெரிவித்தான் நாராயணன்.

"நாளைக்கு ஒத்தி வைச்சா என்ன?"

யாரோ யோசனை சொன்னார்கள்.

"எக்ஸாக்ட்லி!... நான் நெனைச்சேன். ஜெயராமன் சொல்லிட்டாரு. நாளைக்கு வச்சுக்கலாம்."

விசுவநாதனும் பாஸ்கரனும் இன்னும் பலரும் பலமாய் ஆமோதித்தார்கள். வீரப்பனுக்கும் சரியாகப்பட்டது.

"அப்ப, நான் டெலிபோன்லே நாளைக்கு வச்சுக்க முடியுமான்னு கேக்குறேன்...அநேகமா ஒத்துக்குவாங்க. எனக்குத் தெரிஞ்சவுங்கதான். நாகராஜன் நீ எல்லோருக்கும் ப்ரோக்ராம் ஒத்தி வச்சாச்சுன்னு சர்க்குலர் அனுப்புறியா?"

நாகராஜன் சம்மதிக்கவும் வீரப்பன் டெலிபோன் செய்யப் போனான்.




கதவு

மேகக் கதவை நிலவு திறந்தது
மெதுவாய் வெளியே எட்டிப் பார்த்தது
பச்சை வயல்கள் பால் குளமாயின
பட்டை வரப்புகள் பாம்பாய் நெளிந்தன

'பருவநிலவே! பாதி இரவில்
மறைந்தும் பார்க்க தலையை நீட்டி
எட்டிப் பார்க்க வெட்கமாயில்லையா?'
யாரோ கேட்டார் ஏக்கம் புரியாமல்

மேகக் கதவு மீண்டும் அடைத்தது
மோகக் காற்று அடித்து ஓய்ந்தது
பால் குளத்தில் பாசி படர்ந்தது
பாய்ந்த இருட்டு பரவி நின்றது

- கோமதிஸ்வாமிநாதன்



''சிமெண்ட் கிடைக்காததால் தொழிற்சாலை வேலை பாதியிலேயே நிற்கிறது.''

யாரோ ஒரு கிழவி டாக்சியில் வந்து இறங்கினாள். இரண்டு பேர் கையைப் பிடித்துக் கைத்தாங்கலாய் அழைத்து வந்தார்கள்.

''கொழுந்தே சுந்தரம்! போயிட்டியா டாப்பா... நானெல்லாம் பழுத்த இலையா இன்னும் இருக்கேன் கொழுந்து மாதிரி நீ போயிட்டியேடாப்பா... தெய்வத்துக்குக்கண் தெரியல்லியா?'' என்று அலறிக்கொண்டே அந்தக் கிழவி சுந்தரத்தின் வீட்டுக்குள் நுழைந்தாள்.

''யாரு? யாராம் அது?''

விசாரணை அலையாய்ப் பரவிப் பதில் செய்தி வந்தது.

''சுந்தரத்தோட பாட்டியாம், அப்பாவோட அம்மாவாம். வயது எண்பத்தி ஏழாம்.''

''டெரிபிள் ... டெரிபிள் .. என்ன கொடுமை!'' என்று கூட்டம் அங்கலாய்த்தது.

அழுகைச் சத்தம் குடலைக் கலக்கியது.

யார் யாரோ வந்தார்கள்.

கட்டுக் குடுமியோடும் கையில் பிளாஸ்டிக் பையோடும் புரோகிதர் வந்தார். கூடவே நான்கு பேர் மூங்கில், மட்டை சகிதம் வந்தார்கள்.

வீரப்பன் வேகமாய் நடந்து வந்தான்.

''டெலிபோன்லே சொல்லிட்டேன்.. நாளைக்கு வச்சுக்கிட அவுங்க சம்மதிச்சுட்டாங்க. நாளைக்கி அவுக ஃப்ரீதான்'' என்று அறிவித்த வீரப்பனின் குரலில் நிம்மதி தெரிந்தது.

சுற்றியிருந்தவர்களின் முகத்தில் ஒரு கணம் சந்தோஷம் அலையாய்ப் பரவியது. நிம்மதி விகசித்தது.

விருட்டென்று சிவராமனின் கார் வந்து நின்றது.

எல்லாரும் பரபரப்புடன் பார்த்தார்கள்.

கைத்தாங்கலாய்ச் சுந்தரத்தின் மனைவி சுசிலாவை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றார்கள்.

துவண்டு கிடந்த துக்கம் சீறிக்கொண்டு பேரழுகையாய் வெடித்தது. அழுகைக் குரல் விண்ணைப் பிளந்தது.

கூட்டம் 'த்லொ த்லொ' என்றது. பல ஹீனமான மனம் படைத்த ஆண்கள் சிலரின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

மறுநாள் மாலை.

பிள்ளையார் சந்தனக் காப்பில் ஜொலிக்கிறார்.

சந்தனப் பூச்சில் பதிக்கப்பட்டிருந்த ஜரிகைப் பேப்பர்கள் மின்விளக்கு வெளிச்சத்தில் மின்னுகின்றன.

சரம் சரமாய் மரத்தில் மின்விளக்குகள் தொங்குகின்றன. மைதானத்தில் கூட்டம் கூடுகிறது.

முன் வரிசையில் குழந்தைகள் கூச்சலிட்டுக் கொண்டிருக்கின்றன. யாரோ பெரியவர் குழந்தைகளை அடக்க முயன்று தோற்றுப் போய் ஏதோ முணு முணுத்துக்கொண்டே அகன்று மேடை மறைக்காத ஓர் இடத்தில் அமர்ந்து கொள்கிறார்.

மேஜை நிறைய மார்டன் ஆர்ட் மாதிரி வித வித உருவங்களில் ஏதேதோ வாத்தியங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஐந்தாறு பேர் கையில் வயலினுடன் ஓட்டப் பந்தயம் போகிறவர்கள் மாதிரி ஆயத்தமாய் நின்று கொண்டிருக்கிறார்கள். முகவாய்க் கட்டை வரை கிருதாவுடன் ஒரு கூலிங் கிளாஸையும் அணிந்து கொண்டிருந்த ஓர் இளைஞன் கையில் மைக்குடன் உலவிக் கொண்டிருக்கிறான். பாம்புகள் மாதிரி, எலெக்ட்ரிக் வொயர்கள் மேடையெங்கும் நெளிந்து கிடக்கின்றன. முழு அகலம் ஜரிகை போட்ட பட்டுப் புடவையை மிக செயற்கையாகப் போர்த்திக் கொண்டு ஒரு பெண் தலை நிறையப் பூவுடன் கையில் ஒரு டைரியைப் பிடித்துக் கொண்டு நிற்கிறாள். பைஜாமாவும் குர்த்தாவும் அணிந்திருந்த இளைஞன் ஒருவன் கையைக் கையைச் சொடுக்கிக்கொண்டு 'ஒன், டு, த்ரீ' என்று சொல்ல 'த்ரீ' என்று முடித்தவுடன் டணாரென்று தூக்கி வாரிப் போடுகிற மாதிரி எல்லா வாத்தியங்களும் ஒரே நேரத்தில் ஒலிக்க ஆரம்பிக்க, ஒரு சப்தக் கடல் அங்கே ஆர்ப்பரிக்க ஆரம்பிக்கிறது.

கீழே உட்கார்ந்திருந்தவர்கள் 'கப்'பென்று அமைதியாகிறார்கள். பிள்ளையார் கோயில் குருக்கள் சில நிமிஷங்கள் பூஜை செய்வதை மறந்து மேடையையே பார்த்துக் கொண்டிருக்கிறார். அபிஷேக ஜலம், பிள்ளையார் மேல் விழாமல் கீழே விழுந்து சிதறுகிறது.

'மைக்'கைப் பிடித்துக் கொண்டிருந்த இளைஞன் ஏதோ படத்தின் பெயரையும் பாட்டையும் சொல்ல, ஆர்ப்பாட்டத்துடன் பாட்டு ஆரம்பமாகிறது. பாடுகிறவன் பாடப் பாட, கேட்கிறவர்கள் மெய் மறந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பாட்டு முடிந்ததும் கைதட்டல் வானைப் பிளக்கிறது.

''ஒரம்போ... ஒரம்போ... பாடு'' என்று கூட்டத்தில் யாரோ கூவுகிறார்கள். எல்லாரும் கைதட்டி வரவேற்கிறார்கள்.

பாடகன் 'ஒரம்போ' பாடத் தொடங்குகிறான்.

கூட்டத்தில் கைதட்டல் அடங்கச் சற்று நேரம் ஆகிறது.

அப்போது பாட்டுத் தடைப்படுகிற மாதிரி ஒரு ஆட்டோ ரிக்ஷா பெருத்த ஒலத்துடன் வருகிறது.

''ச்சூள்... என்னையாது?... நூய்சென்ஸ்!... ஆட்டோவைப் போகச் சொல்லுய்யா..'' என்று பலர் உரக்கக் கத்துகிறார்கள்.



ஜப்பானியரின் அப்பா!

மேடையில் ஏறிய பின், "அதாவது....நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால்..." என்று இழுத்துப் பறித்து வேதனை செய்வோரை நமக்குத் தெரியும். அண்மையில் மறைந்த ஜப்பானியப் பிரதமர் ஒஹிரா இப்படித்தான் சதா "ஆ... ஓ...." என்று இழுத்து இழுத்து நேரம் கடத்துவார். அந்தச் சமயத்தில் யோசிப்பார். பிறகு நாலு வாக்கியம் கூறுவார். மறுபடியும் "ஆ...ஓ..." தான்!

ஜப்பானிய மக்கள் காலை நாளிதழைப் பிரித்துக் கொண்டே, "ஆ....ஓ.... இன்று என்ன கூறியிருக்கிறார் பார்க்கலாம்" என்பார்கள் வேடிக்கையாக. ஆயினும் அவருக்கு மதிப்பும் மரியாதையும் காட்டுனார்கள். யோசித்து யோசித்து வார்த்தைகளை அளந்து பேசிய அவர் ஜப்பானிய மக்களின் அன்புக்குரிய "அப்பா" ஆனார்.

ஒஹிரா அயல் நாடு சென்று படித்ததில்லை. ஆயினும் ஆங்கிலத்தில் அவர் நிபுணர். "உரையாடலின்போது ஆங்கிலத்தை அவர் புரிந்து கொண்டது போல வேறு எந்த ஜப்பானிய அரசியல்வாதியும் புரிந்து கொண்டதில்லை" என்றார் கிஸ்லிங்கர். ஒஹிரா கிறிஸ்துவ மதத்தைத் தழுவி டைபின் ஆராய்ச்சியும் செய்திருக்கிறார்.

மறைமுக வரிகள் இலாக்காவின் தலைவரானபோது ஒஹிராவிடம் பின்னால் பிரதமராகப் போகிற இகெடா கேட்டார்: "வரிச் சட்டங்கள் பற்றி உங்களுக்கு அதிகம் தெரியாதே; நான் விளக்கிச் சொல்லட்டுமா?"

"வேண்டாம்" என்றார் ஒஹிரா. "அதையெல்லாம் கவனிக்கத்தான் நிபுணர்களான அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களே. நல்ல நிர்வாகம் என்பது இருக்கிற சட்டங்களில் நிபுணத்துவம் பெறுவதல்ல. மனிதாபிமானத்துடன், தேச நலனுக்குகந்த சட்டங்களை இயற்ற உதவுவதுதான்" என்றார்.

பின்னால் இகெடாவும் ஒஹிராவும் அரசியலில் புகுந்தனர். இகெடா பிரதமரான போது ஒஹிரா அமைச்சரவையின் பிரதம காரியதரிசியானார்.

அப்போது இகெடா, பத்து ஆண்டுகளில் தேசிய வருமானத்தை இரட்டிப்பாக்கும் திட்டம் ஒன்றை மக்கள் முன் வைத்து ஒத்துழைப்புக் கோரினார். அபார வெற்றி பெற்றது இந்த முயற்சி. அச்சமயம் இகெடா அமைச்சரவைக் கப்பலின் தலைவராயிருந்த போதிலும் ஒஹிராதான் கப்பலைத் திசை திருப்பும் நிபுணராயிருந்தவர்.

அடுத்து வந்த டனகா அமைச்சரவையில் ஒஹிரா அயல் நாட்டு அமைச்சராயிருந்து, டாய்வானைப் பகைத்துக் கொள்ளாமலேயே சீன — ஜப்பான் நல்லுறவுக்கு இரண்டே மாதங்களில் வழி வகுத்தார்.

மேற்குறிப்பிட்ட பொருளாதாரத் திட்டமும் சீன ஜப்பான் நல்லுறவும் ஒஹிராவின் சாதனைகளுள் முக்கியமானவை.

ஒன்றரை ஆண்டுகளே பிரதமராயிருந்த ஒஹிரா நிறையப் படிப்பார்; நிறைய எழுதியும் உள்ளார். பிடித்தமான பொழுதுபோக்கு புத்தகக் கடையில் நூல்களைப் பார்வையிட்டபடியே சுற்றிச் சுற்றி வருவது!

நின்ற ஆட்டோவிலிருந்து ஒரு முதியவர் இறங்கி, மைதானத்தில் மேடையைப் பார்த்தவாறு நின்று கொண்டிருந்தவரிடம், "ஸார்!:.. சுந்தரம்கறவர் ஃப்ளாட் எங்கே இருக்கு சார்?" என்று வினவுகிறார்.

முகத்தைக்கூடப் பார்க்காமல் மேடையை விட்டு விழிகளை எடுக்காமல், யாரோ கையைக் காட்டுகிறார்கள்.

"தாங்க்ஸ்."

ஆட்டோ ரிக்ஷா படபடவென்று புறப்பட்டுச் சென்று சுந்தரத்தின் வீட்டு வாசலில் போய் நிற்கிறது.

ஒரு முதியவரும் கிழவியும் தட்டுத் தடுமாறி இறங்கிச் சுந்தரத்தின் வீட்டுக்குள் செல்கிறார்கள்.

"கொழுந்தே சுந்தரம்.... போயிட்டியா?.. கோவர்த்தன கிரியா எல்லாருக்கும் நிழல் கொடுத்திண்டிருந்தியே, இப்பிடி எங்களை அனாதியாய் விட்டுட்டுப் போயிட்டியே...அம்மாடி கற்பகம்! ஒனக்கு புத்ர சோகம் ஒன்னு பாக்கியிருந்துதா?...." என்று ஆட்டோ ரிக்ஷாவில் வந்த அம்மாள் கீச்சுக் குரலில் கதற, உள்ளே அழுகை குரலில் குலுங்கி வெடிக்கிறது.

வெளியே பாட்டுக்கு ஏற்றவாறு கேட்கிறவர்கள் தாளம் போட சந்தோஷம் எல்லார் முகத்திலும் தெரிகிறது.

துயரங்களைத் தனித் தனியாகவே விழுங்கும் விதி படைத்த மனிதத் தீவுகள் எல்லாரும் தற்காலிகமாய் ஒன்றாய்ச் சேர்ந்து அங்கே போலியான ஒரு சந்தோஷக் கடலை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த சந்தோஷக் கடலின் நடுவில் தன்னந் தனியாய், ஒரு துயரத் தீவாய், சுந்தரத்தின் வீட்டில் அழுதுகொண்டிருக்கிறார்கள்.

துயரம் என்று வருகிறபோது, ஒவ்வொரு மனிதனும் ஒரு தீவுதான் என்று சொல்கிற மாதிரி வெளியே மீண்டும் சந்தோஷம் துள்ளுகிறது.

கிளாமர் எழுத்தாளர்கள்!

வி.ஜி.கிருஷ்

[ஸ்ரீப்ரியா, ஜெயலலிதா, கமலஹாசன் இவர்களெல்லாம் கதை எழுதத் தொடங்கி விட்டார்கள். இனி எழுதப் போகிறவர்கள் யார், யார்? எப்படி எழுதக்கூடும்? — ஒரு கற்பனை!]



● ''...உருளைக் கிழங்கு பொடிமாஸ், தக்காளி பச்சடி, மணக்க மணக்க அவியல் சாம்பார்.... ஸ்வீட் — கேட்பானேன்? சாப்பிட்டு முடித்துவிட்டு ஒண்டிக்கொள்ள ஒரு அக்கிரகாரத்துத் திண்ணை. போதாக் குறைக்கு வெற்றிலையும் சீவலும் ஆகா... இதுவல்லவா சுகானுபவம்.... அவனுக்கு அந்த 'இயால் டிரபின்' மட்டும் இல்லாதிருந்தால்?....''

—இந்த நடையில் ஆரம்பமாகிறது

உசிலைமணி எழுதும் தொடர்கதை

ஓர் இரவுச் சாப்பாடு வயிற்றைக் குடைகிறது!

உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!

● ''அவள் எதற்கும் துணிந்தவள். முக்காலும் அறிந்தவள். ஆனால் அவளுக்கும் ஓர் இதயம் இருக்கிறது. அதில் குடிபுக நினைத்தவர் பலர். கடைசியில் மிஞ்சியது ஒரு சிலர். அவர்கள் யார், யார்?''

பயங்கர சஸ்பென்ஸுடன் அடுத்த இதழில் எழுதுகிறார்

—ஜெயமாலினி

ஆடாத காபரேக்கள்!





● ''ஹௌ ஆர் யூ?''

''தோபடி!''

''வாட்? தோ தேம்?''

''ஆல் தேம்ஸ்!''


''ஐ லவ் யூ, தென்!''

''ஸ்டுபேர்ஜ்! ஐ லவ் ஆல்!''

—உணர்ச்சிக் குவியலைக் கொண்ட சம்பாஷணைகளுடன் தொடங்குகிறது — அடுத்த இதழில் புதிய தொடர்கதை

"லவ் இன் மெட்ராஸ்"

ரத்தி அக்னிஹோத்ரியின் உணர்ச்சிக் காவியம்!


"நீ ரெண்டு நாள் லீவ்லே மட்டும் இப்படி ஆபீஸ் வந்து போனா போதும்!..."
"உங்களுக்கென்ன, ஜாலி! வாரம் ரெண்டு நாள் லீவு!"
"என்ன ஸார் ஜாலி! வாரத்துக்கு ஏழு நாள்கள்னு இருக்கிறதை அஞ்சு நாட்கள்னு ஆக்கிறு கொறைஞ்சா போயிடும்!"
7 சனி
"ம்..ம்! 'சனி' வந்துடுச்சு!"
"மாப்பிள்ளை உன்னைச் சொல்லலேமா! ரெண்டு நாள் லீவு 'சனி'யோட ஆரம்பமாகுதேன்னு அலுத்துக்கறாரு!"
9 வெள்ளி
"கவர்மென்ட் உத்தரவு ரெண்டு நாள் லீவு! நீங்க ஒவ்வொரு வெள்ளிக்கிழமை இப்படி வீட்டுக்குப் போக ஏன் ஸார் தகராறு பண்றீங்க?..."
வாரம் இரண்டு நாள் லீவ்: ஏழு நாட்களும் வேலை செய்வோம்! உரிமைக்குப் போராடுவோம்!
வாரம் இரண்டு நாள் லீவ் 'போர்' அடித்து இப்படி ஒரு போராட்டம் நடக்கலாம்!


வாரம் ரெண்டு நாள் லீவ்!
"எனக்கும் வாரத்துக்கு ரெண்டு நாள் லீவ் வேணும்மா!"
"என்னங்க இது? ரெண்டு நாள் லீவுன்னு ரெஸ்டு எடுக்காம இப்படி கத்தை கத்தையா பைல்களைத் தூக்கி வரீங்களே!"
"அட, நீ ஒண்ணு! பைல்களைப் பார்த்தாத்தான் எனக்குத் தூக்கமே வரும்."
"எவண்டாவன்... மூளை கெட்டு வாரம் ரெண்டு நாள் லீவ் கேட்டது?..."
"நம்ம ரகு ஸின்ஸியரா லீவ் நாட்கள்லே கூட ஆபீஸ் வந்து போறாப்பல இருக்கே!"
"அட, சும்மா இரு சாரு! வீட்லே பொண்டாட்டி தொல்லை தாங்காம கொஞ்ச நேரம் தூங்கிட்டுப் போறாரு!"
"என்னங்க இது?... ஞாயித்துக்கிழமை நடு ராத்திரியிலே குளிச்சிட்டு!..."
"போறுக்குது!... திங்கள்கிழமை எப்படா ஆபீஸ் போவோம்னு இருக்கு... அதான் குளிக்க தயார் பண்ணிக்கிறேன்."

கடல் ராணி

சாண்டில்யன்

அத்தியாயம் 50

சிந்து துர்க்கத்தின் ரகசியம்



“ட்ராப் தோஸ் கன்ஸ்! (அந்தத் துப்பாக்கிகளைக் கீழே போடு!)” — இதைச் சொன்னவன் குரலில் தீர்மானம் இருந்தது. கடுமை பலமாக இருந்தது. அனைத் ஒழிந்தானென்று முடிவு கட்டியவர்கள் அவன் முடிவுக்குக் காலம் வரவில்லை என்பதைச் சந்தேகமற உணர்ந்தார்கள். சொன்னவன் யாரென்பதைக் குரலிலிருந்தே புரிந்து கொண்டதால் டெய்லரின் இரு கைத் துப்பாக்கிகளும் தரையில் விழுந்தன. ஒன்றிலிருந்த குதிரை முக்கால்வாசி இழுக்கப்பட்டிருந்ததால் அது வெடித்து அதன் ரவையொன்று தரையில் கிரீச்சிட்டு ஓடியது. டெய்லர் மிகுந்த சினத்துடன் பின்புறமாகத் திரும்பித் தனது எரி விழிகளை எதிரி மீது நாட்டினான். எந்தக் கைத் துப்பாக்கியைக் காட்டி முன்பு தளபதி சங்கர் பந்தை மாளிகையில் மறித்தானோ அதே கைத்துப்பாக்கியை நேராக அலைவரையும்

நோக்கிக் குறி வைத்த வண்ணம், கால்களை நிலத்தில் பரப்பிக் கொண்டு, மேலுக்குச் சாந்தமும், உள்ளுக்குள் சினமும் விரிந்த கண்களுடன் நின்றிருந்தான் துலாஜி ஆங்கரே. அவன் ஒல்லியான சரீரம் கூட அந்தச் சமயத்தில் பரம பயங்கரத்தை அளித்தது பார்ப்பவர்களுக்கு.

ஆதலால் சொல்லிழந்து மற்றவர்கள் நின்றாலும் மூர்க்கத்தனம் நிரம்பிய டெய்லர் மட்டும் கேட்டான், "இதனால் என்ன சாதிக்கப் பார்க்கிறாய்?" என்று.

துலாஜியின் கூரிய விழிகள் விஷம் தீட்டப் பட்ட அம்புகளைப் போல் டெய்லர் மீது நிலைத்தன. "நமமை நாமே ஒருவருக்கொருவர் கொன்று கொள்வதைத் தடுக்கப் பார்க்கிறேன். இம்முறை மாக்ரே வரும்போது அவனை எதிர்க்க நம் அனைவர் சக்தியும் வேண்டும். எல்லாவற்றையும் விட அனந்தின் யோசனை மிக முக்கியமாக வேண்டும். அவனை அழித்தால் நாம் அழிந்தோம்" என்று வெறுப்பும் இகழ்ச்சியும் கலந்த குரலில் கூறினான் துலாஜி.

துலாஜியின் சொற்கள் வில்வருக்கும் சினத்தை ஊட்டவே "அனந்த் இல்லாவிட்டால் நாம் அனைவரும் அழிக்கப்படுவோமா? ஏன் நாம் மாலுமிகள் அல்லவா? கடற்போரில் நமக்கு அனுபவம் இல்லையா?" என்று வினவினான்.

"இம்முறை நம் அனுபவம் மட்டும் போதாது. வருவது மாக்ரே. அதுவும் உங்களை ஒழிக்கும் உறுதியுடன் வருகிறான்" என்று துலாஜி சுட்டிக் காட்டினான்.

"ஏற்கெனவே அவன் இப்படித்தான் மூன்று என்னிடம் சிறைப்பட்டான். வில்வரின் தயவால் தப்பினான்" என்று இங்க்லண்ட் கூறினான்.

"அவன் சிறைப்பட்டது துவேக் கப்பல்கள் துணிவின்றி ஓடிவிட்டதால். இப்பொழுது மாக்ரே அப்படி வரவில்லை." என்று பதில் சொன்னான் துலாஜி. அத்துடன் 'மாக்ரேயைப் பற்றி எண்ணவும் பேசவும் அவகாசம் இருக்கிறது. இங்கு எதற்காக நீங்கள் அனைவரும் வந்திருக்கிறீர்கள்? எதற்காக அனந்தைக் கூட முயற்சிசெய்கிறீர்கள்?" என்றும் வினவினான்.

இம்முறை டெய்லர் பதில் சொன்னான்: "காலை முதலே அனந்தைக் கவனித்து வருகிறோம்" என்று.

"கவனித்து என்ன தெரிந்து கொண்டீர்கள்?" துலாஜியின் கேள்வி இகழ்ச்சியுடன் வெளிவந்தது.

"காலை முதல் இரண்டு பெண்களுடன் விளையாடுகிறான்" என்று டெய்லர் உறுமினான்.

"அதனால் உங்களுக்கென்ன?" துலாஜியின் கேள்வியில் கேலி ஒலித்தது.

இந்தச் சமயத்தில் வில்வர் உரையாடலில் புகுந்து "அது உண்மை விளையாட்டல்ல. வெறும் நாடகம்" என்று கூறினான்.

"இதைத்தான் சங்கர் பந்த் நம்ப மறுக்கிறார். நீங்களாவது அவருக்குப் புத்தி சொல்லுங்கள்!" என்று கூறிக் கொண்டே அனந்த் எழுந்திருந்து நின்றான் தூக்கத்தை உதறிக் கொண்டு.

"நாடகமாவது மண்ணாங்கட்டியாவது... இவனுடன் ராணி இரவில் தனித்துப் படுப்பது நாடகமா?" என்று எரிந்து விழுந்தார் சங்கர் பந்த்.

"யாரும் என்னுடன் படுக்கவில்லை இங்கு" என்றான் அனந்த் மறுபடியும்.

அனந்தின் இந்தச் சொற்களைக் கேட்டதும் "பொய். முழுப் பொய். அவன் இங்கு வந்ததை நானே பார்த்தேன்" என்று இரைந்தார் தளபதி பந்த்.

"நாங்களும் பார்த்தோம்" என்று கலந்து கொண்டான் டெய்லர்.





''அவரிடம் துருவித்துருவித் தான் பேரம் பண்ணணும்.''
''ஏன் அப்படி?''
''தேங்காய் ராசியே!''

கடைக்கார - சுதர்ஸன்

''நாங்களென்றும்?'' அனந்தின் கேள்வி சர்வ சகஜமாக எழுந்தது.

''நான், வில்வர், இங்க்லண்ட்'' என்று பதில் சொன்னான் டெய்லர்.

''சாட்சிகள் பலமாக இருக்கின்றன அனந்த்'' என்று துலாஜி கூறினான் மெல்ல நகைத்து.

''உங்களுக்கெல்லாம் வேறு வேலையில்லையா?'' என்று வினவினான் அனந்த் அனைவரையும் நோக்கி. முக்கியமாக அவன் கண்கள் வில்வர் மீது நிலைத்தன. ''வில்வர்! உன்னை மரணத்திலிருந்து நான் காப்பாற்றினேன். நீ கூட என்னை நம்பவில்லையா? என் மீது வேவு பார்க்கிறாயா?'' என்று வருத்தத்துடன் கேட்ட அனந்த் மேலும் சொன்னான்: ''ராணி என்னுடன் வரவில்லை. நான் இங்கு படுத்ததற்குக் காரணமே நிம்மதியாக உறங்கத்தான். சத்ரபதி சிவாஜி சிலைக்கு அடுத்த அறை மகாராஷ்டிரர்களால் புனிதமாகக் கருதப்படுகிறது. அங்கு யாரும் வரமாட்டார்கள் என்று நினைத்தேன். அந்தப் புனிதத் தன்மையையும் நீங்கள் கெடுத்துவிட்டீர்கள்'' என்று குற்றம் சாட்டினான் அனந்த் கடுமையான குரலில்.

இதைக் கேட்டதும் சங்கர் பந்தின் சினம் கூரையைத் தொட்டது. ''புனிதத் தன்மையைக் கெடுத்தவன் நீ. ராணியுடன் இங்கு படுத்தாய்.'' என்று இரைந்து பேசினார், சொற்களில் கனல் வீச.

''ஏற்கனவே ஒரு முறை இப்படி நடந்திருக்கிறது'' என்று துலாஜி சுட்டிக் காட்டினான் விஷமத்துடன்.

துலாஜி தன் பக்கம் பேசியது சங்கர்பந்துக்கு உற்சாகத்தை அளிக்கவே, ''ஆம். இது இரண்டாவது முறை. இனி உன்னை மன்னிக்க முடியாது'' என்று கூறினார் உற்சாகத்துடன், அனந்த் வகையாக மாட்டிக் கொண்டதை நினைத்ததால்.

அனந்தின் கண்களில் வருத்தத்தின் சாயை படர்ந்தது. ''எந்தக் குற்றவாளிக்கும் மும்முறை மன்னிப்பு உண்டு'' என்று அனந்த் கூறினான், குரலிலும் வருத்தம் ஒலிக்க.

சங்கர்பந்துக்கு உற்சாகத்துடன் கோபமும் மிகுந்திருந்ததால் ''என் மகளை மூன்றாவது தடவையும் கெடுக்க நினைக்கிறாயா?'' என்று சீறினார்.

இதைக் கேட்ட டெய்லர் தன்னையும் மீறி நகைத்தான். ''யூ ஸ்பாயில் எ கேர்ல் ஒன்லி ஒன்ஸ், யூ டோன்ட் ஸ்பாயில் ஹர் எ ஸெகண்ட் டைம். (ஒரு பெண் கெடுவது ஒரு முறைதான். இரண்டாம் முறை அவள் கெடுவதில்லை)'' என்று கூவினான் நகைப்பின் ஊடே.

''பிகாஸ் ஷீ இஸ் ஆல்ரெடி ஸ்பாயில்ட். (அவள் ஏற்கனவே கெட்டுவிட்டதால்)'' என்று ஒத்துப் பாடினான் இங்க்லண்ட்.

அனந்தும் அவர்களுடன் சேர்ந்துகொண்டு ''யூ ஆர் போத் ரைட் (நீங்கள் இருவரும் சொல்வது சரி)'' என்று கூறினான்.

''எது ரைட்?'' என்று வெடித்தார் பந்த்.

''எந்தப் பெண்ணும் ஒரு முறைக்குமேல் கெட முடியாது என்பது'' என்றான் அனந்த்.

''என் பெண்ணைப் பற்றிப் பேசுகிறாய்.''

''துவங்கியது நீங்கள்.''

''அவள் இங்கு வந்ததால் நானும் வந்தேன்.''

''அதனால்?''

''வந்தும் காணவில்லை.''

''கண்டுபிடிப்பதை நானும் தடுக்கவில்லை.''

''முதலில் அறையைவிட்டு வெளியேவா.''

''நான் என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றி யாரும் உத்தரவிட முடியாது!'' இதைச் சொன்ன அனந்த் தன் வலது கையிலிருந்த துப்பாக்கியை உற்றுப் பார்த்தான். அத்துடன் கடுமையான குரலில்பேசவும் முற்பட்டு ''ராணி இங்கு இல்லை. அதைப் பார்த்தாகி விட்டது. என்னை நிம்மதியாக உறங்க விடுங்கள். அல்லது....'' வாசகத்தை முடிக்காமலே விட்டான். மேலும் சொன்னான்: ''யூ த்ரீ ஜென்டில்மேன்! டபிள்பாக் டு யுவர் ஷிப் (கனவான்களே! நீங்கள் உங்கள் கப்பலுக்கு விரையுங்கள்)'' என்றான்.

அதற்கு மேல் அங்கு தங்குவதில் பயனில்லை என்று உணர்ந்த டெய்லரும் இங்க்லண்டும் திரும்பிச் சென்றார்கள் சிந்து துர்க்கத்தின் வாயிலை நோக்கி. வில்வர் சிறிது தாமதித்தான். அவன் கண்கள் அனந்தின் இரு கால்களுக்கும் கீழே விரிந்து கிடந்த பாயை உற்று நோக்கியது. பிறகு அவனும் திரும்பிச் சென்றான். சிந்து துர்க்கத்தின் துறையை வேகமாக அடைந்த வில்வர், படகில் ஏற இருந்த டெய்லரையும் இங்க்லண்டையும் கையை காட்டி நிறுத்தினான். ''யூ ஆர் போத் பூல்ஸ். எ உமன் கெனாட் வானிஷ் இன் டு தின் ஏர் (நீங்கள் இருவரும் முட்டாள்கள். எந்தப் பெண்ணும் அந்தர்த்தானமாக முடியாது)'' என்று எச்சரித்தான்.

டெய்லரின் கோபம் உச்ச நிலையை அடைந்தது. ''யூ கோ அண்ட் பைண்ட் ஹர் (நீ போய் அவளைக் கண்டுபிடி)'' என்று கூறிவிட்டு, படகில் ஏறி ''இங்க்லண்ட் யூ கம் வித் மீ. லெட் அவர் டிடெக்டிவ் பைண்ட் த ஸீக்ரெட் (இங்க்லண்ட் என்னுடன் வா. நமது துப்பறியும் நிபுணர் ரகசியத்தைக் கண்டுபிடிக்கட்டும்)'' என்றும் சொல்ல இங்க்லண்டும் படகில் ஏறிச் சென்றுவிட்டான். அவ்விருவரையும் தாங்கிய படகு காலண்ட்ராலை நோக்கி விரைவதைக்கண்ட வில்வர், படித் துறையில் தீர்க்க சிந்தனையுடன் நின்றான் நீண்ட நேரம். அவன் திரும்பிப் பழையபடி சிவாஜி சிலையின் பக்கத்து அறைக்குத் திரும்பியபோது துலாஜி பத்தடி தூரத்தில் சென்று கொண்டிருந்தான். ''துலாஜி! தளபதி எங்கே?'' என்று வினவினான் வில்வர்.

''மாளிகைக்குப் போய்விட்டார்'' என்று கூறிய துலாஜி, வில்வரை லட்சியம் செய்யாமல் நடந்து விட்டான்.

வில்வர் நின்ற இடத்தில் சிறிது நேரம் நின்றான். துலாஜியின் தலை மறைந்ததும்

தனது தடியை ஓசைப்படாமல் ஊன்றிக் கொண்டு அறையை நோக்கி நடந்தான். அறையை அடைந்ததும் மெள்ளப் பூட்டின் துளை மூலம் உள்ளே எட்டிப் பார்த்தான். கதவின் துளையில் ஒரு துணி நன்ருக அடைக்கப்பட்டிருந்ததால் ஏதும் கண்களுக்குத் தெரியவில்லை. ஆகவே மெள்ளத் தனது தோளின் மீதிருந்த கிளியை எடுத்துப் பூட்டின் துளை மீது விட்டு ஜாடை காட்டவே அது தனது அலகைச் செலுத்தி ஒரு சிறு துணியை வெளியே இழுத்தது. வில்வர் மீண்டும் துவாரத்தில் ஒரு கண்ணை வைத்துப் பார்த்தான். அவன் முகத்தில் வியப்பு விரியவில்லை. உற்சாகத்தின் சாயையே மிகுந்திருந்தது.

அறைக்குள் சங்கர்பந்த் நின்றிருந்தார் அனந்துடன். அனந்த் அவரை நோக்கித் தரையைக் காட்டினான். பிறகு பாயைச் சுருட்டி ஒரு மூலையில் வைத்தான். பாயின் கீழே இரண்டு இரும்பு வளையங்கள் இருந்தன. அனந்த் தரையில் உட்கார்ந்து இரு வளையங்களையும் பிடித்துச் சுழற்றக் கீழே இருந்த வட்டமான பாருங்கல்லும் திரும்பியது. மும்முறை அப்படிச் சுற்றியவுடன் பாருங்கல் கையுடன் வந்துவிடவே அதை எடுத்து அப்புறம் வைத்தான் அனந்த். பிறகு அவன் ஏதோ சொல்ல முற்பட்டதால் கண்ணை அகற்றித் துளையில் காதை வைத்துக் கொண்டான் வில்வர்.

அனந்த் மிக நிதானமாகப் பேசினான்: "பந்த்! ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என்பதைக் காண்பித்து விட்டீர்கள். உமக்கு உமது மகளிடமும் நம்பிக்கையில்லை. என்னிடமும் நம்பிக்கையில்லை. ஆகையால்தான் உமது துர்புத்தியைப் போக்க மீண்டும் எனது இஷ்டங்களில் தலையிடாதிருக்க சிந்துதுர்க்கத்தின் ரகசியத்தை உமக்குக் காட்டுகிறேன். சிந்துதுர்க்கத்திலிருந்து பாண்டவ கட்டுக்குச் சுரங்க வழி இருப்பதை *சிட்னிஸ் பகாரிலிருந்து அறிந்தேன். இதை வந்தவுடன் பலமுறை தேடிப் பார்த்து வழி எங்கிருப்பது என்பதைப் புரிந்து கொண்டேன். அது பல காரியங்களுக்கு உபயோகப்பட்டது. முதலில் நான் மறைய உபயோகப்பட்டது. இப்பொழுது ராணி மறைய உபயோகப்பட்டது.

"இந்தச் சுரங்க வழியில்தான் முந்திய முறை நான் சென்றேன். இன்று ராணி சென்றிருக்கிருள். இது மட்டுமல்ல. இந்தப் பக்கத்துச் சுவரில் உள்ள ஒரு கல்லை அகற்றினுல் அடுத்து சிவாஜி சிலை இருக்கும் அறைக்குச் செல்லலாம். அப்படிச் சென்றுதான் ஒரு முறை சிவாஜிக்குப் பின்னுல் மறைந்து நின்று கட்டு துலாஜி எதிரிகளைத் துரத்தினுன். இதுதான் சிந்துதுர்க்கத்தின் ரகசியம். இது நீண்ட நாளாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இன்று உமது சந்தேகத்தாலும் அவசரத்தாலும் அவநம்பிக்கையாலும் வெளிப்பட்டு விட்டது" என்று விவரித்தான்.

சங்கர்பந்த் பதிலேதும் சொல்லவில்லை. கீழே தெரிந்த சுரங்கத்தைப் பார்த்துக் கொண்டு அச்சம் துலங்கிய கண்களுடன் நின்ருர். "தளபதியான எனக்கே இது தெரியாது" என்று வருத்தத்துடன் முணுமுணுத்தார். அந்தச் சமயத்தில் அனந்தின் புருவங்கள் திடீரென மேலே ஏறின. "வெளியே யாரோ இருக்கிருர்கள்" என்று கூறிக் கதவை நோக்கி வந்தான். "இல்லை வெறும் பிரமை" என்று கூறிக் கொண்டு திரும்பினுன் சங்கர்பந்தை நோக்கி.

இதற்கு மேல் வில்வர் கதவருகே நிற்கவில்லை. மெதுவாகக் கைத்தடியை ஊன்றிச் சென்ருன் சிந்துதுர்க்கத்தின் வாயிலை நோக்கி. அங்கிருந்த படகொன்றைத் தளையிலிருந்து அவிழ்த்துவிட்டு அதில் ஏறித் துடுப்புக்களைத் துழாவி பாண்டவ கட்டை நோக்கி மிக வேகமாகச் சென்ருன். "அனந்த்! வில்வருடன் விளையாடுவது ஆபத்து என்பதை விரைவில் புரிந்து கொள்வாய்" என்று குதூகலித்துத் தனக்குத் தானே பேசிக் கொண்டான். பாண்டவகட்டை அடைந்ததும் தரையில் குதித்து நேராகப் பழைய தென்னஞ் சோலையை நோக்கிச் சென்ருன்.

கடல் இருந்த கொந்தளிப்பாலும் காற்ருலும் அதை அவன் அடையச் சரியாக அரை ஜாம நேரம் பிடித்தது. மராட்டியரும் விஷயம் கையை விட்டு மீறவில்லை யென்ற துணிவில் சோலைக்குள் நுழைந்தான் மிகுந்த எச்சரிக்கையுடன். அவன் முயற்சியும் எச்சரிக்கையும் வீண் போகவில்லை. அந்தப் பழைய முந்திரிக் கிளையில் ராணி உட்கார்ந்திருந்தாள். அடுத்து வரும் ஆபத்தை உணராமல். அங்கு நுழைந்தது வில்வர் மட்டுமல்ல. வேறு பக்கத்திலிருந்து மற்றும் இருவரும் நுழைந்தார்கள். அப்பொழுது ராணி தனது இனிய குரலில் பாடவும் துவங்கிருள். என்ன காரணத்தாலோ அது சோக கீதமாக அமைந்தது.

(தொடரும்)

* சிட்னிஸ் பகார் என்பது மகாராஷ்டிர சரித்திரக் குறிப்புகள்.

"அந்தத் துணுக்கு எழுத்தாளர் புதுசா பிரிண்டிங் பிரஸ் வாங்கியிருக்காராம்!"

"எதுக்கு?"

"இப்போ பெருகியிருக்கிற எல்லாப் பத்திரிகைகளுக்கும் ஒரே துணுக்கை அனுப்பறதுன்னு எல்லாவது காப்பி எடுக்கணும்... அதான் 'பிரிண்ட்' பண்ணியே அனுப்பிச்சுடறு!..."

— ஜி. நடராஜன்





தமிழ் நாடு கிரிக்கெட் சங்கத்துக்கு பொன் விழா

நான் ஒரு நாலணா கிரிக்கெட் விசிறி. சுமார் நாற்பது ஐம்பது வருடங்களுக்குமுன்பு சேப்பாக்கம் மைதானத்தில் கிழக்கு பாகத்திலிருந்து மாட்ச் பார்க்கிறதுக்கு நாலணாதான் டிக்கெட். வெய்யிலேயும் மழையையும் மாட்சோடு சேர்ந்து நாங்க அனுபவிப்போம்.

இதெல்லாம் நினைவில் கொண்டுதான் சிதம்பரம் ஸ்டேடியம் அடிக்கல் நாட்டியவுடன் எங்கள் சௌகரியத்தை முதலில் கவனித்தார்கள். அதாவது கிழக்குப் பகுதியில்தான் முதலில் ஸ்டேடியம் கட்ட ஆரம்பித்து நாங்க குடியேறினோம்! டி. என். சி. ஏ. வுக்கு நன்றி! அவர்களுக்குத் தெரியும் நாலணாக்காரர்களை அலட்சியப் படுத்தக் கூடாதென்று. அந்தக் கூட்டத்திலேதான் கிரிக்கெட் அனுபவம் உள்ளவர்கள் நிறைய இருந்தார்கள்! கிரிக்கெட் சங்கக் காரியதரிசி ஸ்ரீராமன் கூட அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்! அதில் அவருக்கு அளவற்ற பெருமை! 'கிரிக்கெட் பைத்தியம்' பிடித்த பெரிய மனிதர்கள் பலர் அந்தக் கூட்டத்தில் இருந்தார்கள். பிரபல வக்கீலும் பெடரல் கோர்ட் ஜட்ஜுமான எஸ். வரதாச்சாரியார் இந்தக் கூட்டத்தில்தான் இருப்பார்! ஒருவித வித்தியாசமும் இல்லாது எங்களோடு அவர் மாட்சை அனுபவித்து ரசிப்பார்!

அந்தக் காலத்து நிகழ்ச்சி ஒன்று ஞாபகத்துக்கு வர்றது. சேப்பாக்கம் மைதானத்தில் பட் சகோதரர்கள் ரொம்ப பாப்புலர் ஆட்டக்காரர்கள். ஒரு தடவை பட் பூஜ்யம் எடுத்துவிட்டுப் பெவிலியனுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தார். எப்படி? சிரித்துக் கொண்டே! 'பெரிய ஸ்போர்ட்ஸ்மன் தாண்டா!' என்று நாங்கள் வியந்து பாராட்டினோம். இன்றைக்கு இப்படிப் பார்க்க முடியறதில்லையே! இவர்களுக்குப் பிறகு சேப்பாக்கத்தில் ரொம்ப 'பாப்புலர்' ஆனவங்க ராம்சிங்கும் எம். ஜே. கோபாலனும். இவர்களில் யார் உசத்தி என்பது பற்றி நாலணாக்காரர்களிடையே கட்சி பிரதி கட்சி உண்டு. ரெண்டு பேர்களைப் பற்றியும் காரசாரமாக விவாதிப்போம்.

உலகப் பிரசித்தி பெற்ற லட்கிளிப்பும் ஹாப்ஸும் சேப்பாக்கத்தில் ஆடியபோது, எம். ஜே. கோபாலன், அவர்களது விக்கெட்களைப் பறக்கச் செய்தது இன்னும் எங்க கண்ணிலே நிழலாடியபடி இருக்கு! இலங்கைக் கோஷ்டிக்கு எதிராக அவர் 'ஹாட்ரிக்' விக்கெட் எடுத்த இமாலய சாதனையையும் மறக்க முடியாது!

முதன் முதலில் சேப்பாக்கத்தில் ரஞ்சி கோப்பைப் பந்தயம் நடந்தபோது ராம்சிங் பத்து விக்கெட்டுகளை வீழ்த்தியது ஒரு ரஞ்சி கோப்பை ரிகார்டு!

சேப்பாக்கம் சரித்திரத்திலே முதல் டெஸ்ட் இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் 1934ம் வருஷம் பிப்ரவரி — மார்ச்சில் நடந்தது! இந்திய காப்டன் சி. கே. நாயுடு. இங்கிலாந்து குழு காப்டன் ஜார்டைன். அவர் ராணுவத் தளபதி போல் தம் குழுவைச் சேப்பாக்க மைதானத்தில் நடத்திச் சென்ற அழகு எங்களுக்கு நினைவிருக்கு! பாடியாலா யுவராஜா முதன் முதல் டெஸ்ட் ஆடினார். அழகர்! ஆட்டத்திலே மன்னர்! ராஜ கம்பீரமும் அலங்காரமுமாக வருவார். நெட்லாக்கு வந்தபோது பலர் அவருக்குத் தரையைத் தொட்டு வந்தனம் செலுத்தினார்கள்!

1936ம் வருஷம் ஆஸ்திரேலியக் குழு ஒன்று சேப்பாக்கத்துக்கு விஜயம் செய்தது. அதில் மறக்க முடியாத இரு ஆட்டக்காரர்கள் ரைடர், மெக்கார்ட்னி. மெக்கார்ட்னி 'ரன் அவுட்' ஆனார். உடனே ஒரு பிரகஸ்பதி கைதட்டிக் கத்தினார். "ரன் ஓடறானும்! ரன் அவுட்ஆகிவிட்டு இவன் பத்திரிகையிலே இந்தியருக்கு ரன் ஓடுவதைக் கத்துக் கொடுக்க முன்வந்திருக்கிறான்!" என்றார்! மெக்கார்ட்னியின் பெருமையைப் பற்றி அவருக்குத் தெரிந்தது அவ்வளவுதான்! மெக்கார்ட்னிக்கு கிரிக்கெட்டில் 'கவர்னர் ஜெனரல்' என்ற புகழே உண்டு.

இதே பந்தயத்திலே கோபாலன் முதல் இன்னிங்ஸில் ஆறு விக்கெட் எடுத்தார்! இரண்டாவது இன்னிங்ஸில் ஐந்து விக்கெட் எடுத்தவுடன் 'சென்னைக்கு நிச்சயம் வெற்றி' என்ற பூரிப்பில் எங்கள் நாலணாக் குழுவில் சிலர் ஓடிப்போய்ப் பெரிய ரோஜாப்பூ மாலை ஒன்றை வாங்கி வந்தோம். ஆனால் நடந்தது வேறு! ஆஸ்திரேலியக் குழுவில் கடைசி ஆட்டக்காரர்களான ஆக்ஸன்ஹாமும் லெதரும் சேர்ந்து தோல்வியை வெற்றியாக்கி விட்டார்கள்! எம். ஜே. கோபாலனுக்கு விழ வேண்டிய மாலை ஆக்ஸன்ஹாம் கழுத்தில் விழுந்தது!

இப்போ சேப்பாக்கம் ஸ்டேடியம் சிதம்பரம் ஸ்டேடியம் ஆகி முழு வடிவம் பெற்று விட்டது. எத்தனையோ சௌகரியங்கள். அந்த நாளில் அசௌகரியங்கள் இருந்தபோதிலும் ஆனந்தம் இன்றுள்ளதைப் போலவேதான்!

திரு பி. என். சுந்தரேசன் கூறக்கேட்டு
எழுதியவர் : குண்டுமணி



வசிய சுல்தான்

கருணமறான்

ஜஹாங்கீர் முறை வருவதற்கு இன்னும் குறைந்த பட்சம் ஒரு மணி நேரமாவது பிடிக்கும். 'நாம் நாடிவந்த காரியம் பலிக்குமா?' என்ற எண்ணம் சிறுகச் சிறுகத் தலை தூக்கியது. பலித்துவிட்டால்? இதைவிட வேறு பாக்கியம் உண்டா? இத்தனை பணம், சொத்து, வீடு வாசல் இருந்து என்ன பிரயோசனம் — நம் நாட்டம் நிறைவேறாத வரை?

இப்படிச் சிந்தனையில் மூழ்கியிருந்தவனை ஒரு குரல் எழுப்பியது.

''ஜஹாங்கீர்'' வஜீர் சுல்தானின் பணியாள் அழைத்தான்.

• • •

மாந்திரீகம், பில்லி சூனியம் வசியம் செய்வினை போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் பைத்தியங்களாக, பேய் பிடித்தவர்களாக, புரியாத நோய்வாய்ப்பட்டவர்களாக வஜீர் சுல்தானிடம் வந்தவர்கள் சம்பூரண சுகம் பெற்றுச் சென்றுள்ளார்கள் என்றும் மற்றும் மகப் பேறு இல்லாதவர்கள் வஜீர் சுல்தானைச்



''ஷேவிங் பண்ணணும். காசு தா பத்மா!''
''உங்க ஷேவிங்குக்குப் பணம் கொடுத்துக் கொடுத்தே என் சேவிங்ஸ் மொத்தமும் தீர்ந்து விடும் போலிருக்கே!''

சந்தித்த பிறகு சந்ததி விருத்தியைப் பெற்றுள்ளார்கள் என்றும், கணவன் மனைவி இடையே ஏற்பட்டிருக்கும் விரிசல்களை — பிணக்குகளைச் சில வசிய முறையால் தீர்த்து வைப்பார் என்றும் ஜஹாங்கீர் கேள்விப் பட்டிருந்தான். இப்போது அந்த வஜீர் கல்தானின் அழைப்பு வந்ததும் உள்ளே சென்றான்.

''அஸ்ஸலாமு அலைக்கும்'' என்றான் ஜஹாங்கீர்.

''வ அலைக்குமுஸ்ஸலாம் உட்காருங்கோ'' என்றார் வஜீர்.

வஜீர் கல்தான் எதிரில் அமர்ந்தான்.

''தாகத்துக்கு என்ன சாப்பிடுகிறீர்கள்? ரொம்ப நேரமா உட்கார்ந்திருந்தீர்களே?''

''பரவாயில்லே... நான் வந்த காரியம் சக்ஸஸ் ஆகவேண்டும்.''

''இந்தாப்பா, உமரு மோரு கொண்டு வா.''

கறிவேப்பிலை, மிளகாய்த் துண்டு மிதக்கக் கொண்டுவந்த மோர் பருகுவதற்குச் சுவையாக இருந்தது.

ஜஹாங்கீர் பருகி முடித்ததும், ''தம்பி வந்த விஷயம்?'' என்று கனிவோடு கேட்டார் வஜீர்.

''எனக்கொரு தங்கை இருக்கிறாள். பெயர் அஸ்மத் நிஸா. அவள் பிறப்பதற்கு எட்டு மாதங்களுக்கு முன்னால் என் தந்தை குடும்பத்தை விட்டு ஓடிவிட்டார். எங்கே போனார் என்ன ஆனார் என்று தெரியாது. அப்போது எனக்கு வயது மூன்று. தங்கை அஸ்மத்நிஸா விவரம் தெரிந்த நாள் முதல், அக்கம் பக்கத்து வீடுகளில் உள்ள சிறுவர் சிறுமிகளுக்கு அவரவர் தந்தை ஆற்றி வரும் கடமைகள் நமக்குக் கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் மேலிட, 'எங்க அப்பா எப்போ வரும்?' என்று கேட்கத் தொடங்கி விட்டாள். இந்த ஏக்கம் நாளடைவில் வளரத் தொடங்கிவிட்டது. எங்கள் தாயார் இருக்கும்வரை 'நாளை வருவார்' என்று நாளைக் கடத்திக் கொண்டிருந்தார்கள். கடைசியில் அவர்களும் காலமாகிவிட்டார்கள். தங்கையின் ஏக்கம் இப்போது இரட்டிப்பாகிவிட்டது. கடல் கடந்து அக்கரைச் சீமையில் மனைவி மக்களை விட்டு விட்டுப் பிரிந்தவர்களை யெல்லாம் நீங்கள் காந்தத்தில் வசியம் செய்து வரவழைத்துக் குடும்பத்தைச்சேர்த்து வைத்ததாகக் கேள்விப்பட்டு உங்களை நாடி வந்திருக்கிறேன். என் தந்தையின் முகவரி தெரியாது. அவர் இருக்கிறாரா இல்லையா என்று தெரிய வேண்டும். 'அப்படி அதிர்ஷ்டவசமாக அவர் இன்னும் உயிரோடிருந்தால், அவரை எங்களிடம் எப்படியாவது சேர்ப்பிக்க வேண்டும். நீங்கள் கேட்கும் காணிக்கை எவ்வளவாக இருந்தாலும் இப்போதே தருகிறேன்.''

''தம்பிக்கு எந்த ஊர்?''

''பிறந்த ஊர் தெரியாது; இப்போ இருக்கும் ஊர் குலசேகரப்பட்டணம்.''

''பேரு?''

''மூணு வயதில் தான் எனக்குப் பெயர் வைத்தார்களாம். ஜஹாங்கீர் என்று.''

''உங்க அம்மா பெயர் சொல்ல முடியுமா?''

''பாவா, நான் வந்த காரியம் அனுகூலம் ஆகுமா, ஆகாதா? அதை முதலில் சொல்லுங்கள்.''

மௌனமானார் வஜீர் கல்தான்.

ஐந்து நிமிடம் கழித்து ஒரு புராதன கிரந்தத்தை விரித்து வலது கர ஆட்காட்டி விரலால் மூன்று தடவை சுற்றிவிட்டுத் தொடும்படி ஒரு வட்டத்தைக் காட்டினார். வட்டத்துள் பல கட்டங்கள் இருந்தன.

ஜஹாங்கீர் அவர் சொன்னபடி செய்தார்.

''உன் தந்தை இன்னும் உயிரோடுதான் இருக்கிறார்!''

''அல்ஹம்துலில்லாஹ் ரொம்ப மகிழ்ச்சி பாவா!''

''அவரை வரவழைக்க முகவரி தெரியாது என்கிறாய். பரவாயில்லை. அவருடைய புகைப்படம் கிடைக்குமா?''

''இல்லியே''

''சரி! பொறுமையோடு நான் கேட்கும் கேள்விக்குப் பதில் தரவேண்டும். முடியுமா?''

''தாராளமாக!''

''அப்படியானால் இன்றிரவு இங்கே நீங்கள் என்னோடு தங்கவேண்டும். சாத்தியப்படுமா?''

''பேஷாக!''

''இப்போதைக்கு நீங்கள் போகலாம்! மாலையில் ஏழு மணி சுமாருக்கு வந்தால் போதும்.''

''ஆகட்டும். வரட்டுமா?''

ஜஹாங்கீர் வெளியே வந்தான். மற்றவர்கள் அழைக்கப்பட்டார்கள்.

பள்ளிக்கூடத்தில் முதன்முதலாகச் சேர்ந்த போது ஜஹாங்கீரிடம் தந்தையின் பெயரைக் கேட்டார்கள். பாட்டியிடம் ஓடிவந்து தந்தையின் பெயரைக் கேட்டுத் தலைமை உபாத்தியாயரிடம் சொன்னான் அன்வர் மைதீன். காலப் போக்கில் பாட்டி மூலம்தான் தந்தையைப் பற்றி ஜஹாங்கீர் சில விவரங்கள் தெரிந்து கொண்டான்.

அஸ்மத் நிஸா அன்னையின் வயிற்றில் இரண்டு மாத கருவாக இருந்தபோது, சூதாடும் பழக்கம் உள்ள அன்வர் மைதீன் கையில் காசு இல்லாமல் அன்னையின் கை வளையலை அடகு வைக்கக் கேட்டபோது ஷர்புன்னிஸா மறுத்ததால், தகராறு ஏற்பட்டு ஷர்புன்னிஸாவை அடித்து நொறுக்கிவிட்டு வெளியேறிவிட்டார். அன்று போனவர் தான். இன்றுவரை திரும்பவில்லை — பாட்டி சொன்னாள்.

இன்னும் சிறிது காலம் கழித்து ஜஹாங்கீர் இன்னொரு விஷயமும் கேள்விப்பட்டான்.

சூதாடப் பணம் இல்லாதபோது அன்வர் மைதீன் தனக்கு 'வாஸக்டமி' செய்து

கொண்டு பணம் வாங்கினர். இது ஊரறிந்த விஷயம். அதுசமயம் ஸர்புன்னிஸா குழந்தை உண்டாகியிருந்தது ஊருக்குள் சந்தேகத்தை விளைவித்து ஆளுக்கு ஆள் கிசுகிசு பேசிக் கொள்வதைச் சகிக்காமல் அந்த ஊரை விட்டும் வெளியேறி குலசேகரப்பட்டணத்தில் குடியேறிவிட்டார்கள். ஆனால் கடைசியாக ஸர்புன்னிஸாவை அனுபவித்த மறுதினம் தான் அவர் கருத்தடை செய்துகொண்டார் என்ற விவரம் ஊராருக்குத் தெரியாது. பாட்டி இறக்கும் தருவாயில் சொன்னாள் ஜஹாங்கீரிடம்.

பிள்ளைப் பேறு இல்லாத குலசேகரன்பட்டணத்துச் செல்வந்தர் அப்துல் கப்ஹான் ஜஹாங்கீரின் படிப்பு ஆர்வத்தைக் கவனித்து, பட்டப் படிப்பு வரை படிக்க வைக்க உதவியதோடு தன்னுடைய தொழில் நிறுவனத்தில் பின்னால் சேர்த்துக் கொண்டார். சொந்தத்தில் பெண் பார்த்துத் திருமணம் செய்வித்து வீட்டோடு அவர்களை வைத்துக் கொண்டார்.

ஜஹாங்கீரின் அளப்பரிய சேவையும் நாணயமும் அப்துல் கப்ஹானைக் கவர்ந்து பேச்சு வார்த்தை முறிந்துவிட்டது.

தங்களுடைய சொந்த ஊர் சாத்தான்குளம் என்பது ஜஹாங்கீருக்கு அதன் பிறகு தான் தெரிந்தது. அன்றையிலிருந்து சொந்த ஊரை யாரிடமும் ஜஹாங்கீர் குறிப்பிட விரும்புவதில்லை.

அஸ்மத் நிஸா ஒரு வாரமாகச் சாப்பிடவில்லை. சாத்தான்குளம் பேச்சு வார்த்தை முறிந்ததிலிருந்து.

ஜஹாங்கீர் உள்ளத்தில் கவலை என்னும் சிலந்தி வலை விரித்தது.

அப்போதுதான் ஏர்வாடி வஜீர் கல்தானைப் பற்றியும், அவருடைய வசிய முறைகள் நூற்றுக்கு நூறு பலிதமாவதைப் பற்றியும் கேள்விப்பட்டு அவரை நாடி வந்தான்.


• • •

மணி ஆறு நாற்பத்தைந்து.

மாலைநேரத் தொழுகையை முடித்துவிட்டு, தொழுகை விரிப்பிலேயே மண்டியிட்டிருந்தார் வஜீர் கல்தான்.

புயல் வருவதை முன் கூட்டியே அறிந்து கொள்ளக் கூடிய சக்தி தேனீக்களுக்கு உண்டு. புயல் வரப்போவதைத் தெரிந்துகொண்டு தேனீக்கள் கூட்டுக்குத் திரும்பி வந்து விடுகின்றன.

-பிரியா பாலு



விட்டனர். தம்முடைய சொத்துக்களுக்கும் தொழிலுக்கும் ஜஹாங்கீரையே அதிபதியாக்கிவிட்டுச் சில நாட்களில் காலமானார். அதைத் தொடர்ந்து ஸர்புன்னிஸாவும் காலமானாள்.

தங்கைக்கு நல்ல இடங்களில் வரன் பார்க்கும்படி ஜஹாங்கீர் தெரிந்தவர்களிடம் சொல்லி வைத்திருந்தான்.

சாத்தான் குளத்திலிருந்து மொராஜ் அலி, என்ற வரனை ஜஹாங்கீர் தேர்ந்தெடுத்தான். பி.பி.ஏ. படித்து பெங்களூரில் நல்ல உத்தியோகத்தில் இருந்தான். அஸ்மத் நிஸாவைப் பிள்ளை வீட்டாருக்கும் பிடித்திருந்தது. பேச்சு வார்த்தை சுமுகமாக முடியும் தருவாயில் பெண்ணின் தந்தையைக் குறித்துப் பேச்சு வார்த்தை எழுந்தது. சுற்றி வளைத்துக் கடைசியில் இது இன்னார் மகள் என்றதும் 'அவர் மனைவியின் நடத்தையில் சந்தேகப் பட்டு ஓடிப்போனவராயிற்றே... அவருடைய மகளா? லட்சம் ரூபா 'டௌரி' தந்தாலும் இந்தப் பெண் வேண்டாம்!' என்றனர்.

''வா, தம்பி, வா!'' வஜீர் கல்தான் கனிவோடு அழைத்தார்.

பணிவோடு அவர் எதிரில் அமர்ந்தான் ஜஹாங்கீர்.

''வயது வந்த உங்கள் தங்கையைக் கல்யாணம் செய்து வைக்க வேண்டும் என்ற ஆர்வம் உங்களுக்கு அதிகமாக இருக்கிறது. அண்மையில் எடுத்த அதற்கான முயற்சிகூட கடைசி நேரத்தில் முறிந்து விட்டது. அதன் பிறகுதான் என்னைத் தேடி வந்திருக்கிறீர்கள்.''

ஜஹாங்கீர் திகைத்தான். எவ்வளவு சரியாகச் சொல்கிறார் என்று.

''இந்தக் கல்யாணம் நிச்சயம் நடக்கும். அவர்களே மறுபடி வந்து சம்பந்தம் பேசுவார்கள். கவலை வேண்டாம்! மற்றொன்றும் சொல்கிறேன். உங்கள் தங்கையின் கையில் ஆறு விரல்கள் இருக்கும்!''

''ஆமாங்க! சரியாய்ச் சொல்லிட்டீங்க! எங்க தந்தை வந்துவிடுவார்களா?''

''இன்ஷா அல்லா இருபத்தேழாவது நாள் முஹரம் இருபத்தோராம் பிறைக்கு

உன் தந்தை உங்களைத் தேடி வரும்படி செய்துவிட்டேன். நிச்சயமாக வருவார்!''

''அல்ஹம்துலில்லாஹ்! எவ்வளவு பணம் வேணும்?''

''உங்கள் தந்தை வந்த பிறகு, உங்கள் கர்களுடன் வந்து காணிக்கையைச் செலுத்தினால் போதும்!''

''நன்றிங்க!''

இருபத்தேழாவது நாள்.

விடிகாலையிலேயே எழுந்து விட்டான் ஜஹாங்கீர். தன் பிள்ளைகளிடம் முன் தினமே தாத்தா வருவதாகக் கூறியிருந்ததால் அவர்களும் எழுந்து விட்டனர். தன்னுடைய மாமனாரை முதன் முதலாகக் காணப் போகும் ஆவலில் இருந்தாள் ஜஹாங்கீரின் மனைவி நஸீமா. தந்தையின் முகத்தைத் தன்னுடைய இருபத்தோராவது வயதில் காணப் போகும் உற்சாகத்தில் அஸ்மத் நிஸா விடிய விடிய உறங்கவேயில்லை.

வஜீர் கல்தானின் சொற்படி நடக்காவிட்டால் பெரிதும் ஏமாற்றமாகி விடுமே என்று எனில் யாரிடமும் ஜஹாங்கீர் தந்தையின் வருகையைப் பற்றிக் கூறவில்லை.

டக்! டக்! டக்டக்!

ஜஹாங்கீர் கதவைத் திறந்தான்.

வஜீர் கல்தான்! முற்றிலும் மாறுபட்ட தோற்றம். புதிய மனிதராக நின்றார்.

''நீங்களா..''

''ஆம், மகனே! நானேதான்! உன் தந்தை அன்வர் மைதீன்! வஜீர் கல்தான் கோலம் கலைந்த அன்வர் மைதீன்!''

''இது என்ன பித்தலாட்டம்! நீங்களாவது என் தந்தையாவது! யாரை ஏமாற்ற வந்திருக்கீங்க... கெட் அவுட்!'' ''இன்னொரு தடவை மகன் இகன் என்று உறவு கொண்டாடினால் நடப்பது வேறாக இருக்கும்!''

''ஒரு இரண்டு நிமிஷம் நான் பேசலாமா?''

இரண்டு விநாடி அனுமதித்தால் கூட உமது வலிய சக்தியால் ஏமாற்றி விடுவீர் என் செல்வத்திலே உமக்கு ஆசை விழுந்து விட்டது புரிகிறது!''

படீர்! — கதவைச் சாத்தித் தாழ்ப்பாளைப் போட்டான். ஜஹாங்கீரின் உள்ளம் அமைதி பெற இரண்டு மணி நேரமாயிற்று.

ஒரு வாரம் கழிந்தது.

'போஸ்ட்!''

பதிவுத் தபால் ஒன்றை ஜஹாங்கீரிடம் நீட்டினார் தபால்காரர்.

இனிய மைந்தா!

உங்களை அநாதரவாய் விட்டுச் சென்றதற்கு, நீ கொடுத்த சாட்டையடி போதாது என்றே தோன்றுகிறது! இத்தனை கால இடைவெளிக்குப் பிறகு என்னை இன்னார் என்று காண்பிக்க உன் அன்னை இல்லாதது எனது துரதிர்ஷ்டம். வீட்டை விட்டுப் புறப்பட்டவன் கேரளாவுக்கு வந்து விட்டேன். இங்கேதான் விதி என்னை வஜீர் கல்தானோடு இணைத்தது.

ஆம்! வஜீர் கல்தான் என்னுடைய உஸ்தாத்! அவருடைய ஊமைப் பெண்ணை மணந்

DAMIEN OMEN - II

சைத்தான் மனித உருவில் வந்து மனிதர்களின் உயிர்களைக் குடிக்க முற்பட்டதானால் அந்தப் பயங்கரத்தைச் சொல்லி முடியுமா? இதைத்தான் ஓமன் என்ற திரைப்படம் எடுத்துக் காட்டியது. குழந்தையாகப் பிறக்கும் சைத்தான் தன் தாயையே காவு கொள்ள மறைமுகமாகக் காரணமாகிறது. கோபத்தில் குழந்தையைக் கொல்ல வந்த தந்தையைப் போலீஸ் சுட்டுத் தள்ளி விடுகிறது. டாமியன் என்ற அந்த பிசாசக் குழந்தை அனாதையாகி விடுகிறது.



வேறொரு குடும்பத்தினர் அதனைத் தத்தெடுத்துக் கொள்கின்றனர். இது ஓமனின் முதல் பாகக்கதை!

இப்போது ஓமனின் இரண்டாம் பாகம் திரையிடப்படவிருக்கிறது. சைத்தானின் சக்திகளுடன் பையன் சற்றுப் பெரியவனாக வளர்ந்து விடுகிறான். இந்தச் சக்திகளைப் பற்றிக் கொஞ்சமும் அறியாத தொழிலதிபர் ரிச்சர்டும் அவரது மனைவி ஆன்னும் அவனைச் சுவீகரித்து வளர்க்கின்றனர்.

டாமியனின் நடத்தையும், சாதுர்யப் பேச்சும் பலரை வியக்க வைக்கிறது; சிலரைச் சந்தேகிக்க வைக்கிறது. ஒரு பழங்கால குகை ஓவியமொன்றை இருவர் ஆராய்ந்தபோது அது டாமியனின் உருவத்தை ஒத்திருப்பதை கண்டு வியக்கின்றனர். ஆராய்ச்சி செய்த குகை நொறுங்கி இடிபாடுகளில் சிக்கி இருவரும் உயிர் இழக்கின்றனர்.

இப்படியே ஒருவர் பின் ஒருவராக டாமியனுடன் தொடர்பு கொள்ளும் அனைவருக்கும் மரணம் சம்பவிக்கிறது. கோரமான விதங்களில். கடைசியில் வளர்ப்புத் தந்தை ரிச்சர்டு டாமியன் சைத்தானின் அவதாரம்தான் என்ற முடிவுக்கு வந்து அவனைக் கொல்லப் போகும்போது அவருடைய மனைவி ஆன் குத்தி விடுகிறாள்! டாமியனுக்கு ஒன்றும் நேரவில்லை...! விறுவிறுப்பும் பயங்கரமும் மிக்க இப்படத்தை அசாதாரண துணிச்சல் உள்ளவர்கள்தாம் பார்க்க வேண்டும்.

— டி. எம். ஆர்.

படம்: டாமியன் பற்றிய உண்மையை உணர்ந்து ஆதாரங்களுடன் எழுதப் புகுந்த ஜோன் ஒரு காகத்தால் பயங்கரமாகத் தாக்கப் படுகிறான்.

அருளாநான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும்
அணுத்துணையும் சினம்காமம் அடையாமை வேண்டும்
மருளாய உலகம்எலாம் மருள்நீங்கி ஞான
மன்றிடத்தே வள்ளல்உனை வாழ்த்தியிடல் வேண்டும்
இருளாமை உறல்வேண்டும் எனைஅடுத்தார் சுகம்வாய்ந்
திடல்வேண்டும் எவ்வுயிரும் இன்படைதல் வேண்டும்
பொருளாம்ஓர் திருவடியில் உடையாயும் நானும்
புணர்ந்துகலந்து ஒன்றாகிப் பொருந்துதல் வேண்டுவனே!

— திருஅருட்பா

தால், அவருடைய வசிய முறைகளை எனக்குக் கற்றுத் தருவதாக வாக்களித்தார். அதன்படி செய்தேன். பதினேழு வருஷங்களில் நான் முழுமையான 'தொல்லாளி'யாக விளங்கினேன். வயதான வஜீர் கல்தான் காலமாகிவிட்டார். அந்தப் பெயரை எனக்கு நானே வைத்துக் கொண்டேன். உங்களைத் தேடி நான் சாத்தான்குளம் வந்து என்னை இன்னார் என்று காட்டிக் கொள்ளாமல் உங்களைப் பற்றி விசாரித்தேன். நீங்களெல்லாம் ஊரை விட்டே போய்விட்டதாக அறிந்து மனமுடைந்து திரும்பினேன். அண்மையில் உனது சித்தி — ஊமைப் பெண் காலமாகி விட்டாள்.

ஜஹாங்கிர்! கல்யாண முறிவு விஷயமாக நான் கூறியது ஜோஷ்யமோ அல்லது ஜோஸ்யமோ அல்ல. மெராஜ் அலியின் தாயார் என்னிடம் வந்து அந்தத் தகவலைச் சொன்னார். என்னை இன்னார் என்று அவர்களுக்குத் தெரியாது. அந்தப் பெண்ணுக்கு ஆறு விரல்கள் இருந்தன என்றார். உன் தாயாருக்கும் ஆறு விரல்கள் உண்டு. நீ பிறந்த பிறகுதான் அந்த ஆறாவது விரலில் நகச்சுற்று வந்து இற்று விழுந்தது. 'எங்களுக்குப் பெண்ணைப் பிடித்திருக்கிறது. ஆனால் அதன் கதை, தகப்பன் பேர் தெரியாத கதையாகி விட்டதே என்பதை நினைக்கும்போது வருந்தாமல் இருக்க முடியவில்லை. இது நிஜமாக இருக்குமா?' என்றார்.

ஜஹாங்கிர்! எனக்கு அப்போது எப்படி இருந்திருக்கும்? உத்தமமான என் மனைவி மீது சந்தேகம்! எனக்குப் பிறந்த பெண்ணைப் பற்றி என்னிடமே வந்து இது அசலா, போலியா என்று கேட்கிறான்!

அவர்கள் நம்பும்படி கூறினேன். அந்தப் பெண் உத்தமமான கணவன் மனைவிக்குப் பிறந்தவள் என்று. உங்கள் மகன் அந்தப் பெண்ணை மணந்தால் சிறந்த எதிர்காலம் இருக்கிறது என்றும் கூறினேன். முழு மனதுடன் பரிபூரண திருப்தியுடன் சென்றார்கள்.

அதற்கடுத்த வாரம்தான் நீ என்னிடம் வந்தாய். உன் கதையைக் கூறி குலசேகரன் பட்டினம் என்றதும் நான் புரிந்துகொண்டேன். மைந்தா, என்னிடம் வந்து என்னை மேல் வரவழைத்துத் தரவேண்டும் என்று மன்றாடினாய். அந்த உருக்கமான உன்னுடைய வேண்டுகோள், என் கண்களைக் குளமாக்கியதைக் கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்ததால் நீ கண்டுகொள்ள முடியவில்லை.

ஏற்கனவே, நான் பில்லி சூனியங்களால் பாதிக்கப்பட்ட சிலருக்காக இருபத்தேழு நாட்கள் வேலை செய்ய வேண்டியிருந்ததால், அன்று உடனே உன்னுடன் புறப்பட்டு வர முடியவில்லை. இந்த வேலையை முடித்துவிட்டு அத்தோடு இந்தத் தொழிலுக்கும் ஒரு முத்தாய்ப்பு வைத்துவிட்டு, மறுபடியும் அன்வர் மைதீனாக வந்து உங்களுடன் எனது எஞ்சிய காலத்தைக் கழிக்கலாம் என்று வந்த இடத்தில் உன்னுடைய வரவேற்பு இப்படி அமையும் என்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவேயில்லை.

என்னுடைய வசிய முறையால் பிரிந்திருந்த அநேக குடும்பங்களை நான் இணைத்திருக்கிறேன். பல கணவன் மனைவிகளை ஒன்றுபடுத்தியிருக்கிறேன். ஆனால், என் சொந்த வாழ்க்கையில் நான் தோற்றுவிட்டேன். அதிலும் என் மகனிடமே தோற்றுவிட்டேன்.

ஜஹாங்கிர். இந்த அன்வர் மைதீனுக்குப் பிறந்த நீ உன் தந்தையை வென்றுவிட்டாய்! அவருடைய வசியம் உன்னிடம் எடுபடவில்லை. அதற்காகப் பெருமைப்படுகிறேன்!

கடைசியாக ஒரு வேண்டுகோள். என்னைத்தான் நீ ஏற்க முன்வரவில்லை. இவ்வளவு காலமும் நான் சம்பாதித்த பணம் இதோ இருபத்தையாயிரம் ரூபாய் டிராஃப்ட்டாக இருக்கிறது. அதையாவது ஏற்றுக் கொள்வாயா?

எல்லோரும் சேர வேண்டிய இடம் நோக்கிப் புறப்படுகிறேன். — அன்வர் மைதீன்

ஜஹாங்கிரின் உள்ளம் உடைந்தது. இத்தனை நாட்களுக்குப் பிறகு தன்னைத் தேடி வந்த தந்தையை அவசர புத்தியால் ஓடி விடச் செய்த மதியீனத்தை நினைத்து ஊமைக் கண்ணீர் வடித்தான்.

''பாவா, நீங்கள் தோற்கவில்லை. தோற்றது நான்தான். கண்ணிருந்தும் உங்களைக் காணும் அருகதையை இழந்து விட்டேன்! உங்களைக் காணாமல் இருந்ததை விட இப்போது உங்களைக் கண்ட பிறகு உங்களை மறக்கவொண்ணாமல் எங்களை வசியப்படுத்திச் சென்ற நீங்கள் தோற்கவில்லை! பாவா, நீங்கள் வஜீர் கல்தான் இல்லை! வசிய கல்தான்! எங்களை வசீகரித்து விட்ட வெற்றிக் கல்தான்!''



''சார், சிறுவர் பகுதிக்கு ஒரு கதை கொண்டு வந்திருக்கேன்!''

''என்ன கதை?''

''காதலித்தால் மட்டும் போதுமா!''



ஒருவர் மற்றவருடைய அனுபவத்திலிருந்து பயனடைவதே விவேகமான செயலாகும். இவ்விருவரும் சேமித்திட முடிவு செய்துள்ளனர், எனவே இவர் தம் குடும்பம் நல்வாழ்வு பெறுவது திண்ணம். பாங்க் ஆஃப் பரோடாவில் சேமிப்பு கணக்கு வைத்துள்ள இலட்சக்கணக்கான இல்லத்தரசிகளே இந்த விவேகத்தின் சான்றாக உள்ளனர். இயன்ற போதெல்லாம், இயன்ற அளவு இவர்கள் சேமித்துக் கொண்டிருப்பதன் மூலம், தங்கள் குடும்பம் செழிப்புடன் விளங்கச் செய்வதில் வெற்றி கண்டுள்ளனர்.

பாங்க் ஆஃப் பரோடாவில், சேமிப்பு கணக்கு மட்டுமன்றி இன்னும் நல்ல பல திட்டங்கள் உண்டு. நீங்கள் நல்ல முறையில் சேமித்திட அவைகள் உதவுகின்றன.

நீங்களும் சேமிக்கத் தொடங்குங்கள்—நீங்களும் உங்கள் குடும்பமும் நல்வாழ்வு நோக்கி நடைபோடவே.

சிறந்த திட்டங்களில் உகந்ததைத் தேர்ந்தெடுங்கள்:

1. மந்த்லி இன்கம் பிளான்
2. ஃபிக்ஸட் டெபாஸிட் பிளான்
3. ரெகுலர் இன்கம் பிளான்
4. ரெக்கரிங் டெபாஸிட் ஸ்கீம்
5. ரெகுலர் இன்கம்-கம்-ரெக்கரிங் டெபாஸிட் பிளான்
6. ஃபெஸ்டிவல் டெபாஸிட் பிளான்

முழுமையான பாங்கிங் வசதிகளையும் சேவைகளையும் பெற, பாங்க் ஆஃப் பரோடா உங்களை முகமன் கூறி வரவேற்கிறது.

சேமிப்பது ஒரு நல்ல பழக்கம்

பாங்க் ஆஃப் பரோடா

(இந்திய அரசுக்குச் சொந்தமானது)

ULKA-BOB-2/80 TAM

கல்கி

சந்தா விவரம்

★

	ஓராண்டு	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 46	ரூ. 23
இலங்கை (இந்திய நாணயப்படி)	ரூ. 64	ரூ. 32
இதர வெளிநாடுகள்	ரூ. 100	ரூ. 50

மானேஜர்

கல்கி, சென்னை - 600 032

ஐம்பது வயதை எட்டிக் கொண்டிருந்தாலும் அவர் மகாராஷ்டிரா கிரிக்கெட் அணியின் தலைவராக ஆடிக் கொண்டிருந்தார். சென்ற ஆண்டு வென்ற ரஞ்சி கோப்பையை இந்த ஆண்டும் தக்க வைத்துக் கொள்ள அவருக்கும் அவரது 'அணிக்கும் ஆசை. இடுமென்று அவருக்கு முழங்கால்களில் வலி ஏற்பட்டது. இனி கிரிக்கெட்டே ஆட முடியாதோ என்ற கவலை ஏற்பட்ட போது அணிக்குத் தலைமை தாங்குவதாவது, கோப்பையை வெல்வதாவது?

கவலையைப் போக்கும் மருந்துடன் அப்போது பூனாவில் உள்ள டெக்கான் ஜிம்கானாவுக்கு ஓர் இருபது வயது இளைஞர் வந்து சேர்ந்தார். கிரிக்கெட் காப்டனுக்குக் கால் வலி நிரந்தரமாக நீங்கியது. அந்த ஆண்டிலும் மகாராஷ்டிர அணிக்குத்தான் ரஞ்சிக் கோப்பை. அப்புறம் ஐந்து வருட காலம் தொடர்ந்து அந்தக் காப்டன் கிரிக்கெட் ஆடிக் கொண்டிருந்தார். அவர்தான் டி.பி. தியோதார்! அவருக்கு உதவிய இளைஞர் பி. கே. எஸ். ஐயங்கார். அவர் மருந்தைப் புட்டியில் அடைத்துக் கொடுக்கவில்லை. யோகாசனப் பயிற்சியாகக் கொடுத்தார்.

1940ம் வருஷத்திய இந்த நிகழ்ச்சியின் விளைவாக பூனா நகரில் ஒரு யோகாசனப் பயிற்சி நிலையம் தோன்றியது. பூனாவிலுள்ள படை வீரர்களுக்கும் ஆசனப் பயிற்சிகளைக் கொடுக்க திரு ஐயங்கார் மூலம் அரசு ஏற்பாடு செய்தது.

இன்று திரு பி. கே. எஸ். ஐயங்கார் உலகின் பல பாகங்களிலும் ஆர்வமுள்ளவருக்கும் யோகாசனப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்திருக்கிறார். யோகாசனங்கள் பற்றி அவர் எழுதியிருக்கும் புத்தகம் பல மொழிகளிலும், உலகின் பல பாகங்களிலும் விற்பனையாகிறது. பூனாவைத் தலைமை நிலையமாகக் கொண்ட ஐயங்கார் வருஷத்தில் ஏழெட்டு மாதங்கள் வெளி நாட்டிலுள்ள தம் கிளை நிலையங்களுக்குப் போய் ஆங்காங்கு தம் பழைய, புதிய சிஷ்யர்களைச் சந்தித்து அவர்களுடைய யோகாசனப் பயிற்சி முன்னேற்றத்தைக் கவனிக்கிறார்.

விஞ்ஞான அடிப்படையில் உடற்கூறு சாஸ்திரப்படி இவர் யோகாசனப் பயிற்சியைப் போதிப்பது மேலை நாடுகளில் பல மருத்துவ மேதைகளின் பாராட்டைப் பெற்றிருக்கிறது.

''மனமும் உடலும் ஒரே மாதிரியான கட்டுப்பாட்டில் இயங்க வைப்பதுதான் யோகாசனத்தின் தத்துவம்'' என்று சுருக்கமாக விளக்கம் கொடுக்கும் ஐயங்கார், தம்முடைய பதினாறு வயது வரை சோனியாகத்தான் இருந்தார். பிறகுதான் உறவுக்காரரும், சிறந்த கல்விமானுமான கிருஷ்ணமாச்சாரியாரிடம் போய்ச் சேர்ந்தார். அவர் இவருக்கு யோகாசன வழி முறைகளைச் சொல்லிக் கொடுக்க அதன் விளைவாக இருபது வயதில் உடற்கட்டு மிகுந்தவராக மாறினார் பி.கே.எஸ். ஐயங்கார்.


வயலின் மேதை யஹூதி மெனூஹின் பி.கே.எஸ். ஐயங்காரின் சீடர். அதேபோல் லால்குடி ஜெயராமனும் அவரிடம் யோகாசனப் பயிற்சி பெற்றவர்.

ஐயங்கார் சமீபத்தில் ஜப்பானுக்குப் போயிருந்தார். அங்கிருந்து அவர் லால்குடி ஜெயராமனுக்கு எழுதிய கடிதம் ஒன்றில், ''இங்கு நான் ஒரு திரைப்பட நட்சத்திரம் போல் பிரபலமடைந்திருக்கிறேன். அன்பினால் திக்குமுக்காடச் செய்கிறார்கள்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

வாட்டிகன் நகரில் புனித போப் பால்-6 முன் யோகாசனங்கள் போட்டுக்காட்டி விளக்கம் கொடுத்து அவர் பாராட்டைப் பெற்றுள்ள ஐயங்கார் அறிஞர்கள், கலைஞர்கள் பலரது தேக ஆரோக்கியத்தைப் பாதுகாத்தது மட்டுமல்ல. அதையொட்டி அவர்களது அறிவும் கலையும் மேலும் விகசிக்கவும் யோகாசனம் மூலம் உதவியிருக்கிறார்.

— கோமதி ஸ்வாமிநாதன்





ஆசனப் பயிற்சிக்கு ஓர் ஆசான்

புதிய தலைமுறை



மிஸ். ராதிகா ஸ்ரீநிவாசன்
(நீச்சல் வீரர்)

சேக்ரட் ஹார்ட்பள்ளியில் பத்தாம் வகுப்புப் படித்து முடித்துவிட்டு இந்த ஆண்டு ஆதர்ஸ வித்யாலயாவில் ப்ளஸ் 2 முதல் ஆண்டில் சேர்ந்துள்ள ராதிகா ஸ்ரீநிவாசனுக்கு நீச்சலுக்கு அடுத்தபடி மிகவும் விருப்பமானது கணக்குப் பாடம்தான். அப்பா மாதிரி கட்டடக் கலைஞராகவோ கணிதத் துறையிலோ பணியாற்ற வேண்டும் என்பது இவருடைய ஆசை.

தினசரி காலையில் இரண்டு மணி நேரம் நீச்சல் பழகுகிற இவருடைய குறை தமக்குக் தகுந்த போட்டியில்லையே என்பதுதான்! அதிகம் பேர் இந்த நீச்சல் பந்தயங்களில் பங்கேற்க முன்வருவதில்லையாம். ஆண்டுக்கு ஒன்றிரண்டு முறை தான், போட்டிப் பந்தயத்துக்கு வாய்ப்பு. அதுவும் கேரளம் போன்ற வெளி இடங்களுக்குச் சென்றால் தான்.

தன்னுடைய பத்தாவதுவயதில் 1975ல் ஜூனியர் நேஷனல் போட்டியில் பங்கு கொண்டு வெண்கல மெடல் பரிசு பெற்ற இவர் தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறார். 1977ல் தங்க மெடல் பரிசு பெற்றார். சென்ற ஆண்டு அகில இந்திய ஸீனியர்களுக்கான போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றார். தமிழ்நாட்டிலிருந்து கலந்துகொண்ட ஒரே பெண் இவர்தான். கர்நாடக இசையிலும் ஆர்வம் உள்ளவர் இவர்.



திரு உ. ராஜாஜி
(துணுக்கு எழுத்தாளர்)

"என்னைக்கி இவன் எழுதறதை நிறுத்தறானோ அன்னைக்குத்தான் உருப்படுவான்..." என்று தந்தையிடம் ஆசி பெற்ற திரு ராஜாஜி இதுவரை எழுதிப் பிரசுரமாகியுள்ள நகைச்சுவைத் துணுக்குகளின் எண்ணிக்கை 1200. சிறு கதைகளும் எழுதியிருக்கிறார்.

இவர் பிறந்த ஊர் இராமநாதபுரம் மாவட்டம் இடைக்காட்டூர். பணியாற்றுமிடம் நரிக்குடி கிராமம் மாவட்டக் கிளை நூலகராக. சுதந்திரப் போராட்ட வீரரான திரு உதயப் பெருமாள் பிள்ளையின் மகன் இவர். மூதறிஞர் ராஜாஜி மீது அவருக்கிருந்த அபிமானம் காரணமாக 'ராஜாஜி' என்றே பெயரிட்டார்களாம்.

மூன்று குழந்தைகள். ஒன்றின் பெயர் ஜெயகாந்தன். 'தீவிரமான ஜெயகாந்தன் ரசிகன், சிஷ்யன்' என்று கூறிக் கொள்வதில் பெருமையடையும் திரு ராஜாஜி, ஜெயகாந்தன் நூல்களை முறைகேடாக விமர்சனம் பண்ணுகிறவர்களுடன் போட்ட சண்டைகள் அநேகம்.

இவருக்குப் பிடித்த ஒரே விளையாட்டு 'ரம்மி'. "போட்டி, பொறாமை, அடிதடி, கலவரம் என்று இயங்குகிற சமுதாயச் சூழலில் "ஜோக்ஸ்" எழுத வேண்டுமென்றால் ரொம்பவும் கஷ்டம். ஏதோ செய்து கொண்டிருக்கிறேன்" என்று சொல்லும் உ. ராஜாஜியின் துணுக்குகள் இடம் பெறாத பத்திரிகைகள் குறைவு.



திரு இனியவன்
(இலக்கியப்பணி)

தன்னம்பிக்கையும் ஒழுக்கமும் நிறைந்த ஓர் இலக்கியப் பரம்பரையை உருவாக்க வேண்டுமென்ற துடிப்புள்ள இயக்கம் மதுராந்தகம் இலக்கிய வீதி. இதன் அமைப்பாளர் இனியவன் தன்னுடைய பதினைந்தாம் வயதிலேயே குழந்தை எழுத்தாளராக அறிமுகம் ஆனவர்.

நாவல், சிறுகதைப் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெற்றவர் இனியவன். சில ஆண்டுகளுக்கு முன் நண்பர்கள் கூடி ஒரு பத்திரிகை தொடங்க வேண்டும் என்று எண்ணியபோது, அதற்குப் பதில் இலக்கிய வீதி எனும் அமைப்பைத் தீர்மானித்தவர் இவர்.

மூன்று ஆண்டுகளாய் மாதந்தோறும் தவறாமல் நடைபெறும் இலக்கிய வீதிக் கூட்டங்களுக்கு வராத எழுத்தாள நண்பர்களே அநேகமாய் இல்லை. மாதம் ஒரு நாவலை ஓர் எழுத்தாளர் திறனாய்வு செய்வதும், படைப்பாளர் பதில் தருவதும் நடைமுறைகள். மாதம் ஒரு சிறுகதையும் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆண்டு இறுதியில் நூல் வடிவம் பெறுகிறது.

மதுராந்தகத்தில் மட்டும் நடைபெற்றுவந்த இலக்கிய வீதியின் 'உலா' பிறகு மற்ற நகரங்களிலும் நடந்தது. தில்லியிலும் நடந்தது.

இனியவனின் இலக்கியப் பண்ணையில் எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஓவியர்கள் கூட உருவாகியுள்ளனர்.

இனியவன் வேடந்தாங்கல் பறவைகளைப் பற்றி எழுதியுள்ள விளக்க நூல் அற்புதமானது. —சுப்ரபாலன்


● தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்களின் பேட்டி கண்டேன். வார்த்தை ஜாலங்கள் இன்றி மக்களின் பிரச்னைகளை உண்மையாக உணர்ந்து, அவற்றைத் தீர்க்கும் முறையில் முயற்சிகள் எடுத்து வரும் நமது முதல்வருக்குக் கட்சி வேறுபாடு இன்றி பொதுமக்கள் ஆதரவு கிடைக்க இறைவன் அருள்வானாக!

விழுப்புரம் கே. எஸ். குமார்

● நன்மைகளைச் செய்யும்போது கட்சி சார்பற்று அவற்றைப் பாராட்ட 'கல்கி' தவறாது என்பதற்கு இந்த வார (29-6-80) பட்ஜெட் பற்றிய தலையங்கம் ஒரு சான்று.

நயினுங்குளம் சி. சந்துரு

● பட்ஜெட் பற்றிய கார்ட்டூன் மிகவும் அருமை. ரயில்வே, பொது பட்ஜெட்டுகளுக்கு இடையில் உள்ள வேற்றுமையை நன்றாகவே தெளிவாக்கியுள்ளீர்.



இருக்கந்துறை கோ. பிரமநாயகம்

● இந்த வாரம் வெளியான பிரபல வார இதழ்களில் சஞ்சய் காந்தி மறைவு பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. தங்கள் பத்திரிகையில் அதைப் பற்றிய செய்தி இல்லாதது கண்டு நான் மனவேதனை அடைந்தேன். அதைப் பற்றிய செய்தியுடன் வியாழனன்று கிடைக்கக் கூடிய பத்திரிகையை வெள்ளியன்று வாசகர்களுக்குக் கிடைக்கச் செய்திருக்கலாம்.

பரமக்குடி நா. ஆறுமுகம்

● சின்ன அண்ணாமலை, சஞ்சய் காந்தி, வி.வி. கிரி என்று ஒவ்வொருவராக மரண தேவனின் பிடியில் சிக்கி நம்மைத் துயரத்தில் ஆழ்த்திக் கொண்டிருக்கும் போது கண்ணதாசனின் கடைசிப் பக்கம் ''எங்கே சுற்றியும் ரங்கநாதா'' பொருத்தமாக, ஆறுதலாக இருந்தது.

ஈரோடு எஸ். அமிர்தா சௌந்தரராஜன்

● இந்த இதழ் சிறுகதைகள் அனைத்தும் அருமை. குறிப்பாக, உண்மையான காதலின் வெற்றியைக் காதலர்களின் இணைப்பில் மட்டுமல்ல, பிரிவிலும் உணர முடியும் என்ற கருத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டிருக்கும் ஜோதிர்லதா கிரிஜாவின் 'என்னைக் காதலிப்பது உண்மையானால்...' உயர்ந்த கதை.

வேலாயுதம்பாளையம் எம். சம்பத்

● ''பெண் பாவம்'' என்னும் கதையின் கதாநாயகி காப்பர் சல்பேட் சாப்பிட்டுத் தற்கொலை செய்து கொள்கிறாள். காப்பர் சல்பேட்டை 'துத்தநாகம்' என்று குறிப்பிட்டுள்ளார் கதாசிரியர். அது துத்தநாகம் அல்ல; அதன் பெயர் மயில் துத்தம். துத்தநாகம் என்பது வேறு தனிமம்.

கோவை கே. முருகன்

● ''பாமா ருக்மிணி'' படம் பார்த்துத்தான் விமர்சனம் செய்தீரா? படத்தில் அடிக்கடி நாய் வாலைக் காட்டி அதை ஒருவன் நிமிர்த்த முயற்சி செய்வதாகக் கூறியது தவறு. படத்தின் இறுதியில் மட்டுமே அப்படி ஒரு காட்சி இடம் பெறுகிறது.

சென்னை-4 கதாகர்

● அசட்டுப் படத்துக்கு ஓர் அசட்டு விமர்சனம். படத்தில் முதலில் பாமாவை மணந்து கொண்டுதான் பிறகு ருக்குவை மணந்து கொள்கிறான். நீர் என்ன உம் இஷ்டத்துக்குக் கதை அளந்துவிடலாமா?

சைதை எஸ்.கே.வி. மோகன்

● சென்னையில் உள்ள பல ஏ.சி. தியேட்டர்களில் மின்வெட்டு அமலில் இருப்பதால் படம் பார்ப்பவர்கள் படும் அவஸ்தை பற்றிப் படித்தேன்.

திருச்சியில் 'கலை அரங்கம்' ஏ. சி. தியேட்டரில் ஒவ்வொரு சீட்டிலும் விசிறி உள்ளது. போகும்போது அங்கேயே வைத்துவிட்டு வர வேண்டும். விசிறிகள் பிய்ந்து போனால் மாற்று விசிறிகள் வைக்கிறார்கள்.

ஸ்ரீரங்கம் உஷா முத்துகிருஷ்ணன்

● செம்பியன் அங்கலாய்க்கிறார் ஒரு கட்சியைச் சேர்ந்த 30 சட்ட சபை உறுப்பினர்கள் தங்களுக்குள் ஒரு தலைவரைத் தேர்வு செய்யக் கூட இயலாத அளவிலா உட்கட்சி ஜனநாயகம் இல்லாமல் போய்விட்டதென்று. நம் நாட்டையும் அமெரிக்கா — பிரிட்டனையும் ஒப்பிடுவதே தவறு. மக்களுக்காக, மக்கள் தலையில் மக்கள் கையாலேயே மிளகாய் அரைப்பது நம் நாட்டு ஜனநாயக பாணி

மதுரை—2 ந. ஸ்ரீதர்

● 'கிளியரிங் ஹவுஸ்' பற்றிய சிறு கட்டுரைக்கு நன்றி! நமது மக்களின் சிந்தனை எப்படி இருக்கிறது பாருங்கள்! ''பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும்''



சிறைச்சாலைகளுக்கான சட்ட திட்டங்களும் அங்கு வந்து தங்கும் பல் வேறு கைதிகளுக்கான சலுகைகள் உரிமைகள் முதலியனவும் அடங்கிய ஜெயில் மானியுவல் என்ற சட்ட புஸ்தகம் நூறு வருடங்களுக்கு முன்தயார் செய்யப்பட்டது. 469 பக்கங்களில் அச்சிடப்பட்ட புத்தகம் தான். சர்க்கார் விலையில் அது ஏறத்தாழ இருபது ரூபாய் வரை போகலாம்.

ஆனால் இன்று அரசாங்கம் அந்த புஸ்தகத்திற்கு நிர்ணயித்திருக்கும் விலை 260 ரூபாய் முப்பது காசுகள்.

கைதிகள் எளிதில் இந்த புஸ்தகத்தை வாங்கிப் படித்து தங்களுக்குண்டான உரிமைகளைப் பற்றித் தெரிந்து கொள்ளக்கூடாது என்பதற்காகவே இப்படி ஒரு விலையை வைத்திருக்கிறார்களா என்பது யோசிக்கப்படவேண்டிய விஷயம் என்று சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஒருவரே குறிப்பிட்டிருக்கிறார்.

- மேனு

என்று சுற்றறிக்கை அனுப்பினால் அவமானமாக இருக்கிறதாம்!

இந்நிலையில் எத்தனை எச். எம். பட்டேல்களும், வெங்கட்ராமன்களும் வந்தாலும் பயனிருக்காது! நமது மக்களின் சிந்தனைப் போக்கே மாறவேண்டும்.

திருச்சி அலெக்ஸ் ஃபெபினியா

● 'பாங்குகளில் என்ன நடக்கிறது?' தொடர்பான கடிதங்கள் பார்த்தேன்.

'தொழிற் சங்கங்கள் இருக்கக் கூடாதா', 'வேலையில் முழுப் பாதுகாப்பு இருப்பதில் என்ன தவறு?', 'பாங்குகளில் வேலை செய்யும் Cream of the educated களையா தாக்குகிறீர்கள்?' என்பன மேலோட்டமான கேள்விகள்;

நாடு விடுதலை பெற்று 30 ஆண்டுகளாகியும் 30 சத விகித மக்களே தொழிற் சங்க பலத்துடன் பல நன்மைகளைப் பெற்று வாழ்கிறார்கள். மீதி 70 சதவிகித மக்கள் அடுத்த வேளைக் கஞ்சி எங்கிருந்து வரும் என்று ஏங்கும் அன்றாடங்காய்ச்சிகள்.

எவ்வளவு நாட்கள் ஒரு சிறுபான்மை வர்க்கம் பெரும்பான்மை மக்களைப் பணயம் வைக்க முடியும்? ஓர் அரசாங்கம் 30 சதவிகித மக்களை மதித்து 70 சதவிகித மக்களைப் புறக்கணிக்க முடியுமா?

பலம் பெற்று வளர்ந்த பஸ்மாசுரன் என்ற தொழிற் சங்கம் தன்னைப் படைத்த அரசாங்கம் என்ற பெருமானின் தலையிலேயே கைவைக்க முற்பட்டால், சட்டம் என்ற விஷ்ணு மோகினியாட்டம் ஆடி பஸ்மாசுரன் தன் தலையிலேயே கை வைக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

புதுதில்லி ஆர். கிருஷ்ணன்


● ஒரு கருத்தரங்கம். அதில் ஒரு தலைப்பு: ''திரௌபதியின் கற்பு எப்படி?'' ''ஐவர் பூவை திரௌபதிக்கு கற்பு வேறேயா?''— எதிர்க் கட்சி அணியினர் அலறினார்கள். ஒவ்வொரு கட்டத்திலும் பேச்சாளர் கைதட்டலும் பெற்றார். என் மனம் அடைந்த வேதனை கொஞ்ச நஞ்சமல்ல.

தயவுசெய்து பட்டிமன்றம் — கருத்தரங்க— நாயகர்கள் சீதை, கண்ணகி, மாதவி, திரௌபதி ஆகிய இதிகாச நாயகிகளுக்கு மாசுகற்பிக்காமல் விட்டு வைக்கட்டும்.

சென்னை-61 க. பஞ்சாபகேசன்

● மேல் மட்டத்தில் பணி புரியும் அரசாங்க அலுவலர்களுக்குப் படிப்பும், திறனும் இருந்தும், அனுபவ அறிவு இல்லாததினால் சர்க்கார் தீட்டும் திட்டங்கள் பல சமுதாயத்துக்குப் பயன்படாமல் போய்விடுகின்றன. இவர்கள் கீழ் மட்டத்தில் இருக்கும் அலுவலர்களின் யோசனைகளையும் மதிப்பதில்லை. திரு எம். ஜி. ஆர். ஏழை எளியவர்களுக்கு இலவசமாக வேட்டியும் புடவையும் கொடுக்க உத்தரவிட்டார். ஆனால் சிலபேர் அவற்றினை உடனே குறைந்த விலைக்கு அந்த ஏழைகளிடமிருந்து வாங்கிப் போய்விடுகின்றனர். இதனால் எந்த நோக்குடன் இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டதோ, அது நிறைவேறுவதில்லை. அதிகாரிகள் இவ் வேட்டியையும் புடவையையும் அதைப் பெறுபவர்கள் பிரித்து உதறி உடுத்திக் கொண்டுதான் செல்ல வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்திருந்தால் அது எளியோருக்கு உண்மையிலேயே பயன்பட்டிருக்கும்.

வேலூர்-6 என். ஏ. ஞானசிராமம்




இரக்கமற்ற இரவுகள்

ஹேமா ஆனந்ததீர்த்தன்

14

புறாக் கூட்டத்தில் ஒரு கல்லெறிந்தால் அடுத்த விநாடி அங்கே ஒரு புறாகூட இல்லாமல் திசைக்கொன்றாகப் பறந்தோடி விடுவது போல, கன்னையன், கிட்டன், பாலு, லோகு இவர்கள் நான்கு பேரும் பிரிந்து போக வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. புறாக் கூட்டத்தைப் போல் என்று உதாரணத்துக்குச் சொன்னாலும் அப்படி எல்லோரும் ஒரே சமயத்தில் பிரிந்து போகவில்லை. முதலில் கூட்டத்தை விட்டுப் பிரிந்து போனவன் லோகு. அவனாகப் பிரிந்து போகவில்லை. பிரிந்து போக வேண்டிய நிலையை போலீஸ் உண்டாக்கி விட்டது.

தி. மு. க. தொண்டர் ஒருவர் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அந்தக் கட்சிக்கும் அ.தி.மு.க. கட்சிக்கும் இடையே பகை மூண்டு இரு கட்சிகளின் தொண்டர்களும் அடிக்கடி மோதிக் கொள்ளலாயினர். கலகங்கள் திடீர், திடீரென்று மூளத் து. சோடா பாட்டில்கள், சைக்கிள் செயின்கள், கற்கள், கத்திகள் தாராளமாக உபயோகப் படுத்தும்



அளவுக்குப் பயங்கர நிலைமை எழும்பூரிலும் சுற்றுப்புறப் பகுதிகளிலும் நிலவியது. தி.மு.க. தொண்டரின் கொலைக்குப் பழி வாங்குவது போல் ஒரு அ.தி.மு.க. தொண்டர் கொலை செய்யப் பட்டார். அது சம்பந்தமாகக் கைது செய்யப்பட்ட பலரில் லோகுவும் ஒருவன். வழக்குப் பதிவு செய்யப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருந்தது.

லோகு கைதான நான்காவது நாள் திடீரென்று இரவு பதினொரு மணிக்குக் கன்னையன் வீட்டில் போலீஸ் நுழைந்து கிட்டனையும் கைது செய்து அழைத்துச் சென்றது. மோகனு சாவு சம்பந்தமாக விசாரித்துக் கொண்டே இருந்த ஈரோடு கோவை போலீஸார் எப்படியோ கிட்டனைப் பற்றிய விவரங்களை அறிந்து கொண்டு சென்னைப் போலீஸின் உதவியுடன் வந்திருந்தார்கள். கிட்டன் தப்ப முடியவில்லை.

மீதமிருந்தது கன்னையனும் பாலுவும்தான். அவர்கள் பிரிய வேண்டிய சந்தர்ப்பமும் கிட்டன் கைதாகிப் போன சில நாட்களுக்கெல்லாம் நேரிட்டது. கிட்டன் கைதானது எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருந்தது. சில பத்திரிகைகள் வேண்டுமென்றே விஷமத்தனமாக, ''எம். எல். ஏ. ரங்கைய நாயுடுவின் சென்னை வீட்டில்தான் கிட்டன் கைது செய்யப்பட்டான். ரங்கைய நாயுடுவின் மகன் கன்னையனும், கிட்டனும் நெருங்கிய நண்பர்கள் என்றும் தெரிய வருகிறது. சமீபத்தில் அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த அறிவுக்கடல் என்னும் தொண்டர் கொலைசெய்யப்பட்டதும் அது சம்பந்தமாகக் கைதுசெய்யப்பட்ட பலரில் கன்னையனின் நெருங்கிய நண்பன் லோகுவும் ஒருவன்'' என்று செய்தி வெளியிட்டிருந்தது.

இந்தச் செய்தியைப் படித்தது முதலே ரங்கைய நாயுடு குதித்துக் கொண்டிருந்தார். உடனே சென்னைக்குப் பறப்பட்டுச்



சட்ட மன்றத்தில் புது முகங்கள்

பி. மொக்கையன்
அகில இந்திய பார்வர்டு பிளாக்
ராஜபாளையம் முகவை மாவட்டம்

விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த இவர் இருபத்தைந்து ஆண்டு அனுபவமிக்க நாடக நடிகரும் கூட.

நாற்பது ஆண்டுகளுக்கு முன் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் சொற்பொழிவு களால் ஈர்க்கப்பட்டு அவரது தொண்ட ரானார்.

''என் தொகுதியில் வகுப்புக் கலவரங் களைத் தவிர்க்கவும் நெசவாளர் பிரச்னைகளைத் தீர்க்கவும் பாடுபடுவேன்'' என்று கூறும் இவ ருக்கு ரொம்பப் பிடித்த காரியம் தேவர், போஸ் மீது பாடல்கள் இயற்றுவதும் அவற் றைப் பாடுவதும்தான்.

என். குலசேகர பாண்டியன்
அ.இ.அ.தி.மு.க. வாணியம்பாடி (வ.ஆ.மா)

ஆம்பூரில் அச்சக உரிமையாளரான இவ ரது குடும்பத் தொழில் விவசாயம். மூன்று தலைமுறையாகப் பெரியார், அண்ணாபோன்ற தலைவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட குடும்பம். இல்லத் திருமணங்கள் அனைத்தும் பெரியாருடைய தலைமையில் நடைபெற்ற சீர்திருத்தத் திருமணங்களே.

''பெரியார், அண்ணாவின் வாரிசாக விளங்கும் புரட்சித் தலைவரை என் வழிகாட்டியாக மதிக்கிறேன்'' என்கிறார்.

''தோல் பதனிடும் தொழிலால் இந்தியா 400 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி ஈட்டுகிறது. அதில் குறிப்பாக என் தொகுதி (வாணியம்பாடி, ஆம்பூர்) சுமார் 200 கோடி ரூபாய் வருமானத்தைத் தருகிறது. இத்தகைய பெருமைக்குரிய தொழில் மேலும் வளம் பெற உழைக்கும்போதே விவசாயம் பாதிக்கப்படாமலும் பாதுகாக்க வேண்டியுள் ளது. ஆம்பூர் அருகே பாலாற்றில் மேம் பாலம் அமைக்க அரசிடம் கேட்கப் போகி றேன்'' என்று கூறும் இவர் ஆம்பூர் ரோட் டரி சங்கத்தின் தலைவர்.

ஆர். ரங்கசாமி
(அ.தி.மு.க.)
சத்தியமங்கலம் தொகுதி, பெரியார் மா.வ.

எட்டாம் வகுப்பு வரை படித்த இவர் விவசாயி. ''என் தொகுதியில் ஒரு பகுதி பசுமையாகவும் மற்றது வறட்சியாகவும் உள்ளது. வறட்சியைப் போக்க குய்யனூர், பெரியகுளத்தின் குட்டை, புளியங் கொம் பைத் திட்டம் ஆகிய திட்டங்கள் நிறைவேற் றப்பட வேண்டும். தொழில் வளம் இல்லாத பகுதி. இங்கு மிக அதிகமான அளவில் சந்தன மரங்கள் விளைவதால், ஒரு சந்தனத் தொழிற்சாலை நிறுவப்பட வேண்டும்'' என்று சொல்லும் ரங்கசாமியின் பொழுதுபோக்கு புத்தகங்கள் படிப்பதுதான்.

கே. எம். எஸ். சுப்பிரமணியன்
(அ.தி.மு.க.)
போடிநாயக்கனூர், மதுரை மாவட்டம்

ஏலக்காய் விவசாயியான இவர், பள்ளி இறுதி வகுப்பு வரை படித்தவர். பள்ளியில்

சென்று கன்னையனோடு இன்னும் யாராவது விரும்பத் தகாத நண்பர்கள் இருக்கிறார்களா என்று பார்த்து, அப்படி இருந்தால் அவர்களை யெல்லாம் விரட்டிவிட்டு, கன்னையனுக்கும் கண்டிப்பாக எச்சரிக்கை செய்துவிட்டு வர வேண்டும் என்றும் நினைத்துக் கொண்டிருந் தார். ஆனால் உடனே புறப்பட முடியாமல் சந்தர்ப்பம் தடுத்தது. ஆகவே இரண்டு நாட்கள் கழித்துப் புறப்பட்டார். காரி லேயே புறப்பட்டு வந்த அவர் சென்னையை வந்தடைந்து எழும்பூரில் தம் ஜாகைக்குச் சென்று கதவைத் தட்டியபோது இரவு மணி ஒன்று.

வேலைக்காரன்தான் கதவைத் திறந்தான். நாயுடு உள்ளே நுழைந்தார்.

விளக்கு வெளிச்சம் கண்ணைக் கூசிய தாலும், கதவு திறக்கும் சத்தத்தாலும் ஹாலில் படுத்திருந்த பாலு கண்ணைக் கசக்கிக் கொண்டு எழுந்திருந்தான்.

''யார்ராது?'' என்று கேட்டான்.

''நீ யார்ரா?'' என்று நாயுடு சீறினார். பாலுவை அவருக்குத் தெரியாது என்ப தில்லை. நன்றாகத் தெரியும். இருந்தாலும் தன்னை இன்னாரென்று தெரிந்து கொள்ளா மல் மரியாதை இல்லாமல் அவன் கேட்ட தனால் எழுந்த கோபத்தால்தான் அப்படி வெகுண்டார்.

''டேய் கெளவா, என்ன வாய் நீளுது? யார்ரான்னு கேட்டா மரியாதையாப் பதில் சொல்லுவியா...'' என்று கேட்டபடி கையை ஓங்கிக்கொண்டு அவரை அடிக்க வருவது போல் முன்னால் வந்தான்.

நாயுடுவுக்குத் தலையிலிருந்து கால்வரை பற்றிக்கொண்டு வந்தது. தன் வீட்டில் வந்து நாய் போல எச்சிற்கலையைத் தின்கிற இந்தப் படுவாப் பயல் குடி வெறியில் தன்னை அவ மரியாதையாகப் பேசியதோடல்லாமல் அடிக் கவும் வருவதைக் கண்டதும் அவர் தம் நிதானத்தை இழந்தார்.

''ராஸ்கல், என்னையா அடிக்க வர்றே நீ?'' என்று கூறி அவன் மேல் பாய்ந்து பளீர், பளீர் என்று இரண்டு கன்னங்களிலும் அறைந் தார். தலைமயிரைப் பிடித்து உலுக்கி, குனிய வைத்து முதுகில் தம், தம் மென்று குத்தினார். பிறகு, ''போடா வெளியே நாயே!'' என்று கூறி இடுப்பில் ஓங்கி ஒரு

படித்துக் கொண்டிருந்த போது அண்ணாவின் புத்தகங்களைப் படித்தும், பெரியாரின் பேச்சைக் கேட்டும் தி.மு.க.வில் உறுப்பினராகச் சேர்ந்தார். எம். ஜி. ஆர். தி. மு. க.வை விட்டு வெளியேறிய போது இவரும் வெளியேறி அன்றே தாமரைக் கொடியை நகரில் ஏற்றி வைத்தார். இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும் கலந்து கொண்டவர். ''தேனி நகரத்துக்கும், பூதிப்புரம், கிராமத்துக்கும் இடையில் எண்ணட்டகுடி ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட வேண்டும்'' என்று கூறும் இவர் வாலிபால் விளையாட்டில் வல்லவர்.



பி. மொக்கையன்

கே. எம். எஸ். சுப்பிரமணியன்

என். குலசேகர பாண்டியன்

இ. முத்துராமலிங்கம்

ஆர். ரங்கசாமி

இ. முத்துராமலிங்கம்

(காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ்)
ராதாபுரம் தொகுதி, நெல்லை மாவட்டம்

இருபத்தொன்பது வயதாகும் இவர் சென்னை லயோலா கல்லூரியில் பயின்ற போது குமரி அனந்தன் பேச்சால் கவரப்பட்டு அரசியலில் நுழைந்தார். ஸ்தாபன காங்கிரஸில் சேர்ந்து பணியாற்றி வரும் போது திசையன்விளை பேரூராட்சி மன்றத் தலைவர் இடைத்தேர்தலில் காமராஜரின் கட்டளைப்படி வேட்பாளராக நிறுத்தப்பெற்று வெற்றியும் பெற்றார்.

''என் தொகுதியில் கிடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டு ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தி வேலை வாய்ப்பு உருவாக்குவதே என் முக்கிய குறிக்கோள்'' என்கிறார்.

பொழுதுபோக்கு தமது தொகுதி மக்களுக்குக் கல்வி போதிப்பதுதான்.

பேட்டி: சிக்கி

'' மீண்டும் சொல்கிறேன் :

''ஜனநாயகத்தில் எந்தவிதமான அதிகாரம் யாரிடம் இருப்பினும் சரி, அதற்குத் தர்மகர்த்தாவாக அவர் தம்மை நினைக்க வேண்டும். அதிகாரத்தைப் பிரயோகிக்கும்போது அதற்கு அவர் பொறுப்பேற்க வேண்டும். மக்களிடமிருந்தே எல்லா அதிகாரங்களையும் பெறுகிறோம் என்பதை உணர்ந்து மக்களுக்காகவே அந்த அதிகாரங்களைப் பிரயோகிக்க வேண்டும்.''

— டிஸ்ரேலி

உதை உதைத்தார். பாலு சுருண்டு போய்ச் சுவரோரமாக விழுந்தான்.

இவ்வளவு உதைகள் விழுந்தவுடன் அவன் போதை தெளிந்து, வந்திருப்பவர் கன்னையனின் தகப்பனார் என்று தெரிந்ததும் அவனுக்கு அவமானத்தை விட பயம் அதிகமாகி விட்டது. பயம் தன்னைக் குறித்தல்ல. கன்னையனைக் குறித்து. கன்னையனின் அறைக் கதவைத் திறந்து உள்ளே இருக்கும் நிலைமையைப் பார்த்துவிட்டால் அவர் கன்னையனை என்ன செய்து விடுவாரோ என்ற அச்சம் தான் அது.

இவ்வளவு கலாட்டாவுக்கும் கன்னையன் அறைக் கதவு திறக்கப்படவில்லை. கன்னையன் வெளியே வரவில்லை. கன்னையனுக்கு விழிப்பு ஏற்பட்டிருக்காது என்று சொல்ல முடியாது. கண்டிப்பாக விழித்துக் கொண்டிருப்பான். இல்லாவிட்டால் அவன் இதுவரையில் தாங்கிக்கூட இருக்க மாட்டான். பின் ஏன் அறைக் கதவைத் திறக்கவில்லை? வேலைக் காரனுக்கும் பாலுவுக்கும் காரணம் தெரியும். ஆனால் நாயுடுவுக்கு அது எப்படித் தெரிய முடியும்?

கன்னையனை எழுப்பி அவன் கையாலேயே பாலுவை வெளியே தள்ளிக் கதவைச் சாத்தச் செய்ய வேண்டும் என்று ஆத்திரமடைந்த நாயுடு, ''டேய், கன்னியப்பா'' என்று கூப்பிட்டபடியே அவன் அறைக் கதவைப் போய்த் தட்டினார்.

''சார், வேண்டாம், சார்'' என்றான் பாலு.

''ஏண்டா?''

''அவனுக்கு உடம்பு சரியில்லே. இப்ப டிஸ்டர்ப் பண்ண வேண்டாம். காலையிலே பேசிக்கலாமே. நான் தெரியாமப் பெரிய தப்புப் பண்ணிட்டேன் சார். தூக்கக் கலக்கம். அதுவுமல்லாமல் ஏதோ கெட்ட கனவு வேற. அதனால்தான்....'' என்று சரமாரியாகப் புளுகத் தொடங்கினான்.

''என்னடா கேடு அவனுக்கு? உடம்புக்கென்ன?''

''இவ்வளவு நேரம் வயித்து வலியாலெ துடிச்சக்கிட்டிருந்தான். இப்பத்தான் கண்ணை மூடியிருக்கான்'' என்று தோன்றியதைச் சொல்லி வைத்தான்.



"டைபை டாலி!"

ஒரு பெண் ஆல்ரௌண்டரைப் பார்க்க வேண்டுமானால் டாலியைத்தான் சொல்ல வேண்டும். காலையில் ஆசனப் பயிற்சி, பின்பு வீணை, தொடர்ந்து படிப்பு, அதைப் பாதிக்காமல் நடிப்பு, மாலையில் அக்கா கல்யாணியின் நடனப் பள்ளியில் சம்பளம் வாங்காத ஆசிரியை. இவ்வளவுக்கும் ஈடுகொடுக்கும் டாலிக்கு வயதோ பதினாறுதான்!

பேபி நடிகையாகத் தமிழ் தெலுங்கு ஹிந்தி படங்களில் நடித்துள்ளார். (சுமார் அறுபது!)

இப்போது டைரக்டர் விஸ்வநாத் (சங்கராபரணம்) பல பெரிய நடிகைகளை யெல்லாம் விட்டு விட்டு இவர்மேல் நம்பிக்கை கொண்டு தாம் டைரக்ட் செய்யும் "சுபோதயம்" தெலுங்குப் படத்தில் இவரைக் கதாநாயகியாக அறிமுகப்படுத்துகிறார்.

"எனக்குப் புதுமையாக சுலக்ஷ்ணா என்று புதிய பெயர் சூட்டியுள்ளார். இனி 'டாலி' என்ற பெயருக்கு டைபைதான்!" என்று பெருமிதத்துடன் சொல்லும் இவருக்கு மாடர்ன் உடைகளை விடத் தழையத் தழையப் புடவை கட்டிக் கொள்ளத்தான் பிடிக்குமாம். "நல்ல கொட்டும் மழையில் வீட்டில் உள்ள அம்பாஸிடர் காரைத் தனியாகவும் வேகமாகவும் ஓட்ட வேண்டும் என்பது என்னுடைய நிறைவேறாத ஆசைகளில் ஒன்று" என்கிறார்.

பேட்டி: "சித்கி"

மேலட்டை வண்ணப் படம் எடுத்தவர்: **சரஸ்வதி சத்தியமூர்த்தி**

"இது நிஜமாடா?" என்று வேலைக்காரனைக் கேட்டார்.

"ஆமாங்க... இல்லீங்க.... தெரியாதுங்க" என்று உளறினான் அவன்.

"என்னடா எல்லாருமா சேர்ந்துகிட்டு கொட்டமடிக்கிறீங்க? இதென்ன வீடா, சத்திரமா, மடமா?" என்று இரைந்துவிட்டு, "டேய், கன்னியப்பா, கதவைத் திறக்கறியா, உடைக்கட்டா?" என்று கூறிக் கதவைப் படபடவென்று தட்டினார்.

சில விநாடிகளுக்குப் பின் கதவு திறக்கப் பட்டது. வெளியே வந்த கன்னியப்பன், "வாங்கப்பா" என்று தகப்பனாரை வரவேற்றான். ஆனால் அறையின் வாசற்படியை விட்டு அதிக தொலைவு முன்னால் வராமல் தகப்பனாரின் பார்வை அறைக்குள் விழாத படி நின்று கொண்டான்.

"என்னடா என்னமோ வழியை மறைச்சுக்கிட்டு நின்னுகிட்டு.... தள்ளுடா" என்று அவனைத் தள்ளிக் கொண்டு அறைக்குள் நுழைந்தார்.

அங்கே அவர் கண்ட காட்சி!

அரை குறை ஆடையுடன் அலங்கோலமாக ஓர் இளம் பெண் நின்று கொண்டிருந்தாள்!

ஆவேசம் வந்தவர் போல நாயுடு அவளைப் பிடித்துத் தரதரவென்று இழுத்து வந்து, வாசற் கதவருகே அடைந்ததும், "போ வெளியே" என்று முதுகில் கை வைத்துத் தள்ளினார். அவள் தெருவில் போய்க் குப்புற விழுந்தாள்.

திரும்பியவர் கன்னியப்பனின்மீது பாய்ந்து கண்மண் தெரியாதபடி அவனை அறைந்தார். முகத்திலும், முதுகிலும், தோள்களிலும் கைக்கு எட்டிய இடங்களிலெல்லாம் அறைந்தார்.

"நீ படிச்சு உருப்பட்டது போதும். நாளைக்கே என்னோட கார்லேயே ஊருக்குத் திரும்பு. அங்கே வந்து நீ படிச்சாலும் படி இல்லே, எக்கேடுன்னாலும் கெட்டுப் போ. இனி ஒருநாள் கூட இங்கே இருக்கக் கூடாது" என்று அடித் தொண்டையிலிருந்து கத்தினார்.

பிறகு பாலுவின் பக்கம் திரும்பினார். "நீ ஏண்டா இன்னும் இங்கே நிக்கறே? போய்த் தொலையறதுதானே? இல்லாட்டா உன் முதுகுத் தோலை உரிச்சுடுவேன்" என்று இடுப்பில் அணிந்திருந்த 'பெல்ட்'டைக் கழற்றத் தொடங்கினார்.

தப்பித்தால் போதும் என்று பாலு வெளியில் ஓடினான். அவனுக்குப் பின்னால் கதவு படீரென்று அறைந்து சாத்தப்பட்டது. சில விநாடிகள் தயங்கிவிட்டு, எழும்பூர் ஸ்டேஷனை நோக்கி நடை போட்டான்.

● ● ●

ராகவன் இறந்து ஒரு வருடம் ஓடி மறைந்து விட்டது. உமாவின் கல்யாணம் இந்த ஒரு வருடத்தில் நடக்காததால் அவருடைய ஆத்மாவுக்கு கன்யாதானப் பலன் கிடைக்கவில்லை என்று ஜானகி வருத்தப் பட்டு அடிக்கடி புலம்பிக் கொண்டே இருந்தாள்.

"இதெல்லாம் என்னம்மா மூட நம்பிக்கை? அப்படி உங்களுக்கெல்லாம் இதில் நம்பிக்கை இருந்தால் உஷாவுக்கு வேணுமானால் கல்யாணம் செய்திருக்கலாமே ஒரு வருஷத்துக்குள்? ஏன் அதைச் செய்யாம விட்டுட்டீங்க?" என்று உமா பதில் கூறினாள்.

"அப்படியும் செய்யலாம்னுதான் பார்த்தோம். அதுக்கு அவ இணங்கி வந்தாத்தானே? உன் தங்கை, அவ எப்படி இருப்பா? நீங்க எல்லாருமே பெரிய தியாக மூர்த்திகள்னுதான் உங்க மூணு பேருக்கும் நினைப்பு? நீ கல்யாணம் பண்ணிண்டாத்தான் அவ பண்ணிப்பேங்கறா. உங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் ஆகாம உங்கண்ணா பண்ணிக்க மாட்டேங்கறான். இப்படி மூணு பேரும் மூணு மூலையிலே முக்கோணம் போல உக்கார்ந்துண்டு உங்க பிடிவாதம் தான் உங்களுக்குப் பெரிசுங்கறாப்பலே நடந்துக்கறேளே ஒழிய மத்தவாளைப் பத்தி எங்கே நினைக்கிறேள்?" என்று ஜானகி கண்ணீர் உகுத்தாள். (தொடரும்)



பாலகனுக்கு வயது ஐம்பது!


தஞ்சாவூர் உபேந்திரன் கூறுகிறார் : சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு சீர்காழியில் ராதா கல்யாண உற்சவத்தில் பாட ஓர் இளைஞரை வரவழைப்பது என்று முடிவு செய்தார்கள். அந்த இளைஞர் பிள்ளைப் பிராயத்திலேயே திருவையாறு தியாகப் பிரம்ம உற்சவத்தில் கேட்பவர்கள் பிரமிக்கும் வண்ணம் பாடியிருந்தார். கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை, மதுரை ஸ்ரீரங்கம் ஐயங்கார் போன்றவர்கள் வந்து அமர்ந்திருந்தார்கள். வெகு இதமாகப் பொங்கி வழிந்த அந்த இன்னிசையை மெய் மறந்து பருகினார்கள். ஐயங்கார் பரவசமடைந்தார். ''பையன் நடைமுறையிலிருந்து நழுவிப்போன பல ராகங்களைத் திறமையுடன் கல் கருதியாக, நளினமாகப் பாடி நம்மை மகிழ்வித்தான். எந்தக் கட்டத்திலும் சாஸ்திரப் பிசகு நேர அனுமதிக்கவில்லை'' என்று மனம் விட்டுப் பாராட்டினார். தில்லானாவை இரண்டு தடவை பாடச் சொல்லிக் கேட்டார் ராஜமாணிக்கம் பிள்ளை. அந்த இளைஞர் நமக்கு இன்று நன்கு பரிச்சயமான இசை மேதை டாக்டர் பாலமுரளி கிருஷ்ணாதான். இன்று வயது ஐம்பதானாலும் இசை ஆர்வத்திலும் உற்சாகத்திலும் என்றுமே இளைஞர்தான் அவர். பக்குவமான அவர் குரலில் என்றும் இனிமையும் இளமையும் இழையும். இன்று அந்த அளவுக்குப் பிரகாசிக்கிறார் என்றால் அதற்குக் காரணம் அவருடைய குருநாதர் ராமகிருஷ்ண பந்துலு. பாலமுரளியின் அமெரிக்கச் சுற்றுப் பிரயாணத்தின்போது பொது ரசிகர்களுக்கு ஆங்காங்கு கச்சேரி செய்ததோடல்லாமல், இசையைப் பாடமாகப் போதிக்கும் சர்வ கலாசாலைகளுக்கும் போய் அங்கே இசை பயிலும் மாணவர்களுக்குப் பாடிக் காண்பிக்கவும் வகை செய்திருந்தார்கள். 'அர்பானா' சர்வ கலாசாலையில் மாணவர்கள் கேட்டுக்கொண்டது: ''அபூர்வ தாளம் ஏதாவது ஒன்றில் ராகம் தானம் பல்லவி பாடுங்கள்'' என்பதுதான். பாலமுரளி அவர்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்தார். அந்த மாணவர்கள் இம்மி பிசகாமல் தாளம் போட்டு அந்தப் பல்லவியை ரசித்தார்கள். அந்த நிகழ்ச்சி லயஞான மேதை பாலமுரளிக்குப் பரவச மூட்டியது. வெஸ்லியன் சர்வ கலாசாலைக்குப் போனபோது ஓர் அமெரிக்க ஆசிரியை மாணவ மாணவியருக்கு சங்கராபரண ராகத்தைப் போதித்துக் கொண்டிருந்தார்.

''உலக இசைகள் அனைத்துமே நம்முடைய எழுபத்தி இரண்டு மேள கர்த்தா ராகங்களில் அடக்கம். ஆங்கில இசை அத்தனை பகுதிகளுமே நம்முடைய சங்கராபரணத்தில் அடக்கம். அரேபிய நாட்டு இசைக்கு அஸ்திவாரம் நம்முடைய வருணாபரணம். சீன நாட்டு இசை நம்முடைய மோகன ராகத்தின் விளைவுதான்'' என்று அனுபவ ஆராய்ச்சிபூர்வமாகச் சொல்பவர் பாலமுரளி. இதைப் பாடிக் காண்பித்தே அமெரிக்க சர்வ கலாசாலைகளில் நிரூபித்தார். பழகுவதற்கு வெகு இனியவர். இதமானவர். வாய்ப்பாட்டைப் போலவே வயலின் மிருதங்கம் ஆகியவற்றிலும் முழுத் தேர்ச்சி பெற்றவர்.

இவரே பாடி, வயலின் மிருதங்கம் வாசித்திருக்கும் ஓர் இசைத்தட்டு சமீபத்தில் வெளியாகியிருக்கிறது. மூன்று ஐட்டங்களையும் தனித் தனியாக ஒலிப்பதிவுசெய்து பிறகு திறமையாக இணைத்திருக்கிறார் ஒலிப் பதிவாளர்.

பாலமுரளி கிருஷ்ணா என்றாலே சுகமான சங்கீதத்தின் மறுபெயர். பல அபூர்வ ராகங்களை ரசிகர்களுக்கு அறிமுகப்படுத்தி அவைகளில் கீர்த்தனைகளையும் இயற்றித் தம் திறமையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

பெயராலும் தோற்றத்தாலும் என்றும் பாலகனாகவும் குரலினிமையில் என்றும் முரளியாகவும் விளங்கும் பாலமுரளி, ஞானத்தாலும் ஆற்றலாலும் ஐம்பது என்ன, அதற்கும் அதிகமாகவே முதிர்ச்சி அடைந்தவர்! பேட்டி : **பட்டினத்தார்**



வரக்கூடாதவள் வந்திருக்கிறாள்.

ரா. வேங்கடசாமி

மாடியில் அமர்ந்து எழுதிக் கொண்டிருந்தேன்.

கீழே டெலிபோன் ஒலிக்கும் சப்தம் கேட்டது. தேவகி பதில் சொல்லிக்கொள்வாள் என்று நான் போனைத் தொடாதபோது, 'பஸ்ஸர்' ஒலித்தது.

மேலே தொடர்பு கேட்கிறாள். நான் பேசியே ஆகவேண்டும்.

''யாரோ... சேதுராமனாம்.... உங்கள் பழைய நண்பராம்... பேசுகிறார்'' என்றாள் தேவகி.

நீண்ட நாட்களுக்குப் பிறகு கேட்டாலும் அவன் பெயர் வெறுப்படையச் செய்தது. போனைத் தொடவே எனக்குப் பிரியமில்லை. வைத்துவிடலாம் என்று நினைத்தேன். இருந்தாலும் என்ன பேசப் போகிறான் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பினேன்.

''நான் சேதுராமன்.'' அவனேதான், சந்தேகமில்லை.

''என்ன வேண்டும்?'' என்றேன் எரிச்சலாக.

''இத்தனை வருடங்களுக்குப் பின்னும் என் மீது இருக்கும் கோபம் தீரவில்லையா?''

''நீ செய்த காரியத்துக்கு உன் முகத்திலே விழிக்கவே கூடாது.... உம்... உன்னிடம் எனக்கென்ன பேச்சு?''

''போனை வைத்துவிடாதே ஸ்வாமி. உன்னிடம் இப்போது நான் பரிமளாவைப் பற்றிப் பேசவேண்டும்'' என்றான்.

அவள் பெயரைக் கேட்டவுடன் நான் சற்றுத் தயங்கினேன்.

''என் மீது மட்டும் கோபப்படுகிறாயே நாராயணஸ்வாமி? அவள் மீதல்லவா நீ கோபப்பட வேண்டும்?''

''அவளை நான் மறந்தே போய் விட்டேன். சொல்ல வேண்டியதைச் சொல்.''

''நான் மீண்டும் இந்த ஊருக்கு ஏன் வந்தேன் தெரியுமா?''

''அதை நான் தெரிந்து கொண்டு இப்போது என்ன ஆகவேண்டும்... வெட்டிப் பேச்சுப் பேச எனக்கு நேரமில்லை.''

''நான் உன்னை உபத்திரவப்படுத்தப்போவதில்லை. ஒரு வார்த்தை மட்டும் தெரிந்து கொள். இப்போது பரிமளா என்னுடன் இல்லை...''

இதைக் கேட்டவுடன் சில விநாடிகள் நான் பேச்சற்றுப் போனேன். பரிமளா என்னும் பெயர் கொண்டவள் என் முதல் மனைவி—நடிகை!

சேதுராமன் ஒரு காலத்தில் — என் உயிர் நண்பன் — அவனுடன் என் மனைவி ஓடிப் போய்விட்டாள். சில வருஷங்கள் ஆயின... அதை நான் ஒரு கெட்ட கனவாகவே நினைத்து மறந்தே போய்விட்டேன். இரண்டாவது திருமணமும் ஆகிவிட்டது.

அவள் அந்த முதல் மனைவி இப்போது இவனுடன் இல்லையென்றால் எங்கே போயிருப்பாள்?

''அவள் உன்னுடன் ஓடிவந்தபோது நான் எந்த நிலையில் இருந்தேன் என்பதை இப்போது நீ புரிந்து கொண்டிருப்பாய் என்று நினைக்கிறேன்!''

அவன் பக்கம் இருந்து பதில் இல்லை. சற்றுக் கழித்துப் பேசினான்:

''தவறு பழையதுதான் என்றாலும், அவளுடன் நான் வாழ்ந்து பழகி விட்டேன். அவளைத் தேடிப்பிடித்து அவளுடன் நான் வாழவே விரும்புகிறேன். அவள் என்ன நிபந்தனை போட்டாலும் சரி...''

''இதையெல்லாம் என்னிடம் ஏன் சொல்கிறாய்? இப்போது இது எனக்குச் சம்பந்தமில்லாத விஷயம்!''

''அவசரப்பட்டு நீ எந்த முடிவுக்கும் இப்போது வந்துவிடாதே நாராயணா. உன்னை விட்டால் எனக்கு வேறு யாரும் உதவ ஆள் இல்லை. அவள் இந்த ஊருக்குத்தான் வந்திருக்கிறாள். அவசியம் உன்னிடம் வருவாள்.''

நான் திடுக்கிட்டேன். என்னை விட்டுப் போனவள் என்னிடம் திரும்ப வேண்டிய அவசியம் என்ன?

''இதோ பார் சேது... நான் இப்போது நடத்திக் கொண்டிருப்பது புதிய வாழ்க்கை. நிம்மதியான வாழ்க்கை. அடைந்திருப்பது குடும்பப்பாங்கான மனைவி. பழைய வாசனை எனக்கு வேண்டாம்...''

''நான் வரவில்லையப்பா...! அவளல்லவா வந்திருக்கிறாள்? அவளை ராணியைப் போல் வைத்திருந்தேன். அவளுக்குத் திருப்தி இல்லை. ஆனால் அவளால் நான் பட்ட தொல்லைகள்... இருப்பினும் நான் அவளுடன்தான் வாழ விரும்புகிறேன். அவளோ உன் வீட்டுக்கு வந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வேலைக்காரியாக இருக்க விரும்புகிறாள்....''

நான் சிரித்துவிட்டேன். வேஷம் போடுகிறானா வேஷம்?



''டில்லியிலிருந்து சென்னை வருவதற்குள் ஏகப்பட்ட ஸ்டேஷன்களில் இறங்கி ஏறி வரும்படியாகி விட்டது.''

''அடடா ஏன் அப்படி?''

''நூறு கிலோ மீட்டருக்குள் உள்ள தூரத்திற்குப் பிரயாணக் கட்டண உயர்வு கிடையாது அல்லவா!''



''இதைப் போல் நான் பல கதைகள் எழுதியிருக்கிறேன். அந்த முடிவுகளை வாழ்க்கையில் அமுலாக்கிப் பார்க்க விரும்பவில்லை. அவனுடன் வாழ்க்கை நடத்துவதோ இல்லை நடத்தாமல் இருப்பதோ உன் பாடு. நடுவில் நான் வரவேண்டாம்'' என்று போனை வைக்கப் போனேன். அவன் தொடர்ந்தான்... ''ஒரு முக்கியமான விஷயம்...அப்போது கூட நானாக அவளை அங்கிருந்து அழைத்துக் கொண்டு போகவில்லை. அவள்தான் என்னை வற்புறுத்தினாள். இப்போதும் அவளாகவே இந்த ஊருக்கு வந்திருக்கிறாள்...''

நான் பதில் சொல்ல விரும்பவில்லை. போனை வைத்தேன்.

கதை கேட்பதற்கு மிகவும் சுவையாக இருந்தது.

காதலித்துத்தான் பரிமளாவை மணந்தேன். ராணி போல இருந்தாள். இருப்பினும் என் உயிர் நண்பனை இழுத்துக் கொண்டு போய்விட்டாள். ஒழுக்கம் கெட்டவளைத் தேடாமல் விட்டு விட்டு மனத்தை மட்டும் தேற்றிக் கொண்டேன்.

திரும்ப அழைத்துக் கொண்டு வந்து வைத்தால் மட்டும் ஒழுங்காக இருக்கப் போகிறாளா?

மறந்துவிட்டேன். பெண்தான் உலகமா? அவளால் நான் அடைந்த கேவலம்... சே! அதை விவரிக்க முடியாது.

ஒருமாறுதல் வேண்டித் தேவகியை மணந்து கொண்டு நிம்மதியாக இருக்கிறேன். இப்போது பரிமளாவின் பிரவேசம் தேவை இல்லாத ஒன்று!

• • •

தேவகி டிபன் சாப்பிட அழைத்தாள். ஸ்டுடியோவில் நிறைய வேலை இருக்கிறது. சாப்பிட்டுவிட்டு கிளம்பினேன். சாப்பிட்டது வாய்க்கு ருசிக்கவில்லை.

போன் விஷயத்தை நான் தேவகியிடம் சொல்லவில்லை. சொன்னால் அவள் வருத்தப்படுவாள்.

ஸ்டுடியோவுக்குப் போனவுடன் நான் படப்பிடிப்பில் மூழ்கிவிட்டால் எல்லா விஷயமும் எனக்கு மறந்துவிடும்.



பகிரங்க ரகசியம்!

பட்ஜெட் வருகிறது பட்ஜெட் வருகிறது என்று வியாபாரிகள் ஒரு மாதத்திற்கு முன்பே அத்தியா வசியப் பண்டங்களைப் பதுக்கி விடுகிறார்கள். மக்களோ பட்ஜெட்டுக்கும் பயந்து ரேடியோ, மின்விசிறி, டி.வி. முதலியவற்றை பட்ஜெட்டுக்கு முன்பே வாங்கிவிடத் துடிக்கிறார்கள். இத்தனையும் எதனால்? பிரிட்டனைப் போல் நாமும் பட்ஜெட் வெளியிடுவதை ரொம்பவும் ரகசியமாக வைத்திருப்பதுதான் காரணம்.

பெரும்பாலான நாடுகளில் அரசாங்கம் என்னென்ன வரியைப் போடப் போகிறது என்று முன்னதாகவே அறிவித்து விடுகிறார்கள். உதாரணமாக பின்லாந்து நாட்டில் செப்டம்பர் மாதத்தில் வெளிவரப் போகும் பட்ஜெட் குறித்து இப்பொழுது முதலே விவாதித்து வருகிறார்கள்!

-பாலிவாலா உரையில் கேட்டவர்

- என். எஸ். மூர்த்தி

ஆனால் ஞாபகப்படுத்த அவன் ஸ்டுடியோவுக்கே வந்துவிட்டான்.... சேதுவைத்தான் சொல்கிறேன்! முன்னைவிட மெலிந்து காணப்பட்டான்.

எனக்கு ஆத்திரம் வந்தது. அடக்கிக் கொண்டேன். இவனைக் கோபித்து என்ன பயன்?

''இங்கே ஏன் வந்தாய்? நான் நிம்மதியாக இருப்பது உனக்குப் பிடிக்கவில்லையா?''

எரிந்து விழுந்தேன். 'அவளை' நினைத்துக் கொண்டு கேட்ட கேள்வி இது!

அவன் புன்னகை பூத்தான். எதிர்த்துப் பேசினால் அவன் வேலை நடக்குமா?

''உன் பழைய வீட்டில்தான் பரிமளா வந்து இறங்கியிருக்கிறாள். நீ கொஞ்சம் என்னுடன் வந்து அவளுக்குப் புத்தி சொன்னால் தேவலை...'' அவன் கேட்டான்.

''நான் அங்கே வரவேண்டிய அவசியம் இல்லை!''

''அவள் உன் வீட்டுக்கு வந்து உன் நிம்மதியைக் கெடுப்பதற்கு முன்... அவளை, நீ, சந்தித்துப் பேசி என்னுடன் அனுப்பிவிடுவது நல்லது...''

சில நிமிடங்கள் யோசனை. இதனால் வரும் விபரீதங்கள்... அடங்கி இருக்கும் புழுதிக் காற்று திரும்பவும் வீச ஆரம்பித்து விட்டால்?

தேவகியின் மனமும் கெட்டுவிட்டால்... என் மனமும் கெட்டு... வாழ்க்கை தடம் புரண்டு விடுமே... பரிமளாவை இந்த ஊரிலிருந்து அனுப்பிவிடத்தான் வேண்டும். அதைத் தவிர வேறு நல்ல யோசனை என் மனத்தில் அப்போது எழவில்லை. அவனுடன் கிளம்பினேன்.

என் பழைய வீடு மிகப்பழையது என்றாலும் சற்று ஒதுக்குப்புறமாக இருந்தது. அந்த வீடு அவள் பெயருக்குப் பின்னால் மாற்றப்பட்டு விட்டது. சகல சௌகரியங்களும் நிறைந்தது.

அதை அவள் வாடகைக்கு விடவும் இல்லை. விற்கவும் இல்லை. அவள் என்னை விட்டுப் போனவுடன் நான் வேறு வீட்டுக்குப் போய் விட்டேன்.

வீடுகள் அதிகமில்லாத வீதி. சந்தடி இல்லை. வீட்டின் கதவு தாளிடப்பட்டு இருக்கவில்லை. சேதுராமன் கைவைத்தவுடன் கதவு திறந்து கொண்டது.

''பரிமளா...!பரிமளா...!'' என்று அவன் கூப்பிட்ட குரலுக்குப் பதில் இல்லை.

''கதவைத் திறந்து வைத்துக் கொண்டு தூங்குகிறாளா?'' என்று கேட்டுக்கொண்டே சேதுராமன் உள்ளே போனான்.

என் கால்கள் உள்ளே போக மறுத்தன. அவளிடம் எனக்கென்ன வேலை?

உள்ளே போன சேதுராமன், அடுத்த விநாடி, ''ஐயோ பரிமளா!'' என்று கூச்சல் போட்டதை அடுத்து நான் தயங்கியவாறு உள்ளே நுழைந்தேன். பரிமளா படுக்கையின் குறுக்கே கிடந்தாள். அவளது கழுத்தில் ஒரு துண்டு சுற்றப்பட்டு இருந்தது.

சுலபமான வழியில் அவளைக் கொன்றிருக்கிறார்கள். கண்கள் திறந்தபடியே முகட்டைப் பார்த்துக் கொண்டிருந்தன!

அன்று எப்படி இருந்தாளோ அப்படியே தான் இன்னமும் இருந்தாள். நகைகள் அப்படியே இருந்தன. கொலைக்குக் காரணம் திருட்டல்ல!

''பரிமளா... என்னை மோசம் செய்து விட்டாயே...'' என்று சேதுராமன் அவள் மீது விழுந்து கதறினான். நான் அறையைச் சுற்றிலும் கண்களை ஓட்டினேன். எல்லாமே அப்படியே இருந்தன. மனத்தில் சந்தேகம் முளைத்தது.

''சேதுராமா... நீயே அவளைக் கொன்று விட்டு, என்னை இங்கே அழைத்து வந்து நாடகமாடுகிறாயா?'' என்று கோபத்தோடு கேட்டேன்.

''இல்லை...இல்லை'' என்றான் அழுதபடி. தலை பலமாக ஆடியது. கண்கள் நீரைக் கொட்டின. அவனுக்கு இப்படி நடிக்கத் தெரியாதே....!

''இல்லை என்பதற்கு என்ன அத்தாட்சி? கொலையையும் செய்துவிட்டு இப்போதுதான் முதன் முதலாக அவளைப் பார்க்க வருபவன் போல் என்னுடன் வருகிறாய்...''

''இல்லை என்கிறேனே...அவளுடன் வாழ விரும்பும் நான் அவளைக் கொலை செய்வேனா?''

அழுகை நிற்கவில்லை.

நான் அவனை நம்பலாம்... மற்றவர்கள் நம்ப வேண்டுமே!

போலீசுக்குப் போன் செய்தேன்.

சேதுராமன் அதைத் தடுக்கவில்லை.

ஏன்?

அவன் கொலைகாரன் இல்லையா?

இவன் இல்லை யென்றால் வேறு யார்?

என்னை விட்டுப் போனவர்கள், என்னிடமே திரும்பி வந்து தொல்லை கொடுக்க வேண்டிய அவசியம் என்ன?

நல்ல வேளை... அவன் இறந்துவிட்டான். இல்லையென்றால் எனக்கு எவ்வளவு தொல்லை? என் அமைதி கெட்டிருக்கும்!

என்னுடன் இன்பமாக வாழ வேண்டியவள்... இப்போது பிணமாகக் கிடக்கிறாள்.

போலீசார் வரும்வரை என் மனம் அலை பாய்ந்து கொண்டிருந்தது.

எனக்குப் பதில் அவன் அழுகிறான்.

இந்த ஊரில் பரிமளாவை யார் கொன்றிருக்கக் கூடும்? கழுத்தில் துணியை இறுக்கியவர்கள் எந்தப் பக்கம் வந்தார்கள்?

அவளது வலது கை விரல்கள் மட்டும் சற்று மடங்கியவாறு இருந்தன. கை விரல்களில் இருந்த நகங்களின் உதவியால் தன்னைத் தாக்க வந்தவர்களைப் பிராண்ட முயற்சி செய்தது போல!

தற்காப்புக்கு இவள் ஏதாவது செய்திருக்க வேண்டுமே!

நான் விரிவான ஆராய்ச்சியில் இறங்க விரும்பவில்லை. என்னை ஏன் இதில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்? தொடர்பு விட்டுத்தான் எவ்வளவோ நாட்கள் ஆகிவிட்டனவே!

சேதுராமன் அழைக்கவில்லையென்றால் நான் இதில் சம்பந்தப்படாதவன்.

போலீசார் உடனே வந்துவிட்டார்கள்.

என்னைப் பொறுத்தவரை நடந்ததைச் சொன்னேன். குறித்துக் கொண்டார்கள். என்னை அங்கிருந்து போகவும் அனுமதித்து விட்டார்கள்.

சேதுராமன் அவர்களுக்குப் பதில் சொல்லிக்கொள்ளட்டும். புதிதாக எதையும் சொல்லி என்னை இதில் சம்பந்தப்படுத்த முடியாது.... நிம்மதியாக வீட்டுக்கு வந்தேன்.

இனிமேல் ஸ்டுடியோவுக்குப் போய் என்ன செய்யப் போகிறேன்... நானே போனால் போகிறது....

● ● ●

வீட்டில் தேவகி அப்போதுதான் குளித்துவிட்டு வந்தது போல உடைகளை மாற்றிக் கொண்டிருந்தாள். அவளிடம் பரிமளாவைப் பற்றிச் சொல்லலாமா வேண்டாமா என்று ஒரு விநாடி யோசித்தேன். வேண்டாம் என்கிற முடிவுதான் என் மனத்தில் நிலைத்தது.

நான் அவளைப் பார்த்தபோது அவள் எனக்குத் தன் முதுகைக் காட்டிக் கொண்டு ரவிக்கைக்குப் பொத்தான்கள் போட்டுக் கொண்டிருந்தாள். அவளை அப்படியே ரசித்துக் கொண்டிருந்தேன். கண்கள் ஓரிடத்தில் நிலைத்தன....

அவளது இடது பக்கக் கழுத்தில் அழுத்தமாகப் பிறாண்டினாற்போல் நான்கு சிவந்த வரிகள்....!

எனக்குப் புரிந்தது... உங்களுக்கும் புரிந்திருக்க வேண்டுமே!



நட்சத்திர வடிவம்
பரிசுத்திட்டம்-7

ஸ்ரீபிரியாவின் முழு உருவத்தையும் சரியானபடி ஒட்டி அனுப்பியவர் ஒருவர் மட்டுமே.

சா. நளினி, 10-ஆம் வகுப்பு, கொமரப்ப செங்குந்தர் மகளிர் உயர்நிலைப்பள்ளி, சென்னிமலை, பெருந்துறை வட்டம், பெரியார் மாவட்டம்.

மிஞ்சும் தொகை ரூ 225.

ஜாக்பாட்டுக்கு (11வது போட்டி) சேர்ந்துள்ள மொத்தத் தொகை ரூ. 1300.

ஜாக்பாட்டுக்குச் சேர்ந்துள்ள புகைப்படங்கள் 52

புகைப்படம்: ஏ. சுந்தரம்

போட்டி முடிவு


சிறு தொகையைப் போட்டால்தான்
பெரிய பரிசு பெறலாம்.
சின்ன மீனைப்
போட்டால்தான
பெரிய மீனைப்
பிடிக்கலாம்...
விலையோ 1 ரூபாய்
பெறுவதோ 50,000 ரூபாய்!
வென்றிடுவீர் இரண்டு முதற் பரிசுகள்
ரூ. 50,000
மற்றும் ஆயிரக்கணக்கான
பரிசுகள்.
பரிசுச் சீட்டின் விலை: ரூ. 1.
குலுக்கல் நாள்: 19-7-80
இயக்குநர்,
தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம்
அரசினர் தோட்டம், சென்னை-600 002.

தியாகையர் அருளிய தத்துவத் துளிகள்



★ ஏ மனமே! நமது சாமர்த்தியம் என்று மார்தட்ட வேண்டாம். அது எம்மாத்திரம்? அயோத்தி அதிபன் ஸ்ரீராமன் பிரபஞ்சம் எனும் தேரில் ஏறி அமர்ந்து தன் சாமர்த்தியத்தால் அனைத்து உலகங்களையும் தானே சாரத்தியம் செய்கிறான். இதை நீ அறிவாயாக!

★ மனத்தை இறைவான்பால் நிலைநிறுத்தி தியானம் செய்வதே சிறந்த பூஜை ஆகும். அதை விடுத்து அங்கும் இங்கும் மனத்தை அலைய விட்டு விட்டு இனிய மணியோசையுடன் கூடிய பூமலர்களினால் செய்யும் பூஜையினால் என்ன பயன்?

★ பஞ்சேந்திரியங்களையும் வென்றவன் ஆனாலும் சிறந்த வேதாந்தியானாலும் சாந்தம் எனப்படும் ஸத்வகுணம் இல்லாவிட்டால் மன அமைதி உண்டாவது இல்லை.

★ கருமையான காமம், குரோதம் எனப்படும் பகைவர்கள் நிரம்பிய இதயத்தில் உள்ள மனப் பிணிகளாகிய காட்டினை அழிக்கப் படிப்பும் அறிவும் போதுமா? ஆண்டவன் துணையின்றி அவற்றை ஒழிப்பது சாத்தியமில்லை.

★ வெண்ணெயுடன் கூடிய பால் இருக்கும் போது சீ! என்று வெறுக்கப்படும் கள் எதற்கு? ராம பக்தி எனும் அழகான ராஜ மார்க்கம் இருக்கும்போது ஐம்புலன்கள் என்னும் சந்துகள் வழியாக மனத்தை ஓட விடுவதில் என்ன பயன்?

★ தான் கடைப்பிடிக்காமல் பிறரை பஜனை செய்யும்படி கூறும் பொய்யான பக்தர்கள் உன் மகிமையை அறிய மாட்டார்கள். உன்னைப் பற்றிய உண்மையை அவர்களால் கூற இயலாது. அப்படிக் கூற ஆரம்பித்தால் யானையை ஆடாகவும் சிங்கத்தை நரியாகவும் வர்ணிப்பது போல்தான் சொல்வார்கள்.

★ உயர்ந்ததான சங்கீத ஞானம் இருந்தும் பக்தி யில்லாமல் உபாசிக்கப்பட்டால் நல்ல மார்க்கம் கிடைக்காது.

★ உயர்ந்ததான ஸங்கீத சாத்திரம் (நாதோ பாசனை) அதன் தத்துவார்த்தங்களை அறிந்தவனுக்கு சாரூப்யம் எனும் உயர்ந்ததான மோக்ஷ பதவியையும் புவியில் சகல சௌக்கியங்களையும் அளிக்கும்.

★ மனத்தைத் தன் வசப்படுத்தியவனுக்கு அணிமாதி சித்திகளும் மந்த்ரங்கள் முதலானவையும் தேவையில்லை.

★ உலகிலேயே சிறந்ததான ''ராம'' நாமம் சிறந்ததான மந்த்ரம் ஆகும். இது நம்மை மானுடம் முதலான எல்லா ஜன்மங்களிலிருந்தும் காப்பாற்றும். ஆகையால் இதனை ஜபிப்பதற்குத் தாமதம் செய்ய வேண்டாம்.

தொகுப்பு: **பி. கே. சுந்தரராஜன்**

1857ம் ஆண்டில் நடந்த சிப்பாய் கலகத்தின் முடிவுகளை ஆராய்ந்த பிறகுதான் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியர்களையும் ஐ. ஸி. எஸ். பரீட்சை எழுத அனுமதிக்கலாம் என்று முடிவு செய்தது. இந்த முடிவை ஒட்டி 1864ம் ஆண்டில் ஐ. ஸி. எஸ். தேர்வில் வெற்றி பெற்ற முதல் இந்தியர் சத்யேந்திர நாத்தாகூர். இவர் கவிஞர் ரவீந்திர நாத்தாகூரின் மூத்த சகோதரர்.

சத்யேந்திரநாத் தாகூரைத் தொடர்ந்து அடுத்த பதினைந்து ஆண்டுகளில் இந்த ஐ. ஸி. எஸ். தேர்வில் வெற்றி பெற்ற இந்தியர்கள் பதினைந்தே நபர்கள்தான். அவர்களில் எட்டுப்பேர் வங்காளத்தைச் சேர்ந்தவர்கள்.

காலம் சென்ற தேசபந்து சி. ஆர். தாஸ் இந்தப் பரீட்சை எழுதினார். தேர்வுக்குத் தேவையான மார்க்குகள் பெறவில்லை.


சுபாஷ் சந்திரபோஸ் பரீட்சையில் வெற்றி பெற்றார். ஆனால் பயிற்சி காலத்தில் ராஜினாமா செய்துவிட்டார்.

அரவிந்தர் பரீட்சையில் வெற்றி பெற்றும் குதிரை ஏற்றப் பயிற்சியில் கோட்டைவிட்டு ஒதுக்கப்பட்டார்.

இந்திய அரசில் ஐ. ஸி. எஸ். வர்க்கத்தின் கடைசிப் பிரதிநிதியாக இருந்த என். கே. முகர்ஜி சமீபத்தில் ஓய்வு பெற்றார்.

ஐ. ஸி. எஸ். சகாப்தம் முடிந்துவிட்டது. -(நியூடில்லி) மோனு





கடலும், சாக்கடையும் நீர்த்தேக்கங்களே!

கண்ணதாசன்

இமயமலையைப் பார்த்தேன்; 'அடடா! எவ்வளவு பெரிய சிருஷ்டி!' என்று பிரமித்தேன். கம்பனின் காவியத்தைப் படித்தேன்; 'ஆகா! எவ்வளவு மகத்தான படைப்பு!' என்று பிரமித்தேன். பாரதி கவிதைகளைப் படித்தேன்; 'இத்தனை சின்ன வயதுக்குள் எத்தனை அற்புதம்' என்று பிரமித்தேன். காந்திஜியின் போராட்ட முறைகளைப் படித்தேன்; 'எவ்வளவு தன்னம்பிக்கை' என்று பிரமித்தேன்.

எனக்குத் தோன்றியது இதுதான்: மனிதப் பிறவிக்கோர் இலட்சியம் உண்டென்றால் அது பிரமிக்கத் தக்க வாழ்க்கை வாழ்வதே.

'செய்தால் அவன் செய்ய வேண்டும்' என்பார்கள்; 'இதற்கு இவன்தான்' என்பார்கள்; 'இவனை விட்டால் ஆள் கிடையாது' என்பார்கள்; 'இன்னொருவன் பிறக்கப் போகிறானா' என்பார்கள். 'இவன் ஒரு சகாப்தம்' என்பார்கள்; அவனை ஒரு எல்லைக் கல்லாகக் கட்டிக் காட்டுவார்கள்.

இன்னொரு காந்தி இன்னும் பிறக்கவில்லை. இன்னொரு கம்பன் இன்னும் தோன்றவில்லை; இன்னொரு இமய மலை இனியா உற்பத்தியாகப் போகிறது?

வியப்புக்குரியவன் கடந்த காலம், எதிர் காலம், நிகழ் காலம் மூன்றையும் நிர்ணயிக்கிறான்.

இமயமலை உள்ள நாட்டிலே பாறைக்கற்களும் கிடக்கலாம்; ஆனால் பாறைகள் இமய மலையாகாது.

கப்பல் ஓடுகிற கடலில் கட்டு மரமும் ஓடலாம்; ஆனால் கடலோடும் பிரயாணி கட்டுமரத்தை நம்பமாட்டான்.

மகா மனிதர்களுக்கிடையிலே சிறியவர்களும் பெரியவர்கள் போல் தோற்றமளிக்கலாம்; ஆனால் சிறுமைக்கோர் எல்லை, பெருமைக்கோர் எல்லை என்று வரையறை இருக்கிறது.

வேடிக்கை 'என்னவென்றால், இமயமலை பாறைகளைக் கேலி செய்வதில்லை; பாறைகள் இமயமலையை விமரிசனம் செய்கிறது.

'நிறைகுடம் ததும்பாது' என்பார்கள். 'சலனமில்லாத இடத்தில் ஆழம் அதிகம்' என்பார்கள். கரையோரம் இருக்கும் அலை நடுக்கடலில் இல்லையே!

பறக்கும்போது டகோடா விமானம் படபடவென்று அடித்துக் கொள்கிறது; போயிங் விமானம் பல்லக்குப் போலச் செல்லுகிறதே!

ஆற்றலில் பெரிதானது அலட்டிக் கொள்ளாது.

பேரன் குதித்து விளையாடும் குளத்தில் தாத்தா மெதுவாகத்தான் இறங்குவார். பேரன் அடிபட்டுப் பல்லுடைவான்; தாத்தா அசையாமல் கரையேறுவார்.

அரசியலில் பார்க்கிறேன், கலையுலகிலும் பார்க்கிறேன். 'இந்தியாவில் தகுதியே தேவையில்லாத இரண்டு துறைகள்' என்று கூறியிருக்கிறேன். இரண்டிலுமே கரைக் குடுக்கைகள் ஆட்டம் போடுகின்றன; பெரியவர்கள் அமைதியாக இருக்கிறார்கள்.

தகுதி இல்லாமல் பதவிக்கு வந்தவன், அரசியலே தன் கைவசம் என்று கருதுகிறான். தகுதியில்லாமல் கலை உலகுக்கு வந்தவன், தானே இனி என்று ஆட்டம் போடுகிறான்.

அவன் தேர்தலில் அடி வாங்குகிறான்; இவன் அரங்கிலே அடி வாங்குகிறான்.

மாமரத்துக்கு அடியிலே முளைத்திருக்கிற புல், காற்றில் விழுந்த மாங்காயைத் தான் ஈன்ற காய் என்று கருதிக் கொள்ளுமாம்.

காக்கை உட்கார்ந்தவுடன் கைகாட்டி இறங்கிற்றும். 'அடடா! கை காட்டியையே அசைத்து விட்டேன்' என்று காக்கை பெருமைப்பட்டதாம்! கைகாட்டியை இறக்கிய பாயிண்ட்ஸ்மேன் காக்கையைப் பார்க்க வில்லையாம்!

திருப்பதி நாயகனுக்குப் பெருத்த வருமானம் வருகிறதே என்று தெருக்கோடிப் பிள்ளையார் அலைமோதும் நிலையே, அரசியலின் நிலை.

அது சரி! நான் சொல்லும் பெரியவன் யார், சிறியவன் யார்?

எவனைக் கண்டு உலகம் பிரமிக்கிறதோ, அவன் பெரியவன்; எவன் தன்னைக் கண்டு தானே பிரமிக்கிறானோ, அவன் சிறியவன்.

அதுவும் சரி, இதில் நீங்கள் யார் என்று கேட்கிறீர்களா?


இதற்கு உலகம்தான் பதில் சொல்லியாக வேண்டும்.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. Editor: K. Rajendran



FDS APDDC3071A TAM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 90 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப்பதிப்பு) 75 மலேசியக் காசு



"இப்போது நாங்கள் வாழ்வின் இரு நலன்களை அடைந்துவிட்டோம்–ஆனால் இதில் இரண்டாவதை வைத்துக்கொண்டு என்ன செய்வது என்றுதான் புரியவில்லை"

—என்கிறார், நூலகர் திருமதி பாஷா, *ஹைதராபாத் கிளையின் வாடிக்கையாளர்.

இந்தியன் பாங்கின் ரீ இன்வெஸ்ட்மெண்ட் திட்டத்தின் மூலம், நீங்களும் எப்படி திருமதி பாஷாவைப்போல் செல்வச் செழுமை அடையலாம் என்பதை விளக்கும் ஓர் உண்மை நிகழ்ச்சி.

"எங்களுக்கு திருமணமான புதிதில், சங்கீதப் பிரியர்களான நாங்கள் இருவரும் ஒரு ஸ்டீரியோ செட்டை வாங்க வேண்டும் என்று விரும்பினோம். ஆகவே, எங்களுக்கு திருமணப் பரிசாக வந்த பணத்தை ஒரு விசேஷ சேமிப்புத் திட்டத்தில் ஐந்தாண்டுக் காலத்திற்கு முதலீடு செய்தோம். அதற்கு அடுத்த வருடம், இவருக்கு கம்பெனியில் கிடைத்த கணிசமான வருமானத் தொகையை, அதே சேமிப்புத் திட்டத்தில் பத்தாண்டுக் காலத்திற்கு முதலீடு செய்தோம். ஐந்தாண்டுக் கால முதலீட்டுத் திட்டம் முழுமை அடைந்தபோது, நாங்கள் ஸ்டீரியோ செட்டை வாங்கினோம். போன வருடம், எங்கள் பத்தாண்டுக்கால முதலீட்டுத் திட்டம் முழுமை அடைந்தபோது ஒரு உபயோகிக்கப்பட்ட காரை வாங்கினோம். ஆகவே, இப்போது நாங்கள் வாழ்வின் இரு விருப்பங்களை அடைந்திருக்கிறோம். ஆனால், இதில் இரண்டாவதான, எங்கள் காரை வைத்துக்கொண்டு என்ன செய்வது என்று புரியவில்லை—பெட்ரோலின் விலை இப்படி ஏறிப்போயிருக்கும் இந்தக் காலத்தில்."

திருமதி பாஷாவின் அனுபவத்தினால் பயனடையுங்கள்.

திருமதி பாஷாவைப்போல் முனைந்து முயற்சி எடுங்கள். உங்கள் அருகாமையில் இருக்கும் இந்தியன் பாங்க் கிளை அலுவலகத்தின் மானேஜரை சந்தியுங்கள். அவர் உங்களுக்கு ஆலோசனை சொல்ல மிகவும் தகுதி உள்ளவர்.

* அந்தரங்கத்தை உத்தேசித்து, சம்பந்தப்பட்டவர்களின் உண்மைப் பெயர்கள், மற்ற குறிப்புகள் மாற்றப்பட்டுள்ளன.

இந்தியன் பாங்க்
(இந்திய அரசு நிறுவனம்)

உங்கள் செல்வச் செழுமைக்கு உதவும் வங்கி

SAA/IB/7/5